REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒக்டோபர் 8 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN තිනකරන්

வரு. 92 இல. 240 | Tuesday 08, October, 2024 | 20 பக்கங்கள் | 50/-




கட்டணம் செலுத்தப்பட்டு பிரசுரிக்கப்படும் விளம்பரமாகும்



2

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 8 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
ளுஹர் - 12.00
அஸர் - 03.16
மஃரிப் - 05.59
இஷா - 07.09

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் புரட்டாதி 22
ராகுகாலம் : மாலை : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.33 - 4.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் உதவத் தயார்



இலங்கையின் சுற்றுலா,வலுசக்தி மற்றும் சிறு தொழில்துறைகளின் அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்குவதற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளது. ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டகபூமி கடோனோவுக்குமிடையில் நேற்று விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் நேற்றைய தினம் முற்பகல் இந்த சந்திப்பு நடைபெற்றது.இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதுவரை முன்னெடுக்கப்பட்டுவரும் அனைத்து ஒப்பந்தங்களும் மாற்றமின்றி தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இதன்போது தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இலங்கையின் பொருளாதார முன்னேற்றம், சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு அவசியமான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

சுற்றுலாத்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதி உதவிகளை வழங்கவும் உறுதியளித்துள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வேண்டுகோளுக்கிணங்க வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இந்த சந்திப்பின் போது இணக்கம் தெரிவித்தார்.

அதேபோன்று இலங்கையில் வலுசக்தி மற்றும் சிறு தொழில் முயற்சிகளை மேம்படுத்த தேவையான நிதி உதவிகளை வழங்கவும், நிதித் துறையின் முன்னேற்றத்துக்கு தேவையான உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான முன்னெடுப்புக்களின் பிரதானி சொல்பொத் மெம்பேடோவா நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பணிப்பாளர் நாயகம் டீ.ஏ.பி. அபேசேகர, பணிப்பாளர் உதேனி உடுகஹபத்துவ, சிரேஷ்ட பொருளாதார அதிகாரிகளான ஹஷிதா விக்ரமசிங்க, லக்ஷினி பெர்னாண்டோ ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.

# குற்ற புலனாய்வு திணைக்கள பணிப்பாளராக இமேஷா முத்துமால

## பொலிஸ் வரலாற்றில் பெண் ஒருவர் நியமனம்



நாட்டின் பொலிஸ் வரலாற்றில் முதல் தடவையாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு,பெண் அதிகாரி ஒருவரை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால இந்தப் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளார்.

இலங்கைப் பொலிஸ் வரலாற்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட உள்ள முதலாவது பெண் அதிகாரியும் இவர் ஆவார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால, பொலிஸ் வரலாற்றில் சரித்திரம் படைக்கும் பெண் கதாபாத்திரமாக பார்க்கப்படுகிறார். பொலிஸ் வரலாற்றில் முதல் மூன்று பயிற்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர்களில், இமேஷா முத்துமாலயும் ஒருவராக உள்ளடங்குகிறார்.

இவர், 2007 நவம்பர் (03) பயிற்சி உதவி பொலிஸ் அத்தியட்சகராக பணியில் சேர்ந்தார். பின்னர்,2017 மார்ச் 23 இல்,பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றார்.

ருஹுணு பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றவர் இவர்.திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டப் பட்டப்படிப்பையும் நிறைவு செய்துள்ளார்.

2021ஆம் ஆண்டு ஜூனில் குற்றப் புலனாய்வுத் துறையின் பிரதிப் பணிப்பாளராக இவர் நியமிக்கப் பட்டார்.

# செயற்கைக்கோள் திட்டத்தை அமுலாக்க இந்தியாவுடன் ஒப்பந்தம்

## யாழ்,தனியார் பல்கலைக்கழக மாணவர்கள் முயற்சி



செயற்கை கோள் திட்டத்தை தொடங்கும் நோக்குடன் யாழ்ப்பாண நொதேர்ன் யுனி (Northern Uni) மாணவர்கள் தலைமையிலான குழுவினர், இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், இந்திய மாணவர்கள் ஒன்றிணைந்து, செயற்கைக்கோளை வடிவமைத்து விண்ணில் செலுத்தவுள்ளனர்.

விண்வெளியை ஆய்வு செய்யும் கருவிகளை இந்த செயற்கைக்கோள் சுமந்து செல்லும். குறித்த திட்டமானது இரண்டு கட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்துகிறது. நாட்டிலிருந்து 50 பாடசாலை மாணவர்களும் 50 பல்கலைக்கழக மாணவர்களும் இந்தியாவிலிருந்து 10 பாடசாலை மாணவர்களும் இத்திட்டத்தில் பயிற்சி பெறவுள்ளனர். இத்திட்டமானது, பங்கேற்பாளர்களுக்கு செயற்கைக் கோள் மேம்பாடு மற்றும் விண்வெளிப் பயணங்கள் பற்றிய அடிப்படை புரிதலை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# சசிகலா ரவிராஜ் சங்கு சின்னத்தில் போட்டி

## வேட்புமனுவில் நேற்று கைச்சாத்து



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ், பாராளுமன்ற தேர்தலில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பில் சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளார்.

இத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் நேற்றைய தினம் திங்கட்கிழமை (07) சசிகலா ரவிராஜ் கையொப்பமிட்டார். இவர் கடந்த பாராளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சியில் போட்டியிட்ட நிலையில், இம்முறை அக்கட்சி அவருக்கு ஆசனம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்ட சின்னங்கள் வர்த்தமானியில் வெளியீடு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சின்னங்களை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.தேர்தல்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மேற்படி வர்த்தமானியில், இதுவரை அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படாத சின்னங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

06

# சஜித்தை பிரதமராக்கி, புதிய ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட ஐ.ம.ச தயார்

## முன்னாள் எம்.பி அஜித் மான்னப்பெரும

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

பெரும்பான்மை ஆதரவுடன் சஜித் பிரேமதாசவை பிரதமராக்கி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு தயாரென, ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

அதேபோன்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க திருடர்களையும் மோசடிக்காரர்களையும் பிடிப்பதற்கும் வெளிநாடுகளில் அவர்கள், பதுக்கி வைத்துள்ள நிதியை மீளப் பெற நடவடிக்கை எடுப்பாரானால் இரண்டு கைகளையும் உயர்த்தி நிபந்தனையின்றி அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தமது கட்சி தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டின் பெரும்பான்மையைப் பெறாத ஜனாதிபதி என்பதால், எதிர்க்கட்சி அவருடன் இணைந்து எதிர்காலத்தில் அரசாங்கத்தை அமைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய சூழலில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம் என்பதை தெரிவித்துள்ள அவர், ஊழல் மோசடிகளில் அகப்பட்டுள்ளவர்களை ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலில் உள்வாங்கப் போவதில்லை என்ற தீர்மானத்தை தமது கட்சி எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# கட்சியிலிருந்து விலக்கப்பட்டோர், இருபதுக்கு ஆதரவளித்தோர் உள்ள அணியில் சேரமாட்டோம்

## அம்பாறையில் இழுபறி நிலவ இதுவே காரணம்



கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் மற்றும் இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்கள் உள்ள கூட்டணியில் இணையப்போவதில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் மன்னார் மாந்தை பிரசேத்தில் நடந்தது.

இக்கூட்டத்தில் ஊடகவியலாளர்கள், எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ரிஷாட்பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

கிண்ணியாவைச் சேர்ந்த கட்சியின் தவிசாளர் ஒருவர்,கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும் இவ்வாறு பலர் உங்களது கட்சியிலிருந்து விலகிச் செல்வதற்கு காரணம் என்ன? எனவும் மற்றும் தனித்தா அல்லது இணைந்தா போட்டியிடுவது எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் தெரிவித்ததாவது:

தவறு செய்தமைக்காக கட்சியிலிருந்து விலக்கப்பட்ட சிலர், இன்று தாமாகவே கட்சியிலிருந்து வெளியேறியதாக கூறித் திரிகின்றனர். தவறு செய்தவர்கள் உடனடியாக கட்சியிலிருந்து நீக்கப்படுவர். இவ்வாறு தவறு செய்த மூன்று எம்.பி.க்களை எமது கட்சி நீக்கியுள்ளது. இதுபோலவே, கிண்ணியாவைச் சேர்ந்த ஒருவரையும் நாம், நீக்கியுள்ளோம். இன்று அவர், ரணிலுடன் இணைந்துள்ளார்.

06

# துப்பாக்கிகளை ஒப்படைக்குமாறு முன்னாள் எம்.பி.க்களுக்கு உத்தரவு

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்ட ரிபீட்டர் ரக துப்பாக்கிகளை மீள ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

உயிர் பாதுகாப்புக்காக வழங்கப்படும் அனைத்து வகையான துப்பாக்கிகள், தற்போது அரசாங்கத்தினால் தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக ,எதிர்வரும் நவம்பர் மாதம் (07 ) திகதிக்கு முன்னர் குறித்த துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை அரச வர்த்தக வெடிபொருள் களஞ்சிய சாலையில் ஒப்படைக்குமாறு துப்பாக்கிகளை வைத்திருப்போருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த காலப்பகுதியில் 1,500 பேருக்கு 1,690 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் மட்டுமே இனிமேல், துப்பாக்கிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களை பின்பற்றினால் நாம் எதிர்க்க மாட்டோம்

## ஐதேக தவிசாளர் வஜிர அபேவர்தன

*(லோரன்ஸ் செல்வநாயகம் )*



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டிய வழியில் பயணிப்பதாகவும், அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு அல்ல என்றும் அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தை, தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்துச் செல்லுமானால் அதனை ஐக்கிய தேசிய கட்சி நல்ல நோக்கத்துடன் பார்க்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் அணி கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதையில், பயணிக்குமானால் அதனை நாம் எதிர்க்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை

காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றித் தெரிவித்த தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் கேகாலை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு முதல் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

இந்நிலையில், கொழும்பிலும் நேற்று அதிக மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது. மேலும் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் நேற்று காலை 08.30 முதல் நேற்று காலை 7.00 மணி வரையான காலப்பகுதியில் வல்லாவிடத்தில் 112 மில்லிமீற்றரும் ஹொரணை பிரதேசத்தில் 111 மில்லிமீற்றர் மழையும் பெய்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தரம் ஐந்து புலமைப் பரிசில் வினாத்தாள் கசிவு; கைதானோருக்கு 22 வரை விளக்கமறியல்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்த சம்பவம் தொடர்பில், மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பாடசாலை ஆசிரியர் ஆகியோரை,எதிர்வரும் (22) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்விருவரும் கடுவெல மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று ஆஜராக்கப்பட்டனர்.இதன்போதே,இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.இப்பரீட்சையின் வினாத்தாள்களை வெளியிட்டமை தொடர்பில் மேற்படி இருவருக்கும் எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.விசாரணைகள் முடிவடையும் வரை,பரீட்சை விவகாரம் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டாமென,மனித உரிமைகள் ஆணைக்குழுவானது கல்வியமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்திட ம் கேட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் கடந்த மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவதில்லை என்ற தீர்மானத்தை கல்வியமைச்சு எடுத்துள்ள நிலையில் சர்ச்சைக்குரிய ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டும் என சில பெற்றோர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யாழ்ப்பாணத்தில் வேட்பு மனு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில், அவர்கள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒக்டோபர் 8 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 240 | Tuesday 08, October, 2024 | 20பக்கங்கள் | 50/-




## மறுசீரமைப்பு செயற்பாடுகள்: அரசுக்கு உலக வங்கி 200 மில். டொலர் உதவி

### ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானது



நாட்டின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், உலக வங்கி குழுமத்தின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் மேலும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைசாத்திடும் நிகழ்வு, நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இதற்கான ஒப்பந்தம்

06

2024 பொதுத் தேர்தலுக்கு முன்னதாக

## சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேட்பாளர்களுக்கு விசேட உத்தரவு

### தேர்தல் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கை



எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், குறித்த அறிக்கை நேற்று (07) வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, தேர்தலில் போட்டியிடுவதற்கு பெயர் குறித்த நியமனங்களைக் கையளிக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் தினம் பிரகடனம் செய்யப்பட்ட தினத்தில் தமது சொத்துக்கள் மற்றும்

06

## பொதுமக்களின் புகார்களுக்கு இரு வாரங்களுக்குள் தீர்வு

### சகல பொலிஸ் நிலையங்களுக்கும் IGP பணிப்பு



பொதுமக்களால் முன்வைக்கப்பட்டு நிலுவையில் உள்ள சகல சிறு புகார்களையும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விசாரித்து, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.

சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொது மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள சிறிய முறைப்பாடுகள், எதிர்வரும் இரண்டு வாரங்களில் விசாரணைக்குட்படுத்தப்படும். இதையடுத்து, உரிய நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்றும் பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## இழப்பீட்டுத் தொகையை முழுமையாக செலுத்திய நிலந்த



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் செலுத்த வேண்டியிருந்த எஞ்சிய நட்டஈட்டு தொகையான 65 மில்லியன் ரூபாவை செலுத்தி முடித்திருப்பதாக, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தன உயர் நீதி மன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

நிலந்த ஜயவர்தன அவரது சட்டத்தரணி மூலம் இதனை உயர் நீதி மன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களின் அடிப்படையில், தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடாக 75 மில்லியன் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தனவுக்கு உயர் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

நிலந்த ஜயவர்தன ஏற்கனவே இத்தொகையில்

06

## ரணிலின் பாதுகாப்பு தொடர்பில் தவறான பொய் பிரசாரங்கள்

### 50 STF அதிகாரிகளுடன் வழமையான பாதுகாப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 50 அதிகாரிகள் உட்பட, பாதுகாப்பு தரப்பினர் தொடர்ந்தும் செயற்படவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் கருத்துத் தெரிவித்ததாவது,

06

## ஈஸ்டர் தாக்குதல்: மீண்டும் நவம்பர் 18 இல் விசாரணை

### உச்ச நீதிமன்றம் நேற்று தீர்மானம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய வழக்கை எதிர்வரும் நவம்பர் 18 இல், மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தாக்குதல் பற்றி, ஏற்கனவே புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காதமை குறித்து நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கே நவம்பர் 18 இல், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதற்கான உத்தரவை நேற்று உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது. இந்த வழக்குத் தொடர்பான

06



## தாமரை கோபுரத்திலிருந்து விழுந்த மாணவி உயிரிழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு தாமரைக் கோபுரத்தை பார்வையிட சென்றுள்ள பாடசாலை மாணவி ஒருவர், 29ஆவது தளத்திலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் ரத்ய குணசேகர என்ற 15 வயதுடைய இந்த மாணவி

06



## ரூபவாஹினியில் சமகால அரசியல் கலந்துரையாடல்

### திங்கள் முதல் வெள்ளிவரை மாலை 7.30-8.00 மணி வரை



சமூக, பொருளாதா மற்றும் சமகால அரசியல் குறித்த கலநதுரையடல் நிகழ்ச்சி ரூபவாஹினியில் ஒளிபரப்பாகவுள்ளது. இந்நிகழ்ச்சி திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 7.30-8.00 மணி வரை நேரடியாக ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்று கருத்துக்களைப் பரிமாறவுள்ளனர்.

அர்த்தமுள்ள அரை மணிநேர நிகழ்ச்சியை தொலைக்காட்சி பார்வையாளர்கள் மத்தியில் கொண்டு செல்வதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

மேலும், இரண்டு மணிநேர அரசியல் உரையாடல் தொடர்பான 'கரஹறினு நோயெக்கி தென' நிகழ்ச்சி

06

## இடைத்தரகர்கள் இல்லாவிடின் முட்டை மீண்டும் 30 ரூபாவுக்கு

### அரசாங்கம் தலையிட வேண்டும் -உற்பத்தியாளர்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முட்டை விலை அதிகரிப்பிற்கு இடைத்தரகர்களே காரணம் என்றும் அரசாங்கம் இதில் தலையிட்டு நடவடிக்கை எடுத்தால், 30 ரூபாவுக்கு மீண்டும் முட்டையை விற்பனை செய்ய முடியும் எனவும் முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர் உற்பத்தியாளர்களிடமிருந்து முட்டையை கொள்வனவு செய்து, இடைத்தரகர்கள் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளனர். இவை, சந்தைக்கு விடப்படாத காரணத்தாலேயே முட்டை விலை அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

06

## கொழும்பில் 162.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி நேற்று பதிவு

கொழும்பில், கடந்த சில மணித்தியாலங்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதன்படி, குறித்த காலப்பகுதியில் கொழும்பில் 162.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில், நேற்றுமுன்தினம் காலை 8.30 முதல் நேற்று (07) காலை 0 மணி வரையான காலப் பகுதியில் வலல்லாவிட்டவில் 112 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் ஹொரணையில் 111 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும்,

06

அடிப்படை ஆதாரமற்ற வகையில்

## ரணிலை இலக்கு வைத்து தவறான தகவல்கள்

### ஐ.தே.க. பிரதித் தலைவர் மறுத்துரைப்பு



ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலக்கு வைத்து தவறான பல தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் அவருக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான அடிப்படை ஆதாரமற்ற விடயங்களை, தமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று (07) நடைபெற்ற ஊடக

06

## பாகிஸ்தான் கராச்சி விமான நிலையத்தில் குண்டு வெடிப்பு

### சீனர்கள் இருவர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் சிந்து மகாண தலை நகரான கராச்சியில், அடையாளம் தெரியாத பொருள் வெடித்ததில், இரு சீனர்கள் உயிரிழந்தனர். ஜின்னா சர்வதேச விமான நிலையம் அருகே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மிகப் பயங்கரமாக இடம்பெற்ற இச்சம்பவத்தில் சீன பிரஜைகள் இருவர் உயிரிழந்துள்ளதுடன், குறைந்தது பத்துப் பேர் காயமடைந்துள்ளனர். சம்பவ இடத்திலிருந்து கரும்புகை வெளியேறும் காட்சிகள் அங்குள்ள ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

06

## கொழும்பில் வேட்பாளராக களமிறங்கும் ARV லோஷன்

### மனோ கணேசனுடன் நேற்று கை கோர்ப்பு



நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில், கொழும்பு மாவட்டத்தில் ஊடகவியலாளர் லோஷன் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணி கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இதை தெரிவித்தது.

கட்சியின் தலைவர் மனோ கணேசன் நேற்று (07) இதனைத்

06

தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் மறுப்பு

## தமிழரசுக் கட்சி பொறுப்புக்களில் இருந்து விலகுகிறார் மாவை

### விரைவில் தீர்மானம், மகன் கலை தகவல்



இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் உள்ளிட்ட அனைத்து பதவிகளிலிருந்தும் விலகுவதற்கு கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

இதையடுத்தே மாவை சேனாதிராஜா கட்சி தலைவர் உள்ளிட்ட அனைத்து பதவிகளிலிருந்தும் விலக திட்டமிட்டுள்ளதாக, அவரது மகன்

06

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 22ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்

யாராயிருப்பினும் அவரது உடைமையை அறவழிக்குப் புறம்பாகக் கவர விரும்பினால் ஒருவருக்குப் பகுத்துணரும் நுண்ணிய அறிவு இருந்துதான் என்ன பயன்?

# பரபரப்பாகி வரும் பொதுத்தேர்தல் களம்

இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி நடைபெற உள்ளது. இத்தெர்தலுக்கான வேட்புமனுக்கள் தற்பொது ஏற்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 11 ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன.

அந்த வகையில் இத்தெர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஆயத்தப்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் தேர்தல்கள் ஆணைக்குழுவானது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஐக்கிய இலங்கை பொது ஜனக் கட்சி, ஐக்கிய லங்கா மகாசபை, இலங்கை மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி ஆகிய ஆறு கட்சிகளிலும் செயலாளர் தொடர்பில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாதுள்ளதால் இக்கட்சிகளுக்கு இத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அறிவிப்பு வெளிவர முன்னர் சில தரப்பினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடாக இத்தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தனர். அது தொடர்பான பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான சூழலில்தான் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இவை இவ்வாறிருக்க, பொதுத் தேர்தலுக்கு வேட்புமனுக்களை ஏற்கும் காலமாக தற்போதைய சூழல் அமைந்துள்ளதால் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்து இத்தேர்தலை எதிர்கொள்வதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளன. அதற்கான பேச்சுவார்த்தைகளையும் சந்திப்புக்களையும் கட்சிகள் முடுக்கி விட்டுள்ளன.

அந்த வகையில் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் கூட்டணி அமைத்து இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தன. இது தொடர்பில் எட்டு தடவைகள் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தும் கூட ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த இரண்டு நிபந்தனைகளால் அந்த முயற்சி தோல்வியுற்றுள்ளது.

அதன் காரணத்தினால் ஐக்கிய தேசிய கட்சி அதனுடன் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ள கட்சிகளுடன் இணைத்து இத்தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியில் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ள கட்சிகளில் சில தனித்தும் கூட்டு சேர்ந்தும் இத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தியுள்ளன. அது தொடர்பில் ஐ.ம.சக்தி தலைமை விதிக்கும் நிபந்தனைகள் கூட்டணிக் கட்சிகளுக்குள் மனக்கசப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவை இவ்வாறிருக்க, பொதுஜன பெரமுனவும் இத்தேர்தலை கூட்டணி அமைத்து எதிர்கொள்வது குறித்தும் கவனம் செலுத்தியுள்ளது. தேவைப்பட்டால் மொட்டு சின்னத்தை விடுத்து வேறு சின்னத்தில் போட்டியிடுவது குறித்து ஆராயவும் தயாராக இருப்பதாக அக்கட்சியின் செயலாளர் கூறியுள்ளார்.

ஆன போதிலும் இத்தேர்தலில் போட்டியிடுஙுவதற்காக 120 க்கும் மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணங்களை செலுத்தியுள்ளன. அத்தோடு சில அரசியல் கட்சிகள் மாவட்ட மட்ட அபேடச்கர்களின் பெயர்ப்பட்டியலை இறுதியுள்ளது. அந்த வகையில் தமிழரசு கட்சி சில மாவட்டங்களில் போட்டியிடுபவர்களின் பெயர்ப்பட்டியலை இறுதி செய்து வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இத்தேர்தலில் போட்டியிடத் தயாராகியுள்ள அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் மாவட்ட மட்ட அபேட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகளையும் முன்னெடுத்துள்ளதோடு வேட்பு மனுக்களை நிரப்பும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளன.

ஏனெனில் எதிர்வரும் 11 ஆம் திகதி வரையுமே பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.

இவ்வாறான சூழலில் கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த சுமார் 30 பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடாதிருப்பதற்கு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி, சமல் ராஜபக்ஷ, ஜோன் செனவிரத்ன, திஸ்ஸ விதாரன, வாசுதேவ நாணயக்க உள்ளிட்டோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

குறிப்பாக கடந்த அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராகவும் அமைச்சரவைப் பேச்சாளராகவும் விளங்கிய முன்னாள் அமைச்சர் பந்துல் குணவர்தன இத்தேர்தலில் போட்டியிடப் பொவதில்லை என்று ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

இவ்வாறு பொதுத்தேர்தல் களம் நாளுக்கு நாள் சூடுபிடித்து வருகின்றது. இந்த தேர்தலின் ஊடாக நாட்டுக்கும் மக்களுக்கும் பயனளிக்கும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர்.

editor.tkn@lakehouse.lk



# மக்கள் வைத்த நம்பிக்கையை எங்களால் பாதுகாக்க முடியும்!

## தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ வழங்கிய பேட்டி

இந்நாட்டு மக்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தெளிவான செய்தியைத் தெரிவித்துள்ளார்கள். நாட்டை ஆட்சி செய்த ஊழல்வாதக் குழுக்களுக்கு எதிரான மக்களின் நிலைப்பாட்டை ஜனாதிபதித் தேர்தலின் போது மிகத் தெளிவாகப் பார்த்தோம். அதன்படி தோழர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார். நாம் முன்வைத்த 'வளமான நாடு, அழகிய வாழ்வு' என்ற நிகழ்ச்சி நிரலை மக்கள் அங்கீகரித்துள்ளார்கள். எங்களுக்கு வாக்களித்த மக்கள் ஒருபுறமிருக்க, நாங்கள் செயற்படுத்திய திட்டத்தைப் பார்த்து எங்களுக்கு வாக்களிக்க பலர் தயாராக உள்ளனர். தோழர் அநுரகுமார திசாநாயக்கவின் ஜனாதிபதிப் பதவியை முன்னிலைப்படுத்தி வலுவான அரசாங்கம் ஒன்றை உருவாக்க எம்மால் முடியும் என நாம் நம்புகிறோம். இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

**கேள்வி: சில பகுதிகளில் திசைகாட்டியின் தலைமை ஏற்கப்படவில்லை என்பது தேர்தல் முடிவுகளில் நாம் பார்த்த ஒன்று. உங்கள் கட்சி அந்தப் பகுதி மக்களுக்கு சரியான புரிதலை வழங்க முடியாமல் போனது என்பதை எம்மால் காணக்கூடியதாக உள்ளதல்லவா?**

**பதில்:** சில இடங்களில் எங்களால் வெற்றி பெற முடியவில்லை. மற்றைய வேட்பாளர்கள் அளித்த வாக்குறுதிகளால் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்பதையே நாம் உணர்கின்றோம். ஆனால், நாம் இப்போது செயற்படுத்தி வரும் திட்டத்தால் அந்த மக்கள் ஈர்க்கப்படுவார்கள் என்று நம்புகிறோம்.

**கேள்வி: அந்த மக்களுக்கு தெளிவுபடுத்த விசேட திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவா?**

**பதில்:** மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் ஒரு நல்ல அணியை பொதுத்தேர்தலில் முன்னிறுத்துவோம். ஜனாதிபதித் தேர்தலின் போது எங்களின் குரலை கேட்காத மக்கள் உள்ளனர். ஒருவேளை நம் எதிராளி உருவாக்கிய பயம் அவர்களைப் பாதித்திருக்கலாம். அந்த எதிராளியின் வார்த்தைகள் இன்று சிதறிப் போயுள்ளன. எனவே, இந்தத் தேர்தலில் மக்கள் எது சரியானது என்பதை முடிவெடுப்பார்கள்.

**கேள்வி: மூன்று பேர் சேர்ந்து நாட்டை வழிநடத்துவது என்பது எளிதான காரியமல்ல. இந்தக் கடினமான பணியின் பின்னணியில் உள்ளவர்கள் பற்றிக் கூற முடியுமா?**

> **'பொதுத்தேர்தலில் எமக்கு வாக்களிக்க பலர் தயாராக உள்ளனர். வலுவான அரசு ஒன்றை உருவாக்க எம்மால் முடியும்'**

**பதில்:** எங்கள் அமைச்சரவையில் மூன்று பேர் இருந்தாலும், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல அவர்களுடன் பலர் உள்ளனர். அந்த அணி கடுமையாக உழைத்து வருகிறது. ஜனாதிபதி செயலகத்தில் இருந்து, ஒவ்வொரு அமைச்சும் அந்தப் பங்களிப்பைப் பெறுகின்றன. எனவே, பொதுத் தேர்தலில் அதனை அதிகாரபூர்வமாக அறிவிக்கும் அதிகாரமே அவசியம். அதில் வெற்றி பெற்று இருபத்தைந்து அமைச்சர்கள், இருபத்தைந்து பிரதியமைச்சர்களை நியமித்து இந்த செயற்பாடுகளை தன்னார்வமாக உழைக்கும் மக்களுடன் இணைந்து முன்னெடுத்துச் செல்லவே செயற்பட்டு வருகின்றோம். பெருமளவிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இலங்கையர்கள் இதற்கு பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

**கேள்வி: ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து சில நாட்களே ஆகின்றன. வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ளது. இந்த மாற்றத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**பதில்:** வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கு நாட்டில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அவர்கள் நமது வங்கி அமைப்பு மூலம் பணம் அனுப்புகிறார்கள். நிச்சயமாக, அந்நிய செலாவணி கையிருப்பு வலுவடையும். ஆட்சிக்கு வந்து சில நாட்களிலேயே அந்நிய செலாவணிக் கையிருப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் எங்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அது மேலும் வலுவடைகிறது. அதேசமயம் சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பணம் மூலம் பெறப்படும் வருமானமும் அதிகரித்துள்ளது. முதலீடுகள் அதிகரிக்கும் எனவும் நம்புகிறோம்.

**கேள்வி: கடந்த அரசாங்கத்தின் மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் விற்கத் தயாராக இருந்த சில நிறுவனங்கள் விற்கப்பட மாட்டாது என்று புதிய நிர்வாகம் கூறுகிறது. இப்படி ஒரு நடவடிக்கை எடுக்கக் காரணம் என்ன?**

**பதில்:** முன்னாள் ஆட்சியாளர்கள் பின்பற்றிய எளிய தீர்வு விற்பதாகும். அவற்றைப் பராமரிப்பதிலும் ஊழல் நடந்தது. விற்பனை மூலமும் மோசடி செய்யத் தயாராக இருந்தார்கள். மாறாக இந்த நிறுவனங்களை நாட்டின் உற்பத்தி நிறுவனங்களாக மாற்றுவதற்கு எங்கள் குழு கடுமையாக உழைத்து வருகிறது. விற்பது தீர்வல்ல. இந்தப் பணிகளை ஆர்வமுடன் முன்னெடுத்துச் செல்வது அவசியம். அந்த நிறுவனங்களுக்கு உரிய நிர்வாக கட்டுப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களைப் பாதுகாத்து இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டு செல்வார்கள். விற்காமல், இலாபம் தரும் நிறுவனமாக மாற்றுவதே முக்கியம்.

**கேள்வி: கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த வேளையில் உள்ளதைப் போல், நாட்டை கட்டியெழுப்ப மக்கள் அணிதிரண்டு நிற்கிறார்கள் அல்லவா? இந்த நிலையை தொடர்ந்து பேணுவதற்கான வேலைத் திட்டம் உள்ளதா?**

**பதில்:** எந்தவொரு அரசாங்கத்திலும் ஒரு புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்த பிறகு, மக்கள் புதிய எதிர்பார்ப்புகளை உருவாக்கி அர்ப்பணிப்புகளைச் செய்கிறார்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த எவரும் நாட்டுக்காக சரியான நடவடிக்கைகளை எடுத்ததில்லை. ஆனால் ஜனாதிபதி அனுர குமார அனைவரிடமிருந்தும் வேறுபட்டவர். இந்த நாட்டை ஒன்றிணைந்து முன்னோக்கி கொண்டு செல்வோம் என்ற உறுதிமொழியில் அவர் நாட்டை வழிநடத்துகிறார். கடந்த காலத்தில் இந்த நாட்டை ஆட்சி செய்த ஜனாதிபதிகள் போல் அல்லாமல், இந்த நாட்டை படிப்படியாக முன்னேற்றுவோம். இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நம்பிக்கை மக்களிடம் அதிகரித்து வருகிறது. மக்களின் நம்பிக்கையை எம்மால் பாதுகாக்க முடியும். எங்களுக்கு தனிப்பட்ட விருப்பங்கள் இல்லை. நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற இலட்சியம் மட்டுமே எங்களிடம் உள்ளது. அதற்காகவே ஜனாதிபதி இணைந்து பணியாற்றுகிறார். மக்கள் அதை உணர்கிறார்கள். வாக்களிக்காத மக்களும் இதை சாதகமாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

**கேள்வி: தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகத்தின் கீழ் IMF தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை?**

**பதில்:** நாங்கள் ஏற்கனவே விவாதித்துள்ளோம். அவர்கள் எங்கள் அரசுடன் தொடர்ந்து செயலாற்ற விரும்புகிறார்கள். அவர்களுடன் அடுத்த தவணையைப் பெறுவதற்காகவும், நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்தில் அதன் பங்களிப்புக்காகவும் மக்கள் மீதான சுமையைக் குறைக்கவும் பேச்சுவார்த்தை நடத்த நாம் எதிர்பார்த்துள்ளோம்.

**கேள்வி: அத்தியாவசியப் பொருட்கள், மருந்துகள், பாடசாலை உபகரணங்கள் என்பனவற்றுக்கு வரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்படும் என்று சொன்னீர்கள் அல்லவா? இவை எப்போது நடக்கும்?**

**பதில்:** ஏற்கனவே மக்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே எரிபொருள் மற்றும் பஸ் கட்டணத்தைக் குறைத்துள்ளோம். மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனுடன் சந்தைப் பொருட்களின் விலையும் குறையும் என்று எதிர்பார்க்கிறோம். மேலும் தேர்தலில் வாக்குறுதி அளித்தபடி வற் வரி குறைக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படும். மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையைக் குறைத்து அவர்களுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதே எங்கள் எதிர்பார்ப்பு.

**கேள்வி: ஏற்றுமதித்துறையை மேம்படுத்த எதிர்காலத்தில் எடுக்கப்படும் முடிவுகள் எவை?**

**பதில்:** இதுவரை ஜனாதிபதி மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளார். இத்திட்டம் வெற்றியடைய வலுவான அரசு தேவை. நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வலுவான அரசாங்கத்தை நாம் பெறுவோம். அதன் பின்னர் எதிர்காலத்தில் அமைச்சுகளின் கீழ் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்படும் பணிகளை சீரான முறையில் முன்னெடுப்பதற்கு நாம் உழைத்து வருவதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இலங்கையர்களிடையே நம்பிக்கையை உருவாக்கி வருகிறோம். அத்துடன் உலக முதலீட்டாளர்களும் ஏனைய நாடுகளும் இலங்கையின் மீது கவனம் செலுத்துகின்றன. மக்கள் ஏற்படுத்திய மாற்றத்தை உலக நாடுகள் சாதகமாக ஏற்றுக் கொள்வதையே இது காட்டுகிறது.

**கேள்வி: உலகின் பல நாடுகளில் உள்ள அரசாங்கங்கள் தற்போது இடதுசாரி அரசியல் போக்கை நோக்கி நகர்கின்றன. இந்த மாற்றம் நமது நாட்டிலும் ஏற்பட்டு வருகின்றதா? அதற்கு என்ன காரணம் என எண்ணுகிறீர்கள்?**

**பதில்:** உலகம் முற்போக்கு கொள்கை அணுகுமுறையை நோக்கி நகர்கிறது. கொவிட் தொற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால், அந்த நாடுகளில் முந்திய அரசாங்கங்கள் நிராகரிக்கப்பட்டன. அதே நேரத்தில், பொருளாதார நெருக்கடி உலகில் ஒரு முக்கிய தலைப்பாக மாறியது. அதனுடன் அந்தச் சவாலை எதிர்கொள்ளக்கூடிய முற்போக்கு அரசாங்கங்களே உலகில் அதிகாரத்திற்கு வந்தன. அதற்குச் சிறந்த உதாரணம் இலங்கையாகும்.

**சுபத்திரா தேசப்பிரிய...**
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# சென்னையில் ஐவரின் உயிரை பறித்த விமான சாகச நிகழ்வு!

தமிழ்நாடு சென்னையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற விமான சாகச நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்றவர்களில் சனநெரிசலில் அகப்பட்டு 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்திய விமானப்படையின் 92 ஆவது ஆண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் விமானப் படையினரின் சாகச நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்நிகழ்ச்சியைப் பார்வையிட இலட்சக்கணக்கானவர்கள் ஒரே நேரத்தில் சென்னை மெரினா கடற்கரையில் திரண்டனர்.



இந்த நிகழ்ச்சி பிற்பகல் ஒரு மணிக்கு முடிவுக்கு வந்தபோது, கடற்கரையில் குவிந்திருந்த மக்கள் ஒரே நேரத்தில் வெளியேற முயன்றனர். இதனால், அந்தப் பகுதியில் வீதிகள் அனைத்திலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மெரினாவை ஒட்டியுள்ள காமராஜர் வீதிக்கு இணையாகச் செல்லும் அண்ணா சாலையிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கியும், வெயிலில் நீண்ட நேரம் நின்றதால் ஏற்பட்ட நீரிழப்பினாலும் சுமார் 200 பேர் வரை மயக்கமடைந்தனர். 90 இற்கும் மேற்பட்டோர் அரசு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டதில் குறைந்தது 5 பேர் உயிரிழந்துவிட்டனர்.

விமான சாகச நிகழ்ச்சிக்கு போதுமான ஏற்பாடுகள் செய்யப்படாததே உயிரிழப்புகளுக்கு காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

விமான சாகச நிகழ்ச்சியை காணவந்த பொதுமக்கள் கூட்ட நெரிசலால் அவதியுற்றதும், வெப்பநிலையும் அதிகமாக இருந்தது. அதன் காரணமாகவே மரணங்கள் சம்பவித்துள்ளன.

மெரினா கடற்கரையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் போதுமானதாக இல்லையென நிகழ்ச்சிக்குச் சென்றவர்கள் குற்றம்சாட்டுகின்றனர். காலை 11 மணிக்குத் தொடங்கவிருந்த நிகழ்ச்சிக்காக, காலை எட்டரை மணியில் இருந்தே பொதுமக்கள் கடற்கரையில் கூட ஆரம்பித்தனர்.

பெரும்பாலான ரயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதியது. ரயில் நிலையங்களில் டிக்கெட் எடுக்கவே மிகப் பெரிய வரிசை நின்றது. காலை பத்து மணியளவில் பல இலட்சம் பேர் கடற்கரையில் குவிந்தனர். இருந்தபோதும் இவர்களுக்கென போதுமான குடிநீர், கழிப்பிட வசதிகள் செய்துதரப்படவில்லையென நிகழ்ச்சியைக் காண வந்த பொதுமக்கள் குற்றம்சாட்டினர்.

பிற்பகல் ஒரு மணியளவில் சாகசம் நிறைவடைந்த போது கடற்கரையில் கூடியிருந்த அனைவரும் ஒரே நேரத்தில் அங்கிருந்து வெளியேற முயற்சித்தனர். இதனால் கடுமையான நெரிசல் ஏற்பட்டது. அதுவே இம்மரணங்களுக்குக் காரணமாகும்.



# தமிழர்கள் பொதுத்தேர்தலில் வரலாற்று துரோகம் இழைத்துவிடக் கூடாது!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் வலியுறுத்தல்



'அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியின் பொதுச்சின்னத்தில் தேர்தலில் நிற்கின்ற பொழுது மாவட்டங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும். இத்தேர்தலில் வரலாற்றுத் துரோகத்தை எந்தத் தமிழரும் செய்யக்கூடாது' என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதிநிதியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

சமகால தேர்தல் சூழல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், "அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் இக்கட்டான சூழலில் இருக்கின்றன.

தனித்தனி சின்னத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தலில் போட்டியிடுவதை விட இரண்டு மாவட்டங்களிலும் இரண்டில் ஒரு பொதுவான சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டால் இரண்டு மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும். அதேவேளை ஒரு போனஸ் ஆசனம் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது.

அது வீடாகட்டும் குத்துவிளக்காகட்டும். ஆனால் ஒரு சின்னம் சிறந்தது. அதேவேளை இந்த இரண்டு கூட்டணிக்குள் தமிழ்த் தேசிய பரப்பில் இருக்கின்ற கட்சிகள் மாத்திரமே இணைக்கப்பட வேண்டும் .

ஏனைய ஈ. பி. டி. பி, ரி.எம்.வி.பி, ஜே.வி.பி போன்ற கட்சிகள் கேட்பதால் பாதிப்பு இல்லை. நாம் கூட்டாக இருந்தால் எம்மை அசைக்க முடியாது. ஜே.வி.பிக்கு அளிக்கின்ற வாக்குகள் ஒரு சிங்களவர் வருவதற்கும், தொலைபேசிக்கு போடப்படுகின்ற வாக்கு ஒரு முஸ்லிம் வருவதற்கும் வழிசமைக்கும். எனவே இந்த வரலாற்றுத் துரோகத்தை எந்தத் தமிழரும் செய்யக்கூடாது .

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு இடதுசாரி கொள்கை கொண்ட புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. அனைவரும் ஓகோ என்று வரவேற்கிறார்கள். ஜே.வி.பியின் கடந்த கால செயற்பாடுகளை நாம் அறிவோம். அவர்கள் தங்களது இனத்தின் 60,000 இளைஞர்களை கொன்று குவித்தவர்கள். கூடுதலான அரசியல் சொத்தை வீணாக்கியவர்கள். அன்றைய ஜனநாயகத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியவர்கள்.

எனவே, எந்த விதத்திலும் அவர்களோடு இணைந்து அல்லது அவர்களுக்காக வாக்குக் கேட்பது என்பது தமிழர்களுக்கு இழைக்கும் வரலாற்றுத் துரோகமாக பார்க்கப்படும் . எந்தத் தமிழரும் இதற்கு துணை போகக் கூடாது. புதிய அரசாங்கம் வந்ததும் சகல மதங்களுக்கும் சம உரிமை என்று சொல்லப்பட்டது. ஆனால் பௌத்த மதத்திற்கு மாத்திரமே அமைச்சு வழங்கப்பட்டிருக்கின்றது.ஏனைய சமயங்களுக்கு அமைச்சு இல்லை. புதிய அரசியல் யாப்பு மூலம் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்று சொல்கின்றார்கள். முதலிலே 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை பூரணமாக அமுல்படுத்துங்கள். அதுவே எமக்கு போதுமானது. இரு மாவட்டங்களிலும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அதற்காக எந்த விட்டுக்கொடுப்பையும் வழங்க தயாராக இருக்கின்றேன்.

ஒற்றுமை ஒன்றே எம்மை உயர்த்தும்' என்று தெரிவித்தார்.

**வி.ரி. சகாதேவராஜா**
(காரைதீவு குறூப் நிருபர்)

# குப்பைமேடாக மாறும் நிந்தவூர் கடற்கரை!



முறையற்ற மனித நடவடிக்கைகளினால் நிந்தவூர் கடற்கரை சூழல் தன் இயற்கை அழகை இழந்து வருகின்றது. இலங்கையில் கடற்கரைதான் மக்களுக்கான மிகப்பெரிய பொழுதுபோக்கு வளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

சமுத்திர பிராந்திய சட்டத்தின்படி இலங்கையை சுற்றி 1700 KM பரப்பு கரையோர மாசடைதல் தவிர்ப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 10 ஆண்டுகளில் கடற்கரையும் கடல் வளமும் தீவிரமாக மாசடைந்து வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் கடல் பிரதேசம் மீன்பிடி மற்றும் கடல் வளங்களை அணுகுவதற்கு உகந்த சுமார் 7 KM நீளமுடைய கடற்கரையைக் கொண்டுள்ளது. அண்மைய காலங்களில் கடல் அரிப்பினால் தனது கடற்கரை வளங்களை இழந்த பிரதேசமாகவும் இது அடையாளப்படுத்தப்படுகின்றது.

முறையற்ற மனித நடவடிக்கைகளினால் இக்கடற்கரையின் எதிர்காலம் பாதிப்படைந்துள்ளது. குப்பை கூளங்களினால் நிரம்பி வழியும் இக்கடற்கரைப் பகுதி மிகவும் மாசுபட்டுள்ளது. இங்கு குப்பைகளை கரையோரங்களில் போடுவதால் கடல் வளம் பாதிக்கப்படுகின்றது.

கடல் மாசுபடுவதனால் ஏற்படும் விளைவுகள் பற்றிய போதிய விழிப்புணர்வு மக்களிடம் இல்லை என்பதே உண்மை. அதேபோல் அதற்கு எதிரான சட்டங்களும் இன்னும் வலுவடையவில்லை. நிந்தவூரின் கடற்கரைக்கு உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் தங்களது பொழுதுபோக்குக்காக வருவதுண்டு. அவ்வாறு வருகை தருபவர்கள் பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் போத்தல்களை ஆங்காங்கே வீசிச் செல்வதை காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறு வீசப்படும் குப்பைகள் கடலினுள் சேரும் போது கடல்வாழ் உயிரினங்களும் அதிகமாக பாதிக்கப்படுகின்றன.

மாசுபட்ட கடற்கரைகளாக இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் குறிப்பிடலாம். இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெறும் கடற்கரை மாசடைதலைத் தடுக்க அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றது.

கடல் மாசடைதல் தடுப்பு அதிகார சபை பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், சாதாரன பொதுமக்களிடையே இது பற்றிய ஆயத்தம் மற்றும் அறிவை விருத்தி செய்வதற்காக நிகழ்த்திய திட்டங்களை நடத்தி வருகின்றது. இதற்கு மேலதிகமாக இலங்கை கடற்பரப்பில் எதிர்காலத்தில் பலமான சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும்.

பிளாஸ்டிக் பொருட்கள், பொலித்தீன்கள் சுற்றுச்சூழலுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும் பாரிய அச்சுறுத்தலாகும். அவை தொடர்பில் சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். சுற்றாடலை பாதுகாப்பதற்கான அறிவு, மனப்பான்மை, திறமை ஆகியன மேம்படுத்தப்பட வேண்டும்.

அப்போதுதான் கடல்வள சுற்றுச் சூழல் மற்றும் கரையோரங்களை பாதுகாக்க முடியும்.

கடற்கரையில் பொழுதை கழிக்க வருகைதருவோர் தமது குப்பைகளை ஒரு பையில் எடுத்துச் சென்று அதை முறையாக அப்புறப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். வீட்டுக் கழிவுகளையும் முறையாக அகற்றுவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும்.

மாறாக பொது இடங்களான கடற்கரைச் சூழலில் இரவில் யாருக்கும் தெரியாமல் குப்பைகளைக் கொட்டி விட்டு காலையில் கண்டும் காணாதது போல செல்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இன்று நாம் எமது கடற்கரை வளத்தை முறையாக பாதுகாக்காதுவிடின் எதிர்வரும் காலங்களில் பணம் செலுத்தி பொழுதை கழிக்க கூடிய கடற்கரைகளுக்கு செல்ல வேண்டிய சூழல் ஏற்படும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் கிடையாது.

அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள விழிப்புணர்வு நடவடிக்கைகளை போன்று உள்ளூர் மட்டங்களிலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

குறிப்பாக கடந்த காலங்களில் 'லயன்ஸ் கிளப் நிந்தவூர் சுப்ரீமினால்' கடற்கரை தூய்மைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை வரவேற்கத்தக்கது.

அதேபோன்று எதிர்வரும் காலங்களிலும் இப்பகுதியில் மக்கள் தங்களது கடற்கரையை பாதுகாக்கும் பொறுப்புக்குரியவர்கள் வீட்டு கழிவுகளை கடற்கரையில் கொட்டுவதனால் உங்கள் வீடுகள் தூய்மையாக இருக்கலாம். ஆனால் எதிர்கால சந்ததியினருக்கும் இக்கடற்கரை வளம் சொந்தமானது. ஆகவே இதனை நினைவில் கொண்டு செயல்படுவது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

**ஹம்தா லதீப்**
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

# இந்தியாவைப் பகைப்பது மாலைதீவுக்கு உசிதமல்ல!

## பொருளாதார நெருக்கடி தீவிரமடைவதால் டில்லிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி முய்சு!



கடனைத் திருப்பிச் செலுத்த முடியுமா எனும் அச்சத்துடன், பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது மாலைதீவு. இந்நிலையில் இந்தியாவுக்கு மாலைதீவு ஜனாதிபதி முய்சு விஜயம் செய்துள்ளார். அவர் நேற்று பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு இந்தியாவிடம் உதவி கோரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு மாலைதீவில் ஏற்பட்ட தேர்தலின்போது, 'இந்தியாவே வெளியேறு' என்ற கொள்கையை மையப்படுத்தி முய்சு பிரசாரத்தில் ஈடுபட்டார். மாலைதீவில் இந்தியாவின் செல்வாக்கைக் குறைப்பதாக உறுதியளித்து தேர்தலில் வெற்றி பெற்ற முய்சு, இருநாட்டு உறவை மேம்படுத்தும் நோக்குடன் இந்தியாவுக்கு செல்லவிருக்கிறார்.

முகமது முய்சு ஜனாதிபதியான பிறகு, இருநாட்டு உறவுகளும் மோசமடைந்து வந்தன. இந்நிலையில், மாலைதீவு தனது பெரிய அண்டை நாட்டைப் புறக்கணிக்காது என்பதை அவரது வருகை காட்டுவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த செப்டம்பர் மாதம் மாலைதீவின் அந்நிய செலாவணி கையிருப்பு 440 மில்லியன் டொலர்கள் என்றிருந்தது. அதன்மூ லம் ஒன்றரை மாதங்களுக்கு மட்டுமே இறக்குமதி செய்ய முடி யும் என்ற நிலை உள்ளது. இந்த நேரத்தில் இந்தியாவின் உதவி அந்நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்க உதவும்.

ஜனாதிபதியான பின்னர் முய்சு துருக்கி மற்றும் சீனாவுக்கு சென்றார். ஜனவரி மாதம் அவர் சீனாவுக்கு சென்றதை, தங்கள் நாட்டை அவமதிக்கும் செயலாக இந்தியா பார்த்தது. மாலைதீவின் முந்திய அதிபர்கள் தேர்தல்களில் வெற்றி பெற்ற பின்னர், முதலில் டெல்லிக்குத்தான் செல்வார்கள்.

ஜனாதிபதி முய்சுவின் இந்திய விஜயம் பல வழிகளில் திடீர் திருப்பமாகக் கருதப்படுகிறது. இது மாலைதீவு இந்தியாவை எந்த அளவுக்குச் சார்ந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. குறிப்பாக, மற்றைய எந்த நாட்டினாலும் பூர்த்தி செய்ய முடியாத வகையிலான பங்கு இந்தியாவுக்கு இருப்பதை உணர்த்துகிறது.

ஒரு சிறிய தீவு நாடான மாலைதீவு, அதன் உள்கட்டமைப்பு, உணவு, சுகாதாரம் போன்றவற்றுக்காக, அதன் பெரிய அண்டை நாடான இந்தியாவை பெருமளவில் சார்ந்துள்ளது.

முய்சுவின் இந்த வருகையின் போது, மாலைதீவுக்கு நிதியுதவி வழங்கப்படுவது குறித்து இந்தியாவோ மாலைதீவோ இதுவரை உறுதி செய்யவில்லை. ஆனால், இருதரப்பு பேச்சுவார்த்தையில் இதுகுறித்து விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மானிய உதவி மற்றும் கடனை திருப்பிச் செலுத்துதலில் மறுசீரமைப்பு ஆகியவை, முய்சு வருகையின் முன்னுரிமையாக இருக்குமென நம்பப்படுகிறது.

மாலைதீவின் மொத்த பொதுக்கடன் சுமார் 8 பில்லியன் டொலராகும், இதில் சீனா மற்றும் இந்தியாவிற்கு செலுத்த வேண்டிய தலா 1.4 பில்லியன் டொலர் கடனும் அடங்கும். ஐந்து ஆண்டுகளுக்கு கடனைச் செலுத்துவதை ஒத்திவைக்க சீனா ஒப்புக்கொண்டதாக முய்சு பல சந்தர்ப்பங்களில் கூறிய போதிலும், இன்னும் சீனாவிலிருந்து நிதி உதவி வரவில்லை.

தற்போது எந்த நாடும் உதவிக்கு வராத நிலையில், இந்தியாவுடனான உறவில் ஏற்பட்டுள்ள விரிசலை சரி செய்ய முய்சு முயல்வதாகத் தெரிகிறது. இந்தியாவை பகைத்துக் கொள்வது ஏற்றதல்ல என்பதை முய்சு தற்போது உணர்ந்துள்ளார் என்று சர்வதேச அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இதேவேளை கடந்த ஆண்டில் மாலைதீவுக்கு வருகை தந்த இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 50,000 ஆகக் குறைந்துள்ளது. இதன் விளைவாக அந்நாட்டுக்குச் சுமார் 150 மில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிடம் இருந்து நிதி உதவி கிடைக்காவிட்டால் மாலைதீவு பல இழப்புகளைச் சந்திக்க நேரிடும் என்கிறார்கள் அவதானிகள். அதனால் மாலைதீவு ஜனாதிபதியின் இந்தியப் பயணம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

# பிரதமர் நரேந்திர மோடி எழுதிய நவராத்திரி பாடல்!



தற்போது அனுஷ்டிக்கப்பட்டு வரும் நவராத்திரியை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, துர்க்கையம்மனுக்கு அர்ப்பணிப்பு செலுத்தும் வகையில் 'கர்பா' பாடல் ஒன்றை எழுதி உள்ளார்.

இந்துக்களால் தற்போது நவராத்திரி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதனையடுத்து பக்தர்கள் விரதம் இருந்து வருகின்றனர். இப்பண்டிகை இந்தியாவின் வடமாநிலங்களில் தசரா பண்டிகை என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில் நவராத்திரியை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி 'கர்பா ' பாடல் ஒன்றை எழுதி உள்ளார். கர்பா என்பது பாரம்பரியமான குஜராத் நடனமாகும். முக்கியமாக நவராத்திரி காலத்தில் இந்த நடனம் நடைபெறுவது வழக்கம்.

இது குறித்து அவர் 'எக்ஸ்' சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது:

'இது நவராத்திரியின் புனிதமான நாள். அன்னை துர்க்கா மீதான பக்தியால் ஒன்றுபட்டு பக்தர்கள் பல்வேறு வகைகளில் வழிபாடு நடத்தி வருகின்றனர். அன்னையின் சக்தி மற்றும் கருணைக்கு மரியாதை செலுத்தும் வகையில் 'ஆவடிக் கலை(AavatiKalay)' என்ற தலைப்பில் கர்பா பாடல் ஒன்றை எழுதி உள்ளேன். நமக்கு துர்க்கை அன்னையின் ஆசிர்வாதம் எப்போதும் இருக்கட்டும்'. இவ்வாறு அந்த பதிவில் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மற்றொரு பதிவில், இந்த பாடலை பாடிய பாடகர் பூர்வ மந்திரிக்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்து உள்ளார்.

# காமராஜரின் நினைவஞ்சலி நிகழ்வு



பெருந்தலைவர் காமராஜரின் 49 ஆவது நினைவஞ்சலியை முன்னிட்டு இலங்கை உலகளாவிய காமராஜர் ஞாபகார்த்த மன்றம் தலைநகரில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தது.

நிகழ்வின் முதற்கட்டமாக பெருந்தலைவரின் திருவுருவப் படத்திற்கு மன்றத் தலைவர் திரு திருமதி ஜெயக்குமார் ஆகியோர் மலர் மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வு, கொழும்பு கொட்டாஞ்சேனை மெதடிஸ் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு "கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், பெருந்தலைவரை ஞாபகப்படுத்தி புகழாரமாக பேச்சுப் போட்டிகளும், கட்டுரைகளும் மாணவர்களால் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.







## மறுசீரமைப்பு செயற்பாட்டுக்கு...

கைச்சாத்திடும் நிகழ்வு,ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முன்னிலையில் இடம்பெற்றது.

அரசாங்கத்தின் சார்பில் நிதியமைச்சர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன மற்றும் உலக வங்கியின் சார்பில் அந்த வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் ஆகியோர் இதில், கையொப்பமிட்டனர்.

இந்த நிதி ஒத்துழைப்பானது இலங்கையின் முன்னெடுக்கப்படும் விரிவான மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களுக்கு, உலக வங்கியின் தொடர்ச்சியான ஒத்துழைப்பை உறுதி செய்கிறது.

இலங்கையின் மறுசீரமைப்பு, நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை சுமூக நிலைக்கு கொண்டு வருவதற்கான அபிவிருத்தி கொள்கைகளுக்கு நிதியளிக்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், இந்த நிதியுதவி இலங்கைக்கு வழங்கப்படுகிறது.

இரண்டு வருட வேலைத்திட்டம் (2023–2024), வறுமை மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மீதான தாக்கத்தை குறைத்து, முழுமையான பொருளாதார நிலைபேற்றுத் தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் இது செயற்படுத்தப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் 2023 ஆண்டில் செயற்படுத்தப்பட்டதுடன், பிரதான மூன்று துறைகளின் கீழ், ஏழு வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்ட பின்னர், 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை இலங்கை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வேலைத்திட்டத்தின் பிரதான மூன்று அம்சங்களாக,

1) பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்தல் : நிதி நிலைத்தன்மையை பாதுகாத்து அரச வளங்கள் முகாமைத்துவம், நிதி ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை பலப்படுத்தல்

2) வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்தல் : மிகவும் போட்டித்தன்மை மிக்க தனியார் துறையுடன் இலங்கையின் அபிவிருத்தியை விரிவுபடுத்தல்

3) வறிய மற்றும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல்: நெருக்கடி மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல் என்பனவாகும்

உரிய நிதி வசதியை பெற்றுக் கொள்ள தகுதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில், அரசாங்கத்தினால் மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் ஒன்பது வேலைத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அதேவேளை, அதற்கு உகந்த பொருளாதார கொள்கை வரரை பொன்றை பேணிச் செல்ல வேண்டியதும் அவசியமாகும்.

இதன்படி இந்த நிதி வசதியின் இரண்டாம் கட்டத்தை பெற்றுக் கொடுப்பதற்கான உலக வங்கிச் சபையின் அனுமதி கிட்டியுள்ளதோடு, ஒப்பந்தம் கைசாத்திடப்பட்ட பின்னர் அது அமுலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் இந்த நிதி உதவி இலங்கையின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும் எதிர்காலத்தில் நெருக்கடி நிலை மீண்டும் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு தீர்மானம்மிக்க செயற்பாடுகளை முன்னெடுக்க உதவும் என்பதோடு, நிலையானதும் போட்டித்தன்மை மிக்கதுமான சூழலை உருவாக்கும் என்றும் நம்பப்படுகிறது.

## சொத்து விபரங்களை வெளிப்படுத்த...

பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களை உரிய தெரிவத்தாட்சி அலுவலரிடம் பெயர் குறித்த நியமனப்பத்திரங்களுடன் ஒப்படைக்க வேண்டும். அத்துடன், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான வேட்பாளர்களினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்கள், பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுடன் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட வேண்டும்.

மேலும், பெயர் குறித்த நியமனப்பத்திரத்துடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றம் எனவும் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

## பொதுமக்களின் புகார்களுக்கு...

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் சில முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளன. எனவே,இவை தொடர்பான விசாரணைகள் முடுக்கிவிடப்படவுள்ளன. இவ்வாறு விடுபட்டுள்ள விசாரணைகளை நினைவுறுத்துமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், நாளாந்தம் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகளை ஓரிரு நாட்களில் விசாரித்து முடிக்குமாறும், அதற்குத் தேவையான அதிகாரிகளைப் பணியில் அமர்த்துமாறும் பதில் காவல்துறை மா அதிபரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஈஸ்டர் தாக்குதல்...

விசாரணை நேற்று நீதிமன்றத்தில் இடம்பெற்றது.இதன்போது, அடிப்படை உரிமை மனுவின் படி முழுமையான நட்ட ஈட்டை செலுத்தி முடித்துள்ளதாக, அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன அவரது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

நட்ட ஈட்டை முழுமையாக செலுத்தி யுள்ளமை தொடர்பில் எழுத்து மூல ஆதாரத்தை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் அறிவித்ததையடுத்து நிலந்த ஜயவர்தனவின் சட்டத்தரணி அதனை நேற்று பிற்பகல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதன் போது சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சொலிசிட்டர் ஜெனரல் தெரிவிக்கையில், நேற்றைய தினம் பிரதிவாதியால் 65 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அலுவலகம் அறிவித்துள்ளதாக குறிப்பிட்டார்.

மேற்படி நட்ட ஈட்டை வழங்க தாமதமாகியமை தொடர்பில், நீதிமன்றத்திடம் தாம் மன்னிப்பு கோருவதாகவும் நிலந்த ஜயவர்தன சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத் தரணிகள் தெரிவித்தனர்.

அதனையடுத்து மேற்படி வழக்கை மீண்டும் நவம்பர் 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கொழும்பில் வேட்பாளராக...

தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற "அரகலய" போராட்டத்தில் தமிழ் மக்களின் சார்பில் லோஷன் பங்களித்ததாகவும் மனோ கணேசன் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், புதிய அரசாங்கம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவாரெனத் தாம், நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியின் கீழ், பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்திருந்தது.

மேல் மாகாணத்தில் கொழும்பு கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் மத்திய மாகாணத்தில் நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களிலும் ஊவாவில் பதுளை மாவட்டத்திலும் முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

## ரணிலின் பாதுகாப்பு தொடர்பில்...

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை, விரைவில் தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவை ஸ்தாபிப்பதற்குத் தேவையான அதிகாரிகளின் எண்ணிக்கையும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால், மேலதிக அதிகாரிகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இழப்பீட்டுத் தொகையை...

10 மில்லியன் ரூபாவை செலுத்தியிருந்தார். தற்போது இந்த இறுதித் தொகையுடன் முழுத் தொகையையும் அவர் செலுத்தியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஒரு நபருக்கு 01 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியே நம்பகமான தகவல்கள் இருந்தபோதிலும், தாக்குதலைத் தடுக்க குறிப்பிடப்பட்ட பிரதிவாதிகள், தவறியமை தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமைகள் மனுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி நிலாந்த ஜயவர்தன ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இதன் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை 100 மில்லியன் ரூபாவை இழப்பீடாக வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதற்கு மேலதிகமாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தலா 75 மில்லியன் ரூபாவை இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் உயர் நீதி மன்றம் அறிவித்தது. முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாவை செலுத்தவும் அறிவுறுத்தியிருந்தது. தேசிய புலனாய்வு சேவையின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸையும் 10 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிதி அனைத்தும் சேகரிக்கப்பட்டு 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

## தாமரை கோபுரத்திலிருந்து...

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பகுதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்ததுடன் தாமரைக் கோபுரத்தின் 29 ஆவது தளத்திலிருந்து அவர் விழுந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேற்படி மாணவி தாமரைக் கோபுரத்திலிருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார் என்ற சந்தேகம் நிலவுவதாகவும், சிசிடிவி கெமராக்கள் மூலமான காணொளிகளை வைத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவியின் கைப்பையில் பாடசாலை புத்தகங்கள், கையடக்க தொலைபேசி போன்ற பொருட்கள் காணப்பட்டன.

இருந்த போதும் அவரது பாதணிகள் வேறு ஒரு இடத்தில் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மாணவி உயிரிழந்துள்ளமை தொடர்பில் தாமரைக் கோபுரத்தின் சிசிடிவி கெமராக்களை அடிப்படையாக வைத்து, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பாகிஸ்தான் கராச்சி...

கராச்சி விமான நிலையத்தை சுற்றியுள்ள இடங்கள் பாதுகாப்பு வளையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்கருதி விமான நிலையத்தின் அனைத்து வாயில்களும் மூடப்பட்டுள்ளன.

வெடிப்பு இடம்பெற்ற தையடுத்து, அப்பகுதியில் சில கார்களும் தீ பிடித்து எரிந்தன. விரைந்து வந்த தீ அணைப்பு வாகனங்கள் தீயை கட்டுப்படுத்தியுள்ளன.

இது ஒரு "பயங்கரவாதத் தாக்குதல்". சிந்து மாகாணத்தில் மின் திட்டத்தில் பணிபுரியும் சீன பொறியாளர்களை குறிவைத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென பாகிஸ்தானில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சிந்து மாகாணத்தின் உள்துறை அமைச்சர் சியா உல் ஹசன் இது வெளிநாட்டினரைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பாகிஸ்தானில் உள்ள சீனர்கள் மீது குறிவைத்து நடத்தப்பட்டத் தாக்குதல் என்றும் அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டது.

## இடைத்தரகர்கள் இல்லாவிடின்...

அந்த வகையில் இந்த இடைத்தரகர்கள் தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு அவர்கள் தொடர்பில் ஆராய்ந்து முட்டை விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எடுத்தால் முப்பது ரூபாவுக்கு மீண்டும் முட்டையை வழங்க முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.கடந்த சில தினங்களுக்கு முன்னர், சந்தையில் 28 ரூபா முதல் 32 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட முட்டை, தற்போது 40 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

நாட்டில் தேவையான அளவில் முட்டை உற்பத்தியாளர்கள் உள்ளனர். அவர்கள் இது தொடர்பில் தெரிவிக்கையில், இடைத்தரகர்கள் முட்டைகளைப் பெற்று களஞ்சியப்படுத்துவதாலேயே இந்த விலை அதிகரிப்பு ஏற்படுகிறது என்றனர்.

## இன்றைய பலன்கள்
(08.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
நீங்கள் நிதானமாகவும் பொறுமையாகவும் செயற்பட்டு திட்டமிட்ட செயல்களில் வெற்றி பெறுவீர்கள்.

**ரிஷபம் :**
முயற்சிகளில் தடைகள் காணப்படும். பணிச்சுமை அதிகரிக்க கூடும். யாரிடமும் வீண் விவாதங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

**மிதுனம்:**
நீங்கள் மேற்கொண்ட செயல்களில் எதிர்பார்த்த வெற்றி பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கடகம்:**
புத்திசாலித்தனமாக காரியங்களை செய்தாலும் அவ்வப்போது சிறுசிறு தடங்கல்கள் ஏற்படத்தான் செய்யும்.

**சிம்மம்:**
நினைத்த காரியங்களை நிறைவேற்ற பொறுமையும் நிதானமும் தேவைப்படும்.

**கன்னி:**
நீங்கள் எடுத்த காரியங்களில் சிறு சிறு படங்கள் இருப்பது போல தோன்றினால் முடிவில் வெற்றி வந்தடையும்.

**துலாம்:**
நீங்கள் தொடங்கிய காரியங்களில் முயற்சி செய்து வெற்றி பெற்று புகழும் பொருளும் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:**
உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள தீவிர முயற்சி தேவைப்படும்.

**தனுசு:**
அவசரமாக முடிக்க வேண்டிய சில காரியங்களுக்காக நண்பர்களின் ஒத்துழைப்பை நாட வேண்டியது இருக்கும்.

**மகரம்:**
உங்களுக்கு தடைபட்ட தன வரவு தாராளமாக வந்து சேரக்கூடிய நல்ல வாரமாக இது அமையும்.

**கும்பம்:**
இந்த வாரம் நன்மைகள் அதிகம் நடைபெறும். மனக்குறைகள் தீர்ந்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மீனம்:**
நீங்கள் எடுத்த காரியங்களை யோசித்து செயல்படுத்தினால் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெற்றியை அடையலாம்.

## கட்சியிலிருந்து விலக்க...(02 ஆம் பக்க தொடர்ச்சி)

மட்டுமல்ல கட்சியிலிருந்து அவர்தான், வெளியேறியதாக ஊடகங்களுக்கு கூறுகிறார்.மக்கள் ஆணையை மீறியவர்களுக்கு மக்களே பாடம்புகட்டுவர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது கட்சி அம்பாறை மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில் போட்டியிடும்.

சில மாவட்டங்களில் தனித்தும் இன்னும் சில மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடும். எம்மால் நீக்கப்பட்டவர்களைச் சேர்த்து உருவாக்கப்படும் கூட்டணியில், நாம் சேரமாட்டோம்.

இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்து,ஜனாஸாக்களை எரிப்பதற்கு உதவியவர்கள் உள்ள கூட்டணியிலும் எமது கட்சி இணையாது.

அம்பாறை மாவட்டத்தில்,இவ்விடயம்தான் இழுபறியில் உள்ளது. இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் உள்ள அணியில், நாம் இணையப்போவதில்லை.இவர்களைச் சேர்த்தால் அம்பாறையில் தனித்தே மயில் சின்னத்தில் போட்டியிடுவோம்.

புத்தளம் மாவட்டத்திலும் இந்த நியதியே பின்பற்றப்படும்.இது குறித்து தீர்க்கமான முடிவை எடுக்குமாறு கட்சியின் புத்தளம் மாவட்ட உயர்பீடத்துக்கு அறிவித்துள்ளோம்.

## அரசியல் கட்சிகளுக்கு ... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

அதேவேளை, எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதற்கிணங்க வாக்களிப்பதற்கு செல்வதற்கு தேவையான போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க வேண்டிய விதம் தொடர்பில் அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் அவ்வாறு போக்குவரத்து வசதிகள் தேவைப்படுவோர் எதிர்வரும் 19 க்கு முன்பதாக அதற்கான வேண்டுகோளை விடுக்க வேண்டும் என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தமிழரசுக் கட்சி பொறுப்புக்களில்...

கலை அமுதன் தெரிவித்தார். எனினும், கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவது தொடர்பில் ஆலோசித்து வருவதாகவும் அவர் கூறினார்.

## ரூபவாஹினியில்...

திங்கட்கிழமை தோறும் இரவு 10 மணிக்கு நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

அரசாங்க அதிகாரிகளிடம் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், அரசாங்க நிறுவனங்களின் முடிவுகள் மற்றும் கொள்கைகள் குறித்து நேரடியாக கேள்வி கேட்கப்படும் பொதுமக்கள் தின நிகழ்ச்சி புதன்கிழமை தோறும் இரவு 10 மணிக்கு நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

## கொழும்பில் 162.5 மில்லிமீற்றர்...

நெலுவ பிரதேசத்தில் 109 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை எதிர்வரும் தினங்களுக்கும் தொடரும் என, அந்த திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## ரணிலை இலக்கு வைத்து...

வியலாளர் சந்திப்பில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியின் தலைமை பாதுகாப்பு அதிகாரி உட்பட ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், பொலிஸ் பிரிவுகளுக்கு சமூகமளிக்குமாறு எழுத்து மூலம் அறிவுறுதப்பட்டது.

இது குறித்த தகவல்கள் சமூக ஊடகங்களிலும் இடம்பெற்றிருந்தன. ஆனால் பதில் பொலிஸ் மா அதிபர் அதனை மறுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் திருமதி மைத்திரி விக்ரமசிங்கவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி மாளிகையை தனிப்பட்ட தேவைக்காக பயன்படுத்தவில்லை.

உத்தியோகபூர்வ கடமைகளுக்கு மட்டுமே பயன்படுத்தியதை சுட்டிக்காட்டிய அவர், ஆடம்பர உணவு மற்றும் வெளிநாட்டு சமையல்காரர்களின் சேவைகள் தொடர்பாக வெளியிடப்படும் கூற்றுக்கள் உண்மைக்குப் புறம்பானவை.

அரசியல் வெறுப்புணர்வைத் தீர்த்துக்கொள்ளும் கீழ்த்தரமான அறிக்கைகள் மட்டுமே இவை என்றும் அவர் கூறினார்.

# நகர்வலம்





சத்ய சாயி பாபா (ஸ்ரீலங்கா) அறக்கட்டளையகம் அமைக்கப்பட்டு 45ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு அனுஷ்டான நிகழ்வு, நவராத்திரி 5ஆம் நாளான நேற்று கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது, சாயி அறக்கட்டளையகத்தின் ஸ்தாபகர் அமரர் எஸ். டி. சிவநாயகத்தின் உருவப்படம் தாங்கிய ஞாபகார்த்த சின்னத்தை, சட்டத்துறை கலாநிதி ஜே.எம்.சுவாமிநாதன், அறக்கட்டளையகத்தின் தலைவர் எஸ்.என். உதயநாயகனிடம் வைபவரீதியாக கையளித்தார். நிகழ்வில், பொதுச் செயலாளர் சிவா இராஜஜோதி மற்றும் அறங்காவலர்களான கோபால் ஜீவரட்னம், எம். செல்வராஜா, திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன் ஆகியோரும் பங்கேற்றனர்.

### காங்கேசன்துறை துறைமுகம் நவீன மயப்படுத்தும் திட்டம்

## 61.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்குவதற்கு இந்தியா தீர்மானம்

### 22 டீசல் என்ஜின்களும் நன்கொடை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தை 61.5 மில்லியன் டொலர் செலவில் நவீனமயப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

அது தொடர்பில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டபோது அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், இலங்கை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளி விவகார அமைச்சருடனும் தனித்தனியே சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார். அதன்போது காங்கேசன்துறை துறைமுகம் நவீனமயப்படுத்துவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

அத்துடன் ரயில்வே திணைக்களத்திற்கு 22 டீசல் என்ஜின்களை நன்கொடையாக வழங்குவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளதாக இந்திய வெளிவகார அமைச்சர் ஜெய்சங்கர் பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.



அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள முதலீடுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் கலந்துரையாடியுள்ளார்.

### தேச. மங்கையர்க்கரசியின் ஆன்மீக சொற்பொழிவு



சீரடி சாயிபாபாவின் மகா சமாதி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 12ஆம் திகதி விஜயதசமி தினத்தன்று, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் சமய அனுஷ்டானங்கள் இடம்பெறவுள்ளன.

அன்று காலை 7.00 மணிக்கு மகா ருத்ர யாகபூஜையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். காலை 11.00 மணிக்கு தங்க மகுடாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சூரிய மின் சக்தி அங்குரார்ப்பணமும் இடம்பெறும். நண்பகல் அன்னதானம் நடைபெறும். மாலை 6.00 மணிக்கு சித்திரத் தேர் பவனி ஆரம்பமாகும். 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு கிருபானந்த வாரியார் சுவாமிகளின் வாரிசான கலைமாமணி திருமதி தேச. மங்கையர்க்கரசி, சீரடி சாயி பாபாவின் மகிமை பற்றி உரையாற்றுவார்.

## இஸ்ரேல் படைகளின் அராஜக செயற்பாடுகளை கண்டித்து கொழும்பில் விழிப்புணர்வு பேரணி






**கொழும்பு தினகரன் நிருபர்**

இஸ்ரேல் படைகளின் அராஜக நடவடிக்கைகளால் பலஸ்தீன் மற்றும் லெபனான் ஆகிய நாடுகளில் அப்பாவி மக்கள் வகைதொகையின்றி கொல்லப்படுவதை கண்டித்தும் ஹமாஸ் இயக்கத்தினால் காஸா மக்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட 'அல் அக்ஸா புயல்' எனும் விசேட தாக்குதலை தடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடமாவதையும் முன்னிட்டு படுகொலைகள் தொடர்பான சித்திர படக்கண்காட்சியும் இரங்கள் நிகழ்வும் 'Free Palestine Movement Of Sri Lanka' அமைப்பினால் நேற்று (07) கொழும்பு 07 இலுள்ள பொது நூலக திறந்த வெளி வளாகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான ஈரான் தூதரகத்தின் கலாசார கவுன்சிலர் கலாநிதி பி.எம். குதர்சி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கொல்லப்பட்டு வரும் மக்களின் அவலங்கள் தொடர்பாக அருட்தந்தை லயனல், சிராஸ் யூனுஸ், செனேரா பேர்கெஸ் ஆகியோர் உரை நிகழ்த்தியதுடன் சிறுமிகளான ஜொய் பேர்கெஸ், சிஹானா ஆகியோரும் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர்.

இதேவேளை காஸா மக்களின் துயரங்களை இசை வடிவில் ஒரே பாடலை மூன்று மொழிகளிலும் ஒரே நேரத்தில் பாடி தனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## பேருவளை பிரதேசத்தில் கடும் மழை; தாழ்ந்த இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின

### இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவுகளும் விநியோகம்

பேருவளை பகுதியில் நேற்று (7) அதிகாலை பெய்த கடும் மழை காரணமாக பிரதேசத்தின் தாழ்ந்த பகுதிகள் நீரில் மூழ்கியதோடு போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டன.

பேருவளை நகர சபை பிரதேசத்திற்குட்பட்ட சீனன்கோட்டை பிரதேச வீதிகளிலும் வெள்ள நீர் நிரம்பி வழிந்தன. இதனால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டதோடு பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகங்கொடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சீனன்கோட்டை பிரதேசத்தின் முக்கிய வீதிகளான சீனன்கோட்டை வீதி, ஜாபிர் எவனியூ, சாலி ஹாஜியார் மாவத்தை, ஜாமிஆ நளீமிய்யா வீதி, பிட்டவளை, கருவாத்தோட்டம், ஸ்டேடியம் வீதி, பெரேரா வீதி ஆகியன நீரில் மூழ்கின. இவ்வீதிகளில் பயணிப்போர் மாற்று வீதிகளை பயன்படுத்தியதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.





அதேபோல், வெள்ள நீர் பாடசாலைக்குள் உட்புகுந்ததால் நேற்றைய தினம் அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை நடைபெறவில்லை. நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி நடைபெற்றபோதும் பாடசாலைக்கு குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே வருகை தந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல், பேருவளை நகரசபை பிரதேசத்துக்கு உட்பட்ட மருதானை, மஹகொடை, மஸ்ஸல, பிரதேச தாழ்நிலங்களும் வெள்ளத்தினால் மூழ்கின.

(அஜ்வாத் பாஸி)

## குவைத் நாட்டு உதவியில் வகுப்பறை கட்டடம் திறந்து வைப்பு





அநுராதபுரம் கலன்பிந்துனுவெவ கல்வி வலயத்திலுள்ள மிஹிந்தலை அ/கனந்தர கட்டுகெலியாவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் குவைத் நாட்டின் " Islamic care society " நிதி உதவித் திட்டத்தின் ஊடாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நான்கு வகுப்பறைகளைக் கொண்ட கட்டடத்தின் திறப்பு விழா (06) வைபவரீதியாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென் கிழக்கு பல்கலைக்கழக அரபுத்துறை, இஸ்லாமிய கற்கைகள் பீட தலைவர் அஷ்ஷெய்க் முனாஸ் மற்றும் அல்ஹிமா இஸ்லாமிய சேவை அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.ஏ. நூருல்லாஹ் (நளீமி) உள்ளிட்ட அதிதிகளினால் புதிய வகுப்பறை கட்டடம் திறந்து வைக்கப்படுவதை படங்களில் காணலாம். (படங்கள்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)

### சிங்கள மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றி

## அல் பஹ்ரியா மாணவி 09 பாடங்களிலும் 'A' சித்தி

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



பாணந்துறை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை மாணவி எம்.எப். பாத்திமா பர்வீன் அண்மையில் வெளியான கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் சிங்கள மொழி மூலம் தோற்றி ஒன்பது பாடங்களிலும் 'ஏ தர' சித்திகளுடன் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் சிங்கள மொழி மூலமான கடந்த கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் ஒன்பது ஏ தர சித்தியாக மாணவி பர்வீனின் சித்தி அமைந்துள்ளது. இவர் பாணந்துறை அம்பலந்துவ முஹம்மத் பாயிஸ் பாத்திமா ரிஹானா தம்பதிகளின் புதல்வியாவார்.

இப்பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக சிங்கள மொழி மூலம் மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவி பர்வீனுக்கு அதிபர் எம்.ஐ.எம்.ரிஸான் உள்ளிட்ட பாடசாலை சமூகமும் பெற்றோர், பழைய மாணவர்களும் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

### கலாலயா இசை நடனப்பள்ளியின்

## பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், கற்கைகளுக்கான வித்தியாரம்பம்



கலாலயா இசை நடனப்பள்ளியின் நவராத்திரி விழா நாளை 9ஆம் திகதி புதன்கிழமை, பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள கலாலயா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1948 ஆம் ஆண்டு, இலங்கை தமிழ் மாதர் சங்கத்தினால் நிறுவப்பட்ட "கலாலயா இசை நடனப்பள்ளி" ஏறத்தாழ 115 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

இச்சங்கத்தின் புதிய தலைவியாக திருமதி யாழினி குக் பொறுப்பேற்றுள்ளதுடன், இசை நடனப் பள்ளியின் தற்போதைய அதிபராக திருமதி கௌரிசங்கர் சோமசுந்தரமும் உபஅதிபராக திருமதி அதிரூபினி தியாகராஜாவும் செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை விஜயதசமியன்று காலை 10.00 மணிக்கு பரதநாட்டியம் மற்றும் கர்நாடக சங்கீதம் பயிலவிரும்பும் மாணவர்களுக்கு வித்தியாரம்பம் செய்யப்படும்.

இப்பள்ளியில் சேர விரும்பும் மாணவர்கள், 12ஆம் திகதிக்கு முன்னர், 0777557051 (அதிபர்), 0777885434 (உப அதிபர்) என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொண்டு முன்கூட்டியே தங்கள் பெயர் விபரங்களை பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

## போதையில் நடமாடியவர் முதலை தாக்கி உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஸ்ரீபுர கெமுனுபுர மொர ஒயவில் முதலை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். மேற்படி மொர ஒய பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மொர ஒயவுக்கு அருகில் ரஞ்சித் மங்கட என்கின்ற பகுதியில் மூவர் ஒன்றாக அமர்ந்து மது அருந்தியுள்ளனர். அவர்களில் ஒருவர் இறைச்சி எடுத்துக்கொண்டு வருவதற்காக தனது வீட்டுக்கு செல்வதற்கு ஓடையை கடக்கும் போது முதலைதாக்கியுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.


NILIS

தேசிய நூலக மற்றும் தகவல் அறிவியல் நிறுவனம்
கொழும்பு பல்கலைக்கழகம்

**பட்டப்பின்படிப்பு/ டிப்ளோமா/ உயர் சான்றிதழ் கற்கை நெறிகளை ஆரம்பித்தல்**
**2024/ 2025ம் கல்வியாண்டு**

| Course | Duration | Medium | Course Fee (Rs.) |
|---|---|---|---|
| 1. MPhil / PhD | 2 / 3 Years | English | 300,000 |
| 2. Master in Information Management (MIM) | 18 Months | English | 180,000 |
| 3. Master in Teacher Librarianship (MTL) | 18 Months | Sinhala/ English | 128,000 |
| 4. Postgraduate Diploma in Library and Information Sciences (PGLIS) | 01 Year | | 100,000 |
| 5. Postgraduate Diploma in Information Management (PGDIM) | 01 Year | | 100,000 |
| 6. Higher Diploma in Library and Information Management II (HDLIM II) | 01 Year | Sinhala / Tamil | 49,900 |
| 7. Higher Diploma in Library and Information Management I (HDLIM I) | 01 Year | | 39,500 |
| 8. Diploma in Library and Information Management (DLIM) | 01 Year | | 29,000 |
| 9. Diploma in School Librarianship (DSL) | 01 Year | | 29,000 |
| 10. Diploma in Public Librarianship (DPL) | 01 Year | | 29,000 |
| 11. Advanced Certificate in Librarianship (ACL) | 06 Months | | 25,000 |

போதுமான எண்ணிக்கையிலான மாணவர்கள் பதிவு செய்தால் மாத்திரமே சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூலமான எந்த கற்கை நெறிகளும் நடத்தப்படும்.

விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு மற்றும் உள்நுழையும் தகைமைகள் உள்ளடங்கலான மேலதிக தகவல்களுக்கு எமது இணையதளமான nilis.cmb.ac.lk இற்கு தயவு செய்து பிரவேசியுங்கள்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024 ஒக்டோபர் 25ம் திகதி அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். கற்கை நெறிகள் 2024 நவம்பரில் ஆரம்பமாகும்.

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்**
**தேசிய நூலக மற்றும் தகவல் அறிவியல் நிறுவனம்**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**
**கொழும்பு - 03**
**0112507150/ 0701478679**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.10.06
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5617 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,760,452.00
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 9 5 2 7 6 0

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 192 — ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 2 7 6 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3859 — சீட்டிழுப்பு திகதி 2024.10.06 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,107,854.80
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 31 58 62 63 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 57593

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1965 — 2024.10.06 — 47486 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 448,622,770.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 15 — வெற்றி இலக்கங்கள் 05 48 76 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.10.06 — சீட்டிழுப்பு இலக்கம் 443
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 5 8 4 8 1 0
L7 எழுத்து K
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,774,128.16

ராசி சுப பலன் — திகதி 2024.10.06 — சீட்டிழுப்பு இலக்கம் 926 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,501,981.20
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 16 19 28 60 — தனயோக இலக்கம் 40192 — நாளுக்கான விதி எண் 18

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1647 — 2024.10.06 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,419,208.48
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 14 20 28 60 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 65755

# செபமாலையின் வல்லமையும் எண்ணற்ற புதுமைகளும்

## கத்தோலிக்கத் திருச்சபை செபமாலை மாதா திருவிழாவை நேற்று சிறப்பித்தது

கத்தோலிக்கத் திருச்சபை செபமாலை மாதாவுக்கு ஒக்டாபர் மாதத்தை அர்ப்பணித்துள்ளது.

கத்தோலிக்கத் திருச்சபையில் செபமாலை செபிக்கும் பழக்கம் என்பது ஒரு உன்னதமான பண்பாகும். தொடக்க கால கிறிஸ்தவர்கள் இயேசு கற்றுத் தந்த இறைவேண்டலையும் அன்னை மரியாளை வானதூதர் வாழ்த்திய "அருள் நிறைந்த மரியே" என்ற வாழ்த்துச் செபத்தையும் மிகச் சிறந்த உன்னதமான செபமாக பயன்படுத்தி வந்தனர்.

இன்றைய காலத்தில் நாம் செபிக்கும் செபமாலையானது 1214 ஆம் ஆண்டு வழக்கத்திற்கு வந்தது என்பதை திருச்சபையின் மரபு வழியாக அறிய முடிகின்றது.

செபமாலையானது ஆல்பிஜென்சியன் என்ற தப்பறைக் கொள்கையை எதிர்த்துப் போராடுவதற்காக அன்னை மரியாளால் புனித டொமினிக்குக்கு வழங்கப்பட்டது.

திருச்சபையின் மற்றொரு மரபுப்படி மத்திய காலங்களில் துறவிகள் தினந்தோறும் 150 திருப்பாடல்களை செபிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

படிப்பறிவில்லாத சாதாரண பொதுநிலை மக்களுக்கு இது சாத்தியமற்றதாக இருந்தது. எனவே துறவிகளைப் போல அவர்களும் செபமாலை செபிக்கும் வகையில் 150 "அருள்நிறைந்த மரியே" செபத்தை எண்ணிக்கையாகக் கொண்ட செபமாலை உருவாக்கப்பட்டது. இவைதான் செபமாலை உருவானதற்கு அடிப்படையாக இருந்தன.

செபமாலை என்பது ஒரு ஆற்றல் வாய்ந்த ஆயுதமாகும். திருச்சபையில் பல்வேறு புனிதர்கள் செபமாலையின் வல்லமையை சான்று பகர்ந்துள்ளனர். புனித இரண்டாம் ஜோன்போல் "நான் செபித்த செபங்களில் செபமாலை தான் மிகச்சிறந்த செபம்" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் தன் வாழ்நாள் முழுவதும் செபமாலை செபித்து தான் புனித வாழ்வு வாழ முயற்சி செய்துள்ளார்.



அன்னை மரியின் வழியாக வளர்ந்த புனிதத்தின் முலமாகத்தான் அவர் திருச்சபையில் மிகச்சிறந்த புனிதராக உயர்ந்துள்ளார்."என்னுடைய மறையுரையை விட நான் செபிக்கும் செபமாலையால்தான் பல ஆன்மாக்களை மனமாற்றம் அடைய செய்துள்ளேன்" என்று புனித பெர்னார்ட் கூறியுள்ளார்.

கல்லான இதயத்தைக்கூட கனிவான இதயமாக மாற்றக்கூடிய ஆற்றல் செபமாலைக்கு உள்ளது.திருச்சபையில் அங்கீகாரம் பெற்ற பக்தி முயற்சிகளில் ஒன்றான செபமாலை ஜெபிப்பதன் வழியாக எண்ணற்ற வல்ல செயல்கள் நடந்துள்ளன. பெரும்பாலானவர்கள் கண்ணீருடன் செபமாலை ஜெபித்து தங்கள் வாழ்வில் வெற்றியடைந்துள்ளனர் என்பதை மறுக்க முடியாது. இவ்வாறாக செபமாலையின் வல்லமை எண்ணற்ற புதுமைகளைச் செய்துள்ளது.

எனவேதான் திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் "திருஅவையில் அங்கீகாரம் பெற்ற பக்தி முயற்சிகளில் செபமாலையைப் போல் இவ்வளவு அதிக அற்புதங்களை வேறு எந்த பக்தி முயற்சியும் நிகழ்த்தவில்லை" என்று கூறியுள்ளார். மேலும் புனித பியோ "செபமாலை நம்முடைய ஆயுதம்" என்றும் கூறியுள்ளார். எனவே செபமாலை செபிப்பதன் வழியாக அன்னை மரியாளின் வழிகாட்டுதலை பெறுவோம்.

செபமாலை நற்செய்தியின் சுருக்கமாக இருக்கின்றது. இயேசுவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை மறை உண்மையின் வழியாக தியானித்து ஜெபமாலை செபிக்கப்படுகின்றது.

எனவேதான் கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி ஏடு "செபமாலை நற்செய்தியின் சுருக்கம்" என சுட்டிக்காட்டுகின்றது.

செபமாலையை நாம் ஒவ்வொரு நாளும் செபிக்கும் பொழுது நம் உள்ளத்தில் அமைதியைப் பெறுகின்றோம். அன்னை மரியாளின் பரிந்துரையை உணர்கின்றோம். நம்முடைய மனதை ஒருமுகப்படுத்தி தியானிக்கிறோம். இப் பேறுபெற்ற செபமாலையை நாம் கொடையாக பெற்றிருப்பது அன்னை மரியாள் நம்மீது கொண்ட அன்பின் காரணமாகும்.

செபமாலை செபிப்பதன் வழியாக அன்னை மரியாள் தொடர்ந்து நமக்கு பரிந்துரை செய்து வருகிறார். புது வாழ்வையும் புது மாற்றத்தையும் நமக்கு வழங்கி வருகின்றார். எனவே செபமாலை செபிக்கும் மக்களாக மாறி புது வாழ்வைப் பெற்றுக் கொள்ளத் தேவையான அருளை வேண்டுவோம்.

**திருத்தொண்டர்
குழந்தை இயேசு பாபு**






# கல்லடி புனித வேளாங்கண்ணி ஆலய திருவிழா



மட்டக்களப்பு, கல்லடி புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்றது. ஆலய பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நவ நாட்கள் இடம்பெற்று அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றதனைத் தொடர்ந்து. மன்னார் மறை மாவட்ட அருட்தந்தை அன்ரனி றொபர்ட் அடிகளாரின் தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்னையின் திருச் சொரூப ஆசீருடன் ஆலய வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது.

படங்கள்;கல்லடி குறூப்நிருபர்

இவ்வார புனிதர்

# புனித பிரான்சிஸ் அசிசியார்

புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவை கத்தோலிக்கத் திருச்சபை கடந்த 4ஆம் திகதி சிறப்பித்தது. அவருடைய இயற் பெயர் ஜோவானி டி பியத்ரோ டி பெர்னார்தோனே.

1181 ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் பெரூசியா மாகாணத்தில் அசிசி என்ற பட்டணத்தில் இவர் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் பெரிய செல்வந்தர்கள். இவருடைய தந்தை பெர்னார்தோனே பட்டு ஆடைகள் விற்பனை செய்து வந்த ஒரு பெரிய வணிகர். சீமான். சிறு வயதில் இருந்தே ஜோவானி செல்வச் செழிப்பில் வாழ்ந்தார்.

தந்தை பெர்னார்தோனே தன் மகன் ஜோவானியுடைய நடையுடை பாவனைகளைக் கண்டு தன் மகனை "பிரான்சிஸ்கோ" என்று அழைத்தார். அதன் பொருள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர். என்பதாகும்.பிரான்சிஸ்கோ இளம் வயதில் அங்கிருந்து ஒருமுறை உரோமாபுரிக்குச் சென்றார். செல்வமும் சிறப்பும் வாய்ந்த உரோம் நகரில் கூட பட்டினியால் வாடும் ஏழைகள் பிச்சை எடுப்பதைக் கண்டார். அவர்களுடைய நிலையும் துன்பமும் அவருடைய உள்ளத்தைத் தொட்டது.

இயேசுவின் வார்த்தைகளான "அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்து: தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்; தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது." (லூக்கா 6:20) என்ற வார்த்தை அவரது உள்ளத்தை உறுத்தியது. அவருடைய கற்பனைகளைக் கிளறியது.

இயேசு அவர் உள்ளத்தில் பேசுவதை உணர்ந்தார். அணிந்திருந்த பட்டாடைகளைக் களைந்து விட்டு ஏழைகளில் ஒருவராக பிச்சை எடுக்க ஆரம்பித்தார். வீடு திரும்பிய பின்பு விலை உயர்ந்த ஆடைகளை எடுத்து ஏழைகளுக்குக் கொடுத்து மகிழ்ந்தார்.

இதைப் பார்த்த அவருடைய தந்தைக்கு சிறிதும் பிடிக்கவில்லை. தன் மகன் தனக்கு விரோதமாக செயற்பட்டதைக் கண்டித்தார். ஆனால் இளம் ஜோவானியின் மனம் தன்னையே வெறுமையாக்கிக் கொண்ட இயேசுவின் மீதும் ஏழைகள் மீதும் சென்றது.

ஒருநாள் ஜோவானி வீட்டில் இருந்த உடைகளை எடுத்து ஏழைகளுக்குக் கொடுப்பதைக் கண்ட அவருடைய தந்தை மிகுந்த கோபத்துடன் தன் மகனை இழுத்துக் கொண்டு அசிசி நகரில் வாழ்ந்த ஆயரின் முன்கொண்டு நிறுத்தினார். "இவன் என் வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்து மற்றவர்களுக்குக் கொடுத்து குடும்பத்தை பாழாக்குகிறான்" என்று தன் மகனைப் பற்றி குறை கூறினார், குறையைக் கேட்ட ஆயர் இளைஞனுக்கு ஒழுக்கமாய் இருக்க ஆலோசனை சொல்ல ஆரம்பித்தார்.

உடனே ஜோவானி தான் அணிந்திருந்த உடையை முற்றும் கழற்றி தன் தந்தையின் பாதத்தில் போட்டுவிட்டு நிர்வாணமாய் நின்றார். இனிமேல் உங்கள் உடைகள் எனக்கு அவசியமில்லை என்று முழு நிர்வாணமாய் அங்கிருந்து புறப்பட ஆரம்பித்தார். இதைக் கண்ட ஆயர், தான் மேலே போட்டிருந்த போர்வையைக் கழற்றிக் கொடுத்து ஜோவானி தன் மானத்தை மறைத்துக் கொள்ள உதவினார்.

கடவுள் பணிக்குத் தம்மை அர்ப்பணித்து, இயேசுவை முழுமையாகப் பின்பற்றத் துணிந்துவிட்ட பிரான்சிஸ் தம் நகராகிய அசிஸியின் மலைப்பகுதிகளில் நடந்து இறைவனின் புகழைப் பாடிச் சென்றார். ஒருநாள் வழிப்பறித் திருடர்கள் சிலர் அவரை நிறுத்தி, "நீ யார்?" என்று கேட்டதற்கு பிரான்சிஸ் பதிலாக, "நான் மாபெரும் அரசரின் தூதுவன்" என்றுரைத்தார். அவர்கள் அவரை இகழ்ச்சியோடு நோக்கி, அவரிடமிருந்ததைப் பிடுங்கிக் கொண்டு, அவரை அருகிலிருந்த குழியில் தள்ளிவிட்டுச் சென்றனர்.



அரைநிர்வாணமாகக் குளிரில் வாடிய பிரான்சிஸ் அண்மையிலிருந்த ஒரு துறவியர் இல்லத்தை அடைந்து, அங்கு கொஞ்சநாள் அடுக்களை வேலை செய்தார். அங்கிருந்து கூபியோ என்னும் ஊருக்குச் சென்றார். அவருடைய நண்பர்கள் சிலர் அவர்மீது இரங்கி, அவருக்கு ஆடை ஊன்றுகோல் ஆகியவற்றைக் கொடுத்தனர்.

பின்னர் பிரான்சிஸ் அசிசி நகருக்குத் திரும்பினார். தெருவெல்லாம் நடந்துசென்று, மக்களிடம் புனித தமியானோ கோவிலைச் செப்பனிடுவதற்குக் கற்கள் தருமாறு வேண்டினார். கிடைத்த கற்களைச் சுமந்து கோவிலுக்குக் கொண்டுபோய், தம் கைகளாலேயே அதைச் செப்பனிட்டார். அதுபோலவே, கைவிடப்பட்ட நிலையில் கிடந்த வேறு இரண்டு கோவில்களையும் அவர் செப்பனிட்டார்.

சிலுவையில் தொங்கிய இயேசுவைப் போல் ஜோவானி இயேசுவையே அணிந்து கொண்டு தமது தந்தையையும் தாயையும் செல்வம் நிறைந்த வீட்டையும் துறந்துவிட்டு வெளியே நடந்தார். அன்று முதல் இயேசுவிக்காகவே வாழ்ந்த அவர் திருச்சபையில் ஒரு புரட்சிகரமான தத்துவத்தைக் கற்றுக்கொடுத்தார். பிரான்சிஸ்கு சபை என்னும் கிறிஸ்தவ துறவற அமைப்பை நிறுவினார்.

1224ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் பிரான்சிஸ் மூன்று சகோதரர்களோடு டைபர் ஆற்றுக்கும் ஆர்னோ ஆற்றுக்கும் இடையிலான ஒரு மலைப்பகுதியில் லா வேர்னா என்னும் இடத்துக்குச் சென்றார். அங்கு புனித மிக்கேல் விழாவுக்கு முன்னால் நாற்பது நாட்கள் உபவாசம் இருக்கும்படி அப் பயணத்தை மேற்கொண்டார்.

லா வேர்னாவில் தியானத்தில் ஈடுபட்டிருந்தபோது, செப்டம்பர் 14ஆம் திகதி (திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள்) ஒரு காட்சியைக் கண்டார். துன்பங்கள் அனுபவித்து, சிலுவையில் உயிர் துறந்த இயேசுவின் கைகளும் கால்களும் ஆணிகளால் துளைக்கப்பட்டு, விலா ஈட்டியால் குத்திக் கிழிக்கப்பட்டதால் இயேசுவுக்கு ஐந்து காயங்கள் ஏற்பட்டிருந்தன. பிரான்சிஸ் சிலுவையில் உயிர்துறந்த இயேசுவை முழுமையாகப் பின்பற்றிச் செல்ல விரும்பினார். எனவே இயேசுவின் துன்பங்களில் தாமும் பங்கேற்க வேண்டும் என்று உளமார விரும்பி இறைவேண்டுதல் செய்தார்.

அவரது வேண்டுதல் கேட்கப்பட்டது. அவரது உள்ளங்கைகளிலும் உள்ளங்கால்களிலும், விலாவிலும் இயேசுவின் காயங்கள் போன்ற காயங்கள் தோன்றின என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவற்றில் இரத்தம் வழியும்போது மற்றவர் அறியாதபடி அவர் துணியால் மறைத்துக்கொள்வாராம்.

"ஆண்டவரின் கரம் பிரான்ஸிசின் மேல் வைக்கப்பட்டது. ஒரு தேவ தூதர் காட்சியில் தோன்றி பிரான்ஸிசிடம் பேசினார். அப்போது பிரான்சிசின் உடல்மீது இயேசுவின் திருக்காயங்களை தேவ தூதர் பதித்தார். அதன் பின் பிரான்ஸிஸ் இத்தோல் ஏட்டின் மறுபுறத்தில் இறைபுகழைத் தம் சொந்தக் கையால் எழுதினார். தம்மீது கடவுள் பொழிந்த எல்லா நன்மைகளுக்கும் அவர் ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்."

தாம் இறப்பதற்கு முந்தின நாள் மாலை நேரம் பிரான்சிஸ் தம் சகோதரர்களிடம் அப்பம் கொண்டுவரச் சொன்னார். அவரோடு கூட இருந்த சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் அப்பத்திலிருந்து ஒரு சிறு துண்டைப் பிட்டுக் கொடுத்தார். இயேசு, தாம் துன்பங்கள் அனுபவித்து, சிலுவையில் அறையுண்டு உயிர் துறந்தற்கு முந்தின நாள் தம் சீடர்களோடு பந்தியமர்ந்து, அவர்களோடு அப்பத்தைப் பகிர்ந்துகொண்டது போலவே பிரான்சிசும் செய்ய விரும்பினார். அப்பத்தைப் பகிர்ந்து கொண்டதும் பிரான்சிஸ் தம் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் இறுதி ஆசி வழங்கினார். "உலகில் நான் செய்ய வேண்டிய பணி முடிந்தது. நீங்கள் ஆற்ற வேண்டிய பணி யாதென்று உங்களுக்கு இயேசு கிறிஸ்து கற்பிப்பாராக" என்று கூறினார்.

எல்லா நேரத்திலும் சுவிஷேசத்தை பிரசங்கம் செய்யுங்கள், தேவைப்படும்போது வார்த்தைகளை பயன்படுத்துங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**எல். எஸ்**

# "கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்"

"கடவுள் தரும் சோதனைக்கும் மனைவி தரும் சோதனைக்கும் உள்ள வேறுபாடு என்ன?" என்று ஒருவரிடம் கேட்டதற்கு அவர், "மனைவியே கடவுள் தந்த சோதனை தானோ!" என்றார், திருமண வாழ்வு ஒரு சிலருக்குச் சோதனையாகவும் வேறு சிலருக்கு வேதனையாகவும் உள்ளது. இச்சோதனையையும் வேதனையையும் சாதனையாக மாற்றுவதில்தான் திருமண வாழ்வின் வெற்றி அமைந்துள்ளது. திருமணத்தின் மாண்பையும் அதன் முறிவுபடாத தன்மையையும் இந்த ஞாயிறு வழிபாடு எடுத்துரைக்கின்றது.

திருமணம் மனிதத் தன்மையை மட்டுமல்ல, தெய்வீகத் தன்மையையும் உடையது. அது படைப்பின் தொடக்கத்திலிருந்தே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புனிதமான அமைப்பு. கடவுள் தாம் படைத்த அனைத்தும் நன்றாக இருந்ததைக் கண்டார். ஆனால் மனிதன் தனிமையாக இருப்பது நன்றன்று (தொநூ 2:18) என்பதைக்கண்ட அவர், ஆணுக்குச் சரிநிகராகப் பெண்ணைப் படைத்தார். மனித இனம் ஆணினமோ பெண்ணினமோ அல்ல; மாறாக ஆணினமும் பெண்ணினமும் இணைந்த கலப்பினமே மனித இனமாகும், ஆணும். பெண்ணும் ஒன்றாக இணைந்தே கடவுளின் சாயலைப் பிரதிபலிக்கின்றனர். ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவரைச் சார்ந்தும் தழுவியும் செயல்படுவதே கடவுளின் திட்டமாகும்.



தம்பதியர்கள் என்றென்றும் நண்பர்களாகத் திகழ வேண்டும். ஒவ்வொருவரும் தம் இதயக் கிடக்கையில் உள்ள ஆழமான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நண்பர்கள் காதலர்களாக மாறுவதைவிட காதலர்கள் நண்பர்களாக மாறுவதே முக்கியம்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள உறவு மிகவும் நெருக்கமானது. பிரிக்க இயலாதது. உண்மையான அன்பு நிரந்தரமானது. சாகாத் தன்மையுடையது கிறிஸ்து தம்மவரை இறுதிவரை அன்பு செய்தார் (யோவா 1:3; 1 ); தம்மவருடன் உலகம் முடியும் வரை எந்நாளும் உடனிருக்கிறார் (மத் 24:30).

மணமுறிவு கடவுளின் திட்டத்திற்கு முரணானது. மணமுறிவை வெறுப்பதாகக் கடவுள் பழைய உடன் படிக்கையில் குறிப்பிடுகிறார் (மலா 2:1516) மணவிலக்குச் சான்றிதழ் கொடுத்து மனைவியை விலக்கிவிட மோசே அனுமதி வழங்கியது மக்களின் கடின உள்ளத்தின் பொருட்டேயாகும்.

மணமுறிவினால் தடம்புரண்ட திருமண வாழ்வைக் கிறிஸ்து மீண்டும் அதன் தொடக்க நிலைக்குக் கொண்டுவந்து, "கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" (மாற் 10:9) என்று கண்டிப்பான கட்டளையைக் கொடுத்தார்.

கடவுள் மனிதரை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். இது படைப்பின் மறைபொருள். ஆண் கிறிஸ்துவாகவும் பெண் திருச்சபையாகவும் மாறுகின்றனர். இது மீட்பின் மறைபொருள். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உடன்படிக்கை கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உடன்படிக்கையில் ஊன்றி. அதற்குச் சாட்சியம் பகர்கிறது (எபே 5:2532).

இவ்வாறு படைப்பிலும் மீட்பிலும் திருமண அன்பு கடவுளின் நிலையான அன்பிற்கு இலக்கணமாய் அமைந்துள்ளது. மணமுறிவை நாடும் தம்பதியர் கடவுளின் உடன்படிக்கையை முறித்து கடவுளுக்கே துரோகம் செய்கின்றனர், திருமண அன்பு கணவன் மனைவி என்ற குறுகிய வட்டத்தில் முடிவடையாது. அதன் மூன்றாம் பரிமாணமாகிய குழந்தைச் செல்வத்தில் முழுமையடைகிறது.

குழந்தையானது மணமக்களின் கூட்டொருமை; அவர்களுடைய அன்பின் நிலையான நினைவுச் சின்னம். நல்ல மனைவியும் நல்ல மக்களும் ஆண்டவர் தமக்கு அஞ்சி நடப்போருக்கு அருளும் பேறு என்று ஞாயிறு பதிலுரைப் பாடல் கூறுகிறது. (திபா 128:3). திருமணத்தின் முறிவுபடாத தன்மையைப் பறைசாற்றிய உடனே, கிறிஸ்து குழந்தைகளை அரவணைத்து அவர்களுக்கு ஆசி வழங்குவது குறிப்பிடத்தக்கது (மாற் 10:1318).

அன்பிலே இருவகை உண்டு. ஒன்று ஆள விரும்புகின்ற அன்பு.மற்றொன்று ஆட்பட விரும்புகிற அன்பு. ஆள விரும்புகிற அன்பு தன்னலமிக்க அன்பு, பிறரைப் பயன்படுத்தும் அன்பு. ஆட்பட விரும்புகிற அன்பு தியாகமிக்க அன்பு, பிறருக்குப் பயன்படுகின்ற அன்பு. கிறிஸ்துவின் அன்பு ஆளவிரும்புகிற அன்பு அல்ல, ஆட்பட விரும்புகின்ற அன்பு. "மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மாற் 10:45), தம்பதியர்களிடையே கிறிஸ்துவின் தியாகமிக்க அன்பு இருந்தால் நீதிமானின் பொறுமையையும் கடவுள் பக்தியையும் கடவுள் பயமற்றவர்கள் இழித்துரைக்கின்றனர், நீதிமானுக்கு எதிர் காலம் இல்லை என்று ஏளனம் செய்கின்றனர். ஆனால் கடவுள் நீதிமான்களை எல்லாவிதத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கிறார். "செருக்குற்றோர் எனக்கு எதிராக எழுந்து என் உயிரைப் பறிக்கப் பார்க்கின்றனர். கடவுள் எனக்குத் துணைவராய் இருக்கிறார்" (திபா 54:34), தீமைக்குத் தீமை செய்பவர்களுக்கு கிடைப்பது ஒரு நாள் இன்பம், தீமையைப் பொறுத்துக் கொள்பவர்களுக்குக் கிடைப்பதோ நிரந்தர இன்பம்.

**அருட்பணி வை. இருதயராஜ்**

# கிழக்கின் குரல்



## கிழக்கு ஆளுநரை சந்தித்த ஆதிவாசிகள் சங்கத்தினர்

### காணிகளை மீட்டுத் தருமாறு கோரிக்கை

(ரொட்டவெவ குருப் நிருபர்)



திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட நல்லூர் மற்றும் சந்தோசபுரம் பகுதிகளிலுள்ள தமது காணிகளை மீட்டுத் தருமாறு ஆதிவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நல்லூர் பிரதேசத்திலுள்ள ஆதிவாசிகள் சங்கத்தின் தலைவர் கனகரட்ணம் தலைமையிலான குழுவினர், இன்று (07) கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்ன சேகரவை சந்தித்ததுடன், தமது பாரம்பரிய சம்பிரதாயங்களை நிறைவேற்றிவிட்டு தமது ஆசீர்வாதங்களையும் தெரிவித்தனர்.

இதனையடுத்து, புதிய அரசாங்கத்தின் மூலம் தமது நிரந்தர தீர்வு வழங்கப்படவேண்டுமென ஆதிவாசிகள் பிரச்சினைகளுக்கு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், இப் பிரதேச மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றினை கையளித்தனர்.

இதன்போது, இந்த அரசாங்கத்தினால் அனைவருக்கும் சமமாக நீதி வழங்கப்படுவதுடன் காணிப் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வினையும் பெற்றுக் கொடுப்பதாக கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்ன சேகர உறுதியளித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில்

## முன்னாள் அமைச்சர் மன்சூரின் மகளுக்கு ஐ.ம.சக்தியில் போட்டியிட அழைப்பு

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

பாராளுமன்ற தேர்தலில், திகாமடுல்ல மாவட்டத்தில் களமிறங்க கல்முனை தொகுதியின் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் புதல்வி மர்யம் மன்சூர் நளீமுதீனுக்கு ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பாக, கட்சியின் செயற்குழுவுக்கும் மர்யம் நளீமுதீனுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை காரியாலயத்தில்(05) நடைபெற்றது. இதன்போது, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐ.ம.ச சார்பில் திகாமடுல்ல மாவட்டத்தில் மரியம் நளீமுதீனை வேட்பாளராக அறிவிக்க செயற்குழு முடிவெடுத்துள்ளது. இக் கலந்துரையாடலில், மரியம் நளீமுதீன் தெரிவிக்கையில்,

தேர்தலில் நான் நேரடியாக நிற்பதற்கு மன்சூரின் மகள் என்ற தகுதி மட்டும் போதுமா? என்ற கேள்வி எனக்குள் இருக்கிறது. கடந்த பல வருடங்களாக ஊரை விட்டு வெளிநாட்டில் வாழ்கிறேன்.

முன்னால் அமைச்சர் மன்சூரின் மகள் என்ற வகையிலும், முகநூல் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக பலருக்கு என்னை தெரியுமே தவிர நேரடியான அறிமுகம் இல்லை.

என்னால் முடிந்த சிறு உதவிகளை ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேசன் மூலம் செய்து வந்தாலும், பாரிய பிரச்சினைகள் எங்கள் பிரதேசத்திலே இருக்கின்றன. அவற்றை அரசியலுக்கு அப்பால் வெளியில் நின்று தீர்த்து வைக்க நடவடிக்கைகள் எடுக்கலாமா? என்று நான் பல எத்தனிப்புக்களை செய்து வருகிறேன். மக்களுக்கு தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன.

எனது அரசியல் பிரவேசம் எனது சமூகப் பணிகளை தொடர்வதற்கு தடையாக அல்லது இடைவெளியை ஏற்படுத்தி விடுமோ? என நான் அஞ்சுகிறேன். அரசியலில் பிரவேசிப்பதற்காகவே இந்த பணிகளை முன்னெடுத்ததாக பிழையாக தப்பெண்ணத்தை உருவாக்கிக் கொள்வார்கள். ஆகவே இப்போதைய சூழ்நிலையில் நான் அரசியலை தவிர்த்துக்கொள்ள விரும்புவதாக தெரிவித்தார்.

## அர் ரஹீமிய்யா வித்தியாலய மாணவி தமிழ் தினப் போட்டியில் வெற்றி

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)



அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி அர் ரஹீமிய்யா வித்தியாலயத்தில், தரம் 07இல் கல்வி கற்கும் மாணவி அஸ்ரப் பாத்திமா, அகில இலங்கை தேசிய தமிழ் தினப் போட்டியில் வாசிப்பு பிரிவு 02இல் பங்குபற்றி 03ஆம் இடத்தை பெற்றுள்ளார்.

இப் போட்டி, கொழும்பில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றுள்ளது.

அஸ்ரப் பாத்திமா இதற்கு முன்னர் நடைபெற்ற பல போட்டிகளில் பங்குபற்றி முதல் நிலைகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம் மாணவியை சிறப்பாக வழிநடத்திவரும் அதிபர், பயிற்றுவித்த ஆசிரியர், பெற்றோர்கள் அனைவருக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## முதலாவது வேட்புமனுவை தாக்கல் செய்த தேசிய மக்கள் முன்னணி



(மட்டக்களப்பு குறுப் நிருபர்)

பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

அதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவதாக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி நேற்று (07) நியமன பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது.

அத்துடன், வி.லவக்குமார் தலைமையிலான சுயேட்சை குழுவொன்றும் தமது நியமனப் பத்திரத்தை நேற்று (07) தாக்கல் செய்ததாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ஜே.ஜே. முரளிதரன் தெரிவித்தார்.

## குடிசன தொகை மதிப்பீட்டு செயற்றிட்டம் அங்குரார்ப்பணம்



கிண்ணியா தினகரன் நிருபர்

கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் குடிசன தொகை மதிப்பு செயற்றிட்டம் திருகோணமலை மாவட்ட செயலாளரினால் திங்கட்கிழமை (07) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது திருகோணமலை மாவட்ட செயலாளர் சமிந்த ஹெட்டியாராச்சி, கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம்.கனி, மாவட்ட செயலக புள்ளி விபரவியலாளர், புள்ளி விபரவியல் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட செயலக புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தொகை மதிப்பீட்டு செயற்றிட்டத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகதர்களும் கலந்து கொண்டனர்.

## உலக சாதனை படைத்த கிண்ணியா சிறுவன்

(கந்தளாய் தினகரன் நிருபர்)



உலக சாதனை படைத்த கிண்ணியா குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த சிறுவனை கிழக்கு மாகாண ஆளுநர் நேரில் சந்தித்து தனது வாழ்த்தையும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தை (UK) தலைமையகமாக கொண்ட Worldwide Book of Records நிறுவனத்தினால் உலக சாதனையாளர்களை இனம் காண்பதற்கான போட்டியில் கலந்துகொண்ட 4 வயது சிறுவனே இவ்வாறு சாதனை பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

பத்தின் 100 ஆம் அடுக்கு வரை அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் 2 நிமிடம் 12 செக்கன்களில் கூறி இச் சாதனையை இந்த சிறுவன் நிகழ்த்தியுள்ளார்.

புதிய உலக சாதனையாளனாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட இச் சிறுவனை நேரில் சந்தித்த கிழக்கு மாகாண ஆளுநர் தனது வாழ்த்தையும் பகிர்ந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டு. மாவட்டம் அபிவிருத்தியடைய

## ஜனாதிபதியின் மறுமலர்ச்சி செயற்றிட்டத்துக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் நாட்டின் மறுமலர்ச்சிக்கான செயற்றிட்டத்துக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில், மட்டக்களப்பு மாவட்டம் அபிவிருத்தியடையுமென தேசிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் இ.தவஞானசூரியம் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பாக மக்களைத் தெளிவுப்படுத்தும் கூட்டம், மட்டக்களப்பு செட்டிபாளையம் பொது மைதானத்தில், தேசிய மக்கள் சக்தி கட்சியின் ஏற்பாட்டில், நேற்று முன்தினம் (06) நடைபெற்றபோது இதனை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதி தேர்தலில் எமது சகோதரர் அநுரகுமார திசாநாயக்கவை மக்கள் ஆதரித்து எவ்வாறு வெற்றிபெற வைத்தார்களோ அதேபோன்று பாராளுமன்றத் தேர்தலிலும் அவருடைய கையை பலப்படுத்தவதற்காக மக்கள் அனைவரும் ஒன்றுசேர வேண்டும்.

இத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிடுகின்ற உறுப்பினர்களை ஆதரித்து அவர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதன் மூலம், எமது மட்டக்களப்பு மாவட்டத்துகு எதிர்காலத்தில் சிறந்த சேவைகளை செய்யக்கூடிய வாய்ப்பை அக் கட்சி உருவாக்கி கொடுக்கும். இதன் மூலம் எமது மாவட்ட மக்கள் மேலும் வளம்பெற முடியும்.

மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கைகோர்த்து ஒற்றுமையாக முரண்பாடின்றி எந்தவொரு கருத்து வேறுபாடுகளும் இன்றி ஒன்றுபட்டு செயற்படுவதுதான் நமக்கு பலம்.

இதன் மூலம் நமது மட்டக்களப்பு மாவட்டத்தின் மறுமலர்ச்சியும் எதிர்கால வளர்ச்சியும் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் தொழில் வாய்ப்பு, போன்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அதற்கு கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்கவின், நாட்டின் மறுமலர்ச்சிக்கான செயற்றிட்டத்துகு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் இதன்போது தெரிவித்தார்.

## வாக்குகளை சூறையாடும் கலாசாரத்தை ஒழிக்க வேண்டும்

### கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர்

(பாலமுனை விசேட நிருபர்)



பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் ஜனநாயக ரீதியாக தாம் விரும்பிய கட்சிக்கும் வேட்பாளருக்கும் வாக்களிப்பதற்கான நல்லதொரு சூழலை ஏற்படுத்துமாறு, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் ஜம்இய்யத்துல் உலமா சபை ஏறாவூர் கிளைக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிமிக்க சூழ்நிலையில், ஜனாதிபதித் தேர்தலை சந்தித்து சில வாரங்களின் பின்னர் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்க வேண்டியதொரு இக்கட்டான காலகட்டத்தில் உள்ளோம்.

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் நானும் போட்டியிடத் தீர்மானித்துள்ளேன். பொதுத்தேர்தலானது நீதியாகவும் நேர்மையாகவும் இடம்பெற வேண்டும்.

பொதுத்தேர்தலின் போது அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தங்களுக்குரிய வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக பணத்தையும், அன்பளிப்புப் பொருட்களையும் வழங்குகின்ற ஒரு மோசமான கலாசாரம் எமது பிரதேசத்திலே தொடர்ச்சியாக இருந்து வருகிறது.

இந்தப் பிரதேசத்திலே ஏழை மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இது அப்பட்டமான தேர்தல் இலஞ்சமும் மோசடியுமாகும். இவ்வாறு வாக்குகளைச் சூறையாடுகின்ற அரசியல்வாதிகளிடமிருந்து மக்களை பாதுகாக்க வேண்டும். இவ்வாறான மோசடி இந்தப் பிரதேசத்திலிருந்து துடைத்தெறியப்பட வேண்டும்.

பலஸ்தீன யுத்தத்துக்கு ஓராண்டு நிறைவு

## யுத்தத்தை நிறுத்துமாறு வலியுறுத்தி மட்டக்களப்பில் அமைதிப் பேரணி



(மட்டக்களப்பு குறுப் நிருபர்)

பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் தாக்குதலை ஆரம்பித்து நேற்றுடன் (07) ஓராண்டு நிறைவடைந்துள்ளமையையொட்டி, பலஸ்தீன மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தக்கோரி மட்டக்களப்பு நகரில் நேற்று (07) அமைதி பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் முஸ்லிம் பெண்களினால் முன்னெடுக்கப்பட்ட இப் பேரணி, மட்டக்களப்பு லேடி மெனிங் ட்ரைவ் அந்தோனியார் தேவாலயத்துக்கு முன்னால் ஆரம்பமாகி, பார் வீதி, திருமலை வீதியூடாகச் சென்று மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவை சென்றடைந்தது.

இப் பேரணியில், சமூக செயற்பாட்டாளர்களான தட்சணா மூர்த்தி சாரதாதேவி, அனீஸா பிர்தௌஸ் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

பேரணியை முன்னிட்டு பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறையில் காட்டு யானைகளை தீயை கொண்டு விரட்டும் சிறுவர்கள்



அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் சிறுவர்கள் தீயினைகொண்டு யானைகளை விரட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட புறநகர் பகுதிகளில், பொது மக்கள் குடியிருப்பை அண்மித்த கல்முனை சாய்ந்தமருது மற்றும் நற்பிட்டிமுனை பிரதேச கரைவாகு வயல் பகுதிகளில், கடந்த சில நாட்களாக காட்டு யானைகளின் நடாமாட்டம் அதிகரித்துள்ளது.

இதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் சிறுவர்கள் யானைகளை விரட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர.

## திருமலையில் மாற்றுத்திறனாளிக்கு வாழ்வாதார உதவி வழங்கி வைப்பு

(தம்பலகாமம் குறுப் நிருபர்)



சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தின் ஏற்பாட்டில், திருகோணமலையில் மாற்றுத்திறனாளிக்கு வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு, திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் அன்புவழிபுரம் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (05) நடைபெற்றது.

கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வந்த இந்த மாற்றுத்திறனாளியின் நீண்டகால குறைபாட்டை தீர்த்து வைக்கும் முகமாக வாழ்வாதார உதவியாக கோழிக்கூடு வழங்கி வைக்கப்பட்டது. இதற்கான, ஏற்பாட்டை அறப்பணி மையத்தின் நிறுவனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரர் முன்னெடுத்திருந்தார்.



கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்ணசேகரவின் விசேட அழைப்புக்கமைய, திருகோணமலை ககந்தலாவ ஊடக மன்றத்தின் நிர்வாகிகள் உட்பட அங்கத்தவர்கள் திருகோணமலை அலுவலகத்தில் வைத்து ஆளுநரை நேற்று (07) சந்தித்து கலந்துரையாடியபோது...

# பழைய அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டியது அனைவரினதும் பொறுப்பு

(ஹற்றன் விசேட நிருபர்)



இந்த நாட்டில் வாழும் மக்கள் என்ற ரீதியில் நாம் அனைவரும் சமனாகவே இருக்க வேண்டுமெனவும் அதற்காக அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டி பொறுப்பும் தேவையும் அனைவரிடமும் காணப்படுவதாகவும் கொழும்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் ஹேமந்த தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் ஹற்றனில் நடைபெற்றது அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சாதாரணமாக வரி செலுத்தும் அனைத்து மக்களும் துன்பங்களை தான் அனுபவித்து வருகின்றனர்; அவர்களின் கல்வி,சுகாதார தேவைகள்,சட்டம் அரச நிறுவனங்களில் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைகள் என்பன பக்கசார்ப்பற்ற வகையிலேயே நடைபெறுகின்றன.

இந்நாட்டில் வாழும் மக்கள் என்ற ரீதியில் நாம் அனைவரும் சமனாகவே இருக்க வேண்டும் அவர்களும் மனிதர்கள் என்ற மனப்பான்மை எல்லோர் மத்தியிலும் ஏற்பட வேண்டும் எனவே எமது நாட்டில் சட்டத்திட்டங்கள் அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்.

ஆனால் மக்களின் வரிப் பணத்தில் வாழும் ஒரு சிறிய குழுவினர் மாத்திரம் அனைத்து சலுகைகளையும் அனுபவித்து வாழுகின்றனர். கோடிக்கணக்கான பணத்தை அவர்களின் சொந்த விருப்புக்களுக்காக பயன்படுத்துகின்றனர். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டி பொறுப்பும் தேவையும் அனைவரிடமும் உள்ளது.

எனவே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை பெற்றால் தான் சாதாரண மக்களும் ஒரு சுபீட்சமான வாழ்க்கையை வாழ முடியும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மிகவும் எளிமையானவர் இந்த பதவியேற்பு வைபவங்களுக்கு கோடிகணக்கில் செலவிடப்பட்டது. ஆனால் அவர் அவற்றை மிச்சப்படுத்தினார். அது இன்று உலக நாடுகளின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

ஆகவே எதிர்வரும் தேர்தலில் மக்கள் பொய்யான வாக்குறுதிகளை நம்பி மீண்டும் மீண்டும் ஏமாறாது நிலையான நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்கும் மக்கள் ஆட்சியொன்று நடைபெறுவதற்கு கைகோர்க்க வேண்டும் என அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.




# மின்சாரம் தாக்கி சிறுவர்கள் பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



பட்டம் விட்டு கொண்டிருந்த இரண்டு பாடசாலை சிறுவர்கள் மின்சாரம் தாக்கி பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (6) பமுனுமுல்ல அலவத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. 13 வயதுடைய சிறுவர்கள் இருவரும் பட்டம் விட்டுக் கொண்டிருந்த போது பட்டம் அதி சக்தி வாய்ந்த மின்சார கம்பிகளில் சிக்கியதால் அதனை மீட்பதற்கு இருவரும் முயற்சித்த போதே சிறுவர்களை மின்சாரம் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார். சிறுவனின் வீட்டின் மேல் மாடிக்கு சென்று அதனை அலுமினியம் கம்பியால் மீட்க முயற்சித்த போது பெரும் சத்தத்துடன் இவர்களை மின்சாரம் தாக்கியுள்ளது.

காயமடைந்த இரு சிறுவர்களும் முதலில் ஹொரண அரச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காவத்தை ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில் நவராத்திரி விழா, தேர்பவனி

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)



ஸ்ரீ ஜெய் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நவராத்திரி விழா மற்றும் தேர்பவனி எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காவத்தை ஸ்ரீ செல்வ விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை ஆலய பிரதம குரு ஸ்ரீல ஸ்ரீ விஸ்வநாத குருக்கள் தலைமையில் விசேட பூஜைகள் நடைபெற்று தேர் பவனி நடைபெறவுள்ளது. அதனை தொடர்ந்து விசேட பூஜைகள் நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும். கஹவத்தை மற்றும் அதனை அண்மித்த பக்த அடியார்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு முப்பெரும் தேவிகளின் அருளை பெறுமாறு விழா ஏறபாட்டுக்குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

காவத்தை ஸ்ரீ ஜெய் நற்பணி மன்றம் இரத்தினபுரி மாவட்டத்தில் சமய சமூக பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

## மண்சரிவு அபாய எச்சரிக்கை




இலங்கையில் சில மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை விடுக்க தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த எச்சரிக்கை நேற்று (07) காலை 9.30 மணி முதல் நாளை இரவு 9.30 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவித்துள்ளது. அதன்படி, மலையகத்தில் கேகாலை, இரத்தினபுரி, ஆகிய மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இன ரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தும் காரணிகளை கண்டறிதல்

(அக்குறணை குறூப் நிருபர்)



தேசிய சமாதான பேரவையின் ஆதரவில் கண்டி மாவட்டத்தில் இன ரீதியான முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் அதிகளவு மன உளைச்சலை ஏற்படுத்தும் காரணியை கண்டறிவது தொடர்பான நிகழ்வு அண்மையில் கண்டி டெவொன் ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் தேசிய சமாதான பேரவையின் செயற்றிட்ட முகாமையாளர் நிரோசா அந்தனி மற்றும் கண்டி மாவட்ட சமூக செயற்பாட்டாளர் காமினி ஜயவீர ஆகியோர் கருத்து வெளியிட்டனர்.

கண்டி மாவட்ட சர்வ மத அமைப்பு ஏற்பாடு செய்த செயலமர்வின் இறுதியில் கண்டி மாவட்டத்தில் அதிகளவு மன உளைச்சலை ஏற்படுத்தும் காரணிகள் இனம்காணப்பட்டு அதனை தீர்ப்பதற்கான வழிவகைகளை திட்டமிட முடிவு செய்யப்பட்டது.

இதில் சர்வமத அமைப்பு அங்கத்தவர்களும், பல்வேறு சமயத் தலைவர்களும், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# வில்லகமே கிராமத்தில் மதுபானசாலை அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு

(ஊவா சுழற்சி நிருபர்)



பண்டாரவளை எல்ல வீதியில் வில்லகம கிராமத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு இரு நாட்களுக்கு முன்னர் மதுபானசாலைக்கான அனுமதி வழங்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதற்கமைய இக்கிராமத்தில் புதியதோர் மதுபானசாலையை திறப்பதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் நேற்றுமுன்தினம் 6 ஆம் திகதி காலை மதுபானசாலை திறப்பு விழா நடைபெறவிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊரிலுள்ள அனைத்து இன மக்களும் பண்டாரவளை பதுளை வீதி மில்லகம சந்தியை மறித்து பாரிய போராட்டத்தில் ஈடுபட்டனர். எல்ல பொலிஸார் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த போது மக்க ள் மகஜரொன்று கையளித்து விட்டு உடனடியாக ஜனாதிபதியின் கவனத்துக்கு இதனை கொண்டு வர வேண்டுமென கோரி அமைதியாக கலைந்து சென்றனர்.

## வடக்கின் உதயம்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் யாழ். மாவட்ட செயலகத்தில் வேட்புமனுக்களை நேற்றைய தினம் கையளித்தனர். (படம்: யாழ். விசேட நிருபர்)

# பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

## முன்னாள் எம்.பி சிவசக்தி ஆனந்தன்

(வவுனியா விசேட நிருபர்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென அறிவித்துள்ளார். ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியானது ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிப்பதுடன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இதில் அக்கட்சியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்திற்கு ஏற்ப இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிடும் முகமாக இம்முறை தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரியில் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரிப் பிரதேசசபையின் கைதடி பொது நூலகத்தினால் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அபிநயத்துடன் கதை கூறல் மற்றும் வர்ணம் தீட்டல் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன.

வர்ணம் தீட்டல் போட்டி, அபிநயத்துடன் கதை கூறல் போன்ற போட்டிகள் நூலக மண்டபத்தில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அடிப்படை வசதியில்லாமல் இயங்கும் மாறாஇலுப்பை தமிழ் வித்தியாலயம்

(பரந்தன் குறூப் நிருபர்)



வவுனியா வடக்கு மாறாஇலுப்பை தமிழ் வித்தியாலயத்தில் போதிய கட்டட வசதியின்மை மற்றும் பௌதிக வளப்பற்றாக் குறை காரணமாக மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

இதனால் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இப்பகுதி காணப்படுகின்றது. இப்பகுதியிலேயே மாறாஇலுப்பை தமிழ் வித்தியாலயம் அமைந்துள்ளது. இதில் 70ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

குறித்த பாடசாலையில் போதிய வகுப்பறை வசதிகள் இன்மையால் மாணவர்களின் குறிப்பிட்ட சில வகுப்புகள் மர நிழலில் இயங்குவதுடன் ஆசிரியர் ஓய்வு அறை தற்காலிக கொட்டகையொன்றிலேயே காணப்படுகின்றது.

இதனை விட குறித்த பாடசாலை விளையாட்டு முற்றம் காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த பாடசாலையின் வகுப்பறை வசதிகள் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொதுத்தேர்தலில் அமரர் ரவிராஜின் மனைவி போட்டி



(யாழ். விசேட நிருபர்)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் அமரர். ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ் போட்டியிடவுள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் நேற்றைய தினம் திங்கட்கிழமை சசிகலா ரவிராஜ் கையொப்பமிட்டுள்ளார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழரசு கட்சியில் போட்டியிட்ட நிலையில் இம்முறை தமிழரசு கட்சி அவருக்கு ஆசனம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கோப்பாய் கலாசாலையில் ஆசிரியர் தின விழா



கரவெட்டி தினகரன் நிருபர்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சர்வதேச ஆசிரியர் தினவிழா அண்மையில் கலாசாலையின் ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும், பிரதி அதிபரும் இலங்கையின் புகழ்பூத்த பரதநாட்டிய கலைஞருமாகிய கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் கலாகீர்த்தி சாந்தினி சிவனேசனுக்கு நூற்றாண்டு கௌரவம் வழங்கப்பட்டதோடு அவரது ஆளுமைச் சிறப்பிதழாக வெளிவந்த கலாசாலையின் கலாதீபம் அக்டோபர் மாத இதழின் சிறப்பு பிரதி கையளிக்கப்பட்டது.

ஆசிரிய மாணவர்கள் வழங்கிய கவியரங்கம் நாடகம், முதலிய சிறப்பு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

# கண்டியில் வூசோ குத்துச்சண்டை போட்டி; முல்லைத்தீவு மாணவிக்கு தங்கப் பதக்கம்

(ஓமந்தை விஷேட நிருபர்)



கண்டி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த 4, 5 மற்றும் 6ஆம் தினங்களில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வூசோ (Wushu) குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாணவர்கள் இருவர் தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை வென்றுள்ளனர்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி ஜீட் வசீகரன் டிவோன்சி 18 வயதுக்குட்பட்ட 60-65Kg எடைப்பிரிவில் தங்க பதக்கத்தையும், முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவன் நாகேஸ்வரன் கோபிகன் 20 வயதுக்குட்பட்ட 70-75Kg எடைப்பிரிவில் வெண்கல பதக்கத்தையும் பெற்றுள்ளார். குறித்த மாணவர்கள் பயிற்றுவிப்பாளர் தேசிந்தனின் பயிற்றுவிப்பில் தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கங்களை பெற்று வடமாகாணத்துக்கு வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

குறித்த மாணவி கடந்த 28,29,30 ஆம் திகதிகளில் இரத்தினபுரி நியூ டவுன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தைக்வொண்டோ (Taekwondo) போட்டியில் 18 வயதுக்குட்பட்ட பிரிவில் 59-63 கிலோ எடைப்பிரிவில் மாணவி வெண்கல பதக்கத்தைப் பெற்று பாடசாலைக்கும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.



# தேசிய ஓய்வூதிய தினம்

ஒக்டோபர் 8 2024

# தலைமுறையின் பெருமை



## இன்று தேசிய ஓய்வூதிய தினம்

பணியில் இருந்து ஓய்வு பெற்ற சிரேஷ்ட அரச ஊழியர்களைக் கொண்டாடும் தினம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 8 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. உற்சாகத்துடனும் வலிமையுடனும் தேசத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்த தலைமுறையின் தொடர்ச்சியான அனைவரையும் பெருமையுடன் நினைவூட்டுவதற்கு இந்த தினத்தை ஒதுக்கி இருப்பது பெரும் கௌரவத்துடனாகும். நாட்டின் உயிர்நாடி போன்ற தொழில் படையின் பங்குதாரர்களாக பெற்றுத்தந்த பெரும் பங்களிப்பை எப்போதும் நினைவில் கொள்வோம்.

அந்தப் பங்களிப்புக்கு வழங்கும் உச்ச மரியாதையாக ஓய்வு வாழ்வை பொருளாதார சமூக மற்றும் சுகாதார, ஆன்மீக ரீதியில் அர்த்தபூர்வமாக்குவது ஓய்வூதியத் திணைக்களமான எமது பொறுப்பாகும்.

ஒவ்வொரு மாதமும் ஒக்டோபர் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முந்தைய தினம் ஒன்றில் ஓய்வூதிய நன்மைகள் ஓய்வூபெற்றோரின் கைகளுக்கு கொண்டு சேர்ப்பது எமது முதன்மையான மற்றும் அடிப்படையான பொறுப்பு என்பதோடு அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தைக் கொண்ட ஓய்வூதியத் திணைக்களத்தின் பயணத்தில் அதனை தவறாது செய்துள்ளோம்.

அதற்கு அப்பால் சென்று டிஜிட்டல் தொழில்நுட்ப மூலோபாயம் மற்றும் தொடர்பாடல் நவீனப்படுத்தப்பட்டு அரச துறையின் முதன்மையான சமூகப் பாதுகாப்பு முறையான தேசிய ஓய்வூதிய முறையை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதற்காக ஓய்வூதியத் திணைக்களம் கடந்த பல வருட காலத்தில் பெரும் முயற்சிகளை எடுத்துள்ளது.

ஓய்வூதியம் உட்பட அனைத்து நன்மைகளையும் வழங்கும் அமைப்பை எளிமையாக்க முடிந்திருப்பது இதன் காரணமாகவாகும்.

ஓய்வூதியத்தைப் பெறும் அனைத்துப் படிகளும் டிஜிட்டல் கட்டமைப்பு ஊடாக மேலும் ஸ்மார்ட் வடிவத்தை பெறுவதை பார்ப்பதும் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளுக்கு பொருந்தும் வகையில் முறையான மற்றும் முறையற்ற பிரிவுகள் உள்ளடங்கிய மிகவும் பரந்த சமூக பாதுகாப்பு கொள்கைகளை அறிமுகப்படுத்துவதும் எமது எதிர்பார்ப்பாகும்.

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

பான் ஏஷியா வங்கி
உன்னதமான உள்நாட்டு வங்கி

## இலங்கை பிரதமர் மற்றும் நீதி, பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்களின் 'தேசிய ஓய்வூதிய தின' வாழ்த்துச் செய்தி.



நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் தொழிற் படையின் ஒரு பங்காளியாக இருந்து தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் அரச பணி ஆற்றியவர்களின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரஜைகளின் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. "தேசிய ஓய்வூதிய தினம்" என்பது பல தசாப்தகால அவர்களின் சேவைக்கான ஒரு அடையாள பாராட்டு மட்டுமேயாகும். அவர்களின் வாழ்க்கையை பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதே ஒரு முன்னேற்றமான தேசமாக வழங்கக்கூடிய உயர்ந்த கௌரவமாகும்.

பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஒரு பலமான பிரஜையாக மட்டுமன்றி, ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரஜையாகிய உங்களுக்கு தேக ஆரோக்கியத்துடனும் ஆன்மீகம் மற்றும் கலாசார ரீதியாகவும் திருப்திகரமான ஒரு பிரஜையாக வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது எங்களின் முழுமையான பொறுப்பாகும்.

பாதுகாப்பான சமூகம் மற்றும் வளமான நாடு என்ற தொலைநோக்குடன் செயற்படும் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளில் தேசிய ஓய்வூதியக் கொள்கைகளை நிலைபேறாகவும் தொடர்ச்சியாகவும் பேணுவதற்கு முறைசார் மற்றும் முறைசாரா துறைகளின் பங்களிப்புடன் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கும் ஒரு விரிவான கொள்கை தற்போதைய நிறுவன கட்டமைப்பிற்குள் உருவாக்கி செயற்படுத்தப்படும்.

தற்போது, தங்கள் பணியை நிறைவுசெய்து ஓய்வு பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 720,000ஐ தாண்டியுள்ளது. 2024-ம் ஆண்டு அரசு ரூ.434பில்லியனுக்கும் அதிகமான நிதியை ஓய்வூதிய கொடுப்பனவாக ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் வாழ்க்கையை ஆன்மீகம், சமூகம் மற்றும் பொருளாதாரம் என அனைத்து துறைகளிலும் மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். அந்த இலக்கை மனதில் கொண்டு, ஒவ்வொரு பிரஜைக்கும் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமையுள்ள ஒரு விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குவதில் நீங்களும் நிச்சயம் ஒரு பங்காளியாக இருப்பீர்கள்.

அரச சேவையில் பல வருட அனுபவங்களையும் வாழ்நாள் முழுவதும் பெற்ற சிறந்த மனப்பாங்குகளையும் நாட்டின் எதிர்கால தலைமுறைக்கு வழங்கி தொடர்ந்தும் ஒரு முனைப்பான பிரஜையாக சமூக முன்னேற்றத்திற்கு நீங்கள் பங்களிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

உங்கள் அனைவருக்கும் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்த பணி ஓய்வு வாழ்க்கைக்கு எனது வாழ்த்துக்கள்.

பிரதமர்
ஹரிணி அமரசூரிய
நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சர்

## நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு செயலாளரின் தேசிய ஓய்வூதிய தின ஆசிச் செய்தி



அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் பணியாளருக்கு மாத்திரமன்றி அவர்களின் அடுத்த உரிமையாளர்களுக்கும் நன்மைகளை உரித்தாக்கும் சமூக பாதுகாப்பு முறையாக இதுவரை வந்த பயணத்தைப் பார்க்கும்போது இலங்கையின் தேசிய ஓய்வூதியக் கொள்கையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது நாடு ஒன்றாகப் பெற்ற வெற்றியாகும்.

குறித்த நேரத்திற்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்குவதுடன் நிற்காது நேரடி சமூக செயற்பாட்டாளராக கௌரவமான பிரஜையாக வாழ்வைத் தொடர்வதற்குத் தேவையான அனைத்து வாய்ப்புகளும் ஓய்வூதியர்களுக்கு பெற்றுக்கொடுப்பது நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கையின் ஓய்வூதிய முறையின் வெளிப்பாட்டைப் பார்க்கும்போது சரியான நேரத்தில் தேவையான கொள்கை முடிவுகளை எடுப்பது மற்றும் அந்த முடிவுகளை செயற்படுத்துவதில் ஓய்வூதியத் திணைக்களத்தின் பணி மிக முக்கியமானது.

இந்த அமைச்சின் கீழ் இருக்கின்ற அரச நிறுவனங்கள் இடையே டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் ஸ்மார்ட் மாற்றங்களை எப்போதும் கையாள்கின்ற அரச நிறுவனம் ஒன்றாக ஓய்வூதியக் கொடுப்பனவு முறையை எளிமையாக்குவதற்கும் ஓய்வூதியர்களின் கைகளில் சேர்க்கும் பொறிமுறையை இலகுவாக்குவதற்கும் எடுக்கும் முயற்சி பாராட்டுக்குரியது.

அது வெறுமனே அரச சேவையின் செயல்திறனை பலனளிக்கச் செய்வது மாத்திரமாக கருதப்படுவதில்லை என்பதோடு அது இந்நாட்டின் ஓய்வூதியம் பெற்ற சமூகத்திற்காக வழங்கிய கௌரவமான கவனிப்பாகவும் நம்புகிறேன்.

தேசிய ஓய்வூதிய முறையின் தொடர்ச்சியான செயற்பாட்டின் இருப்பை தொடர்ந்து உறுதி செய்வது மற்றும் ஓய்வூதிய உரிமையை பாதுகாப்பதற்கு நாம் கடப்பாடு பெற்றிருக்கிறோம் என்பதையும் தேசிய ஓய்வூதிய தினத்தைக் கொண்டாடும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்டி முழு ஓய்வூதிய பெற்ற சமூகத்திற்கும் ஆரோக்கியமான மற்றும் அர்த்தபூர்வமான ஓய்வு வாழ்வொன்றை பிரார்த்திக்கிறேன்.

எஸ். ஆலோக்க பண்டார
செயலாளர்
நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு

## ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் தேசிய ஓய்வூதிய தின ஆசிச் செய்தி



மத்திய அரசு, மாகாண அரச சேவை, ஆயுதப் படைகள் மற்றும் நீதிமன்ற அதிகாரிகளின் ஓய்வூதியத்தை செலுத்துவதற்காக 1970 ஆம் ஆண்டில் "A" தர நிலை திணைக்களம் ஒன்றாக ஓய்வூதியத் திணைக்களம் நிறுவப்பட்டது.

ஓய்வூதியம், விதவைகள் ஓய்வூதியம், தபுதாரர் ஓய்வூதியம், அனாதைகள் ஓய்வூதியம், விசேட தேவையுடைய அனாதைகள் ஓய்வூதியம், இராணுவம் மற்றும் ஆய்தப்படை சேவை ஓய்வூதியம், அதேபோன்று இழப்பீடு வழங்கல் மற்றும் ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படும் பணிக்கொடைக் கொடுப்பனவு, மரணப் பணிக்கொடைக் கொடுப்பனவு, அரச சேவை சேமலாப கொடுப்பனவு உட்பட ஓய்வூதியத் திணைக்களம் பரந்த விடயப் பரப்பின் கீழ் நாட்டில் குறிப்பிடத்தக்க பங்கினரின் சமூகப் பாதுகாப்பு உரிமையை உறுதி செய்கிறது.

இந்த அனைத்து விடயப்பரப்புகளையும் உள்ளடக்கியவாறு ஓய்வூதியம் வழங்கல் மேற்கொள்ளப்படுவதோடு அந்தக் கொடுப்பனவு செயற்பாடு டிஜிட்டல் தொழில்நுட்ப முறை மற்றும் தொடர்பாடல் செயற்பாட்டின் ஊடாக இணைக்கப்பட்டு கடந்த தசாப்தத்தின் எட்டு ஆண்டு காலத்தில் ஓய்வூதியப் பணிப்பாளராக செயற்படுவதற்கு கிடைத்தது பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

கொடுப்பனவு செயற்பாடுகளில் தொழில்நுட்பப் பயன்பாட்டை உச்ச அளவில் மேற்கொள்வதற்கு எடுத்த முயற்சியில் ஓய்வூதியக் கொடுப்பனவு செயற்பாடுகள் பலத்தையும் ஒன்லைன் முறையுடன் இணைப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது. ஓய்வூதியம் உட்பட அனைத்து நன்மைகளையும் வழங்கும் கட்டமைப்பு எளிமையாக்கப்படுவது அதன்படி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. எந்த சவாலான சூழலிலும் கொடுப்பனவு செயற்பாட்டுக்கு தடங்கல் ஏற்டாத வகையில் அந்தக் கட்டமைப்பை பேணுவதற்கு அதன்மூலம் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அரசினால் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் 2024 ஆம் ஆண்டுக்காக 435 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முந்தைய தினம் ஒன்றில் 720,000ஐ தாண்டிய நேரடி ஓய்வூதியர்களின் கைகளுக்கு ஓய்வூதிய நன்மை கிடைக்கப் பெறுவது கொடுப்பனவு செயற்பாட்டின் இந்த சிக்கல்கள் உணராத வகையிலாகும்.

தேசிய ஓய்வூதிய முறையின் மறுசீரமைப்பு என்பது எப்போதும் சவாலுக்கு உள்ளாவதாகும். ஏதாவது ஒரு நிதி அழுத்தத்திற்கு உட்படாத அரச துறை அல்லது தனியார் துறையின் தலையீட்டினால் ஏற்படுகின்ற பேண்தகு சமூகப் பாதுகாப்பு முறைகளுக்கு உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் கூட முன்னோக்கிச் சென்று வருகின்றன. பல நூற்றாண்டு காலம் பழைமையான ஓய்வூதிய முறை தற்காலத்திற்கு பொருந்துவதற்குத் தேவையான திருத்தங்களுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசு அவதானம் செலுத்துவதற்கு செயற்பட்டிருப்பது அதன்படி என்பதை ஞாபகமூட்ட வேண்டும்.

ஓய்வு காலத்தினை ஒளிமயமான அர்த்தபூர்வமான காலமாக மாற்றுவதற்கு நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்பதோடு இலங்கையின் முழு ஓய்வூதிய சமூகத்திற்கும் உடல் உள பலத்துடனான ஆரோக்கியமான ஓய்வு வாழ்வு ஒன்றை பிரார்த்திக்கிறேன்.

ஏ. ஜகத் டி. டயஸ்
ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்

## உங்களது நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெறும் பணியாளர் ஒருவருக்கு விரைவான ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு...

அரச பணியில் இருந்து ஓய்வு பெறுகின்ற அதிகாரிகளுக்கு அவர்கள் ஓய்வு பெறுகின்ற திகதிக்குப் பின்னர் வருகின்ற ஓய்வூதிய தினத்தில் ஓய்வூதிய உரித்தை வழங்குவது ஓய்வூதியத் திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும். ஒரு நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெறுகின்ற அதிகாரி ஒருவருக்கு விரைவாக ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக்கொடுப்பதும், பணியாற்றும் காலத்தில் மரணிக்கும் அதிகாரிகளிடம் தங்கியுள்ளவர்களுக்கு விரைவாக விதவை ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக்கொடுப்பதும் இங்கு பிரதானமாக அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதிய சுற்றுநிருபம் 3/2025 மூலம் இது தொடர்பில் அனைத்து நிறுவனங்களுக்கும் தேவையான ஆலோசனை வழங்கப்படுகிறது.

எல்லா அமைச்சுகள், திணைக்களங்கள், நிறுவனங்களிலும் பணியாற்றும் அதிகாரிகள் எண்ணிக்கை அடிப்படையில் அதன் நிர்வாகப் பிரிவின் கீழ் ஓய்வூதியப் பிரிவு ஒன்று (தேவைக்கு அமைய சில அதிகாரிகளைக் கொண்டதாக) அமைக்கப்பட்டுள்ளது. தமது நிறுவனத்தில் பணியாற்றுகின்ற ஓய்வு பெறவிருக்கும் அதாவது 54 வயதுக்கு மேற்பட்ட பணியாளர்களின் தரவு அமைப்பை தயாரித்து அதனை இற்றைப்படுத்திய நிலையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பணியாளரின் பெயர், பதவி, முதல் நியமனத் திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் அந்த அமைப்பில் உள்ளடக்குவது அவசியமாகும். அதன்மூலம் ஓய்வு பெறும் வயதுக்கு வருகின்ற பணியாளர்களின் தனிப்பட்ட ஆவணங்களைச் சோதித்து ஓய்வு பெறுவது சார்ந்த ஆவணங்களை தயாரிப்பதில் அவதானம் செலுத்த வாய்ப்பு ஏற்படுகிறது.

அரச பணியில் இருந்து ஓய்வு பெறுகின்ற அதிகாரிகளுக்கு அவர்கள் ஓய்வு பெறுகின்ற திகதிக்குப் பின்னர் வருகின்ற ஓய்வூதிய தினத்தில் ஓய்வூதிய உரித்தை வழங்குவது ஓய்வூதியத் திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும். ஒரு நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெறுகின்ற அதிகாரி ஒருவருக்கு விரைவாக ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக்கொடுப்பதும், பணியாற்றும் காலத்தில் மரணிக்கும் அதிகாரிகளிடம் தங்கியுள்ளவர்களுக்கு விரைவாக விதவை ஓய்வூதிய உரிமையைப் பெற்றுக்கொடுப்பதும் இங்கு பிரதானமாக அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதிய சுற்றுநிருபம் 3/2025 மூலம் இது தொடர்பில் அனைத்து நிறுவனங்களுக்கும் தேவையான ஆலோசனை வழங்கப்படுகிறது.

எல்லா அமைச்சுகள், திணைக்களங்கள், நிறுவனங்களிலும் பணியாற்றும் அதிகாரிகள் எண்ணிக்கை அடிப்படையில் அதன் நிர்வாகப் பிரிவின் கீழ் ஓய்வூதியப் பிரிவு ஒன்று (தேவைக்கு அமைய சில அதிகாரிகளைக் கொண்டதாக) அமைக்கப்பட்டுள்ளது. தமது நிறுவனத்தில் பணியாற்றுகின்ற ஓய்வு பெறவிருக்கும் அதாவது 54 வயதுக்கு மேற்பட்ட பணியாளர்களின் தரவு அமைப்பை தயாரித்து அதனை இற்றைப்படுத்திய நிலையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பணியாளரின் பெயர், பதவி, முதல் நியமனத் திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் அந்த அமைப்பில் உள்ளடக்குவது அவசியமாகும். அதன்மூலம் ஓய்வு பெறும் வயதுக்கு வருகின்ற பணியாளர்களின் தனிப்பட்ட ஆவணங்களைச் சோதித்து ஓய்வு பெறுவது சார்ந்த ஆவணங்களை தயாரிப்பதில் அவதானம் செலுத்த வாய்ப்பு ஏற்படுகிறது.

ஓய்வு பெறுவதுடன் தொடர்புபட்ட அடிப்படை பணிகளை மேற்கொள்வது தனிப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு என்பதால் அனைத்து அரச அதிகாரிகளினதும் தனிப்பட்ட ஆவணங்களை முறைப்படி பேண வேண்டும். முக்கியமாக பணியாளரின் நியமன முகவரி, பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி, பணியை நிரந்தரமாக்கும் கடிதம், செயல்திறன் அடைவில் சித்தி பெற்ற கடிதம், பதவி உயர்வு மற்றும் சேவையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சார்ந்த கடிதம் மற்றும் ஒழுக்காற்று உத்தரவுக் கடிதங்கள் போன்ற தனிப்பட்ட ஆவணங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று அரச பணிக்கு நியமிக்கப்பட்ட திகதி தொடக்கம் அதிகாரிகளின் நடத்தைக் குறிப்பு ஆவணத்தை சரியாக பேணுதல் மற்றும் அது முறையான வகையில் இற்றைப்படுத்தப்படுவது அவசியமான பணியாக அடையாளம் காணப்படுகிறது. இந்த வகையில் தனிப்பட்ட ஆவணங்களைப் பேணுவது ஓய்வூதிய உரிமை வழங்கும் செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்கு அடிப்படை காரணிகளாக குறிப்பிட வேண்டும்.

தொடர்ச்சி 12 பக்கம்



# தேசிய ஓய்வூதிய தினம்

ஒக்டோபர் 8 2024

## உங்களது நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெறும் பணியாளர் ...

11 பக்கத்தின் தொடர்ச்சி

மாற்று ஓய்வூதிய வயதுக்குப் பின்னர் கட்டாயம் ஓய்வு பெற வேண்டிய காலத்தில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பணியாளர் ஒருவருக்கு ஓய்வு பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும் என்பதால் 54 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பணியாளர்களும் தனிப்பட்ட ஆவணங்களை வருடாந்தம் பதவிநிலை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் இடுதல் மூலம் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளை குறைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஓய்வு பெறும் அதிகாரிக்கு உரித்தாகும் பதவி உயர்வு, சம்பள அதிகாரிப்பை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுத்தல், சரியாக சேவை காலத்தைக் கணக்கிடுதல், விடுமுறை தொடர்பிலான விபரங்களை சரியாக இற்றைப்படுத்துவது சார்ந்தவை பதவிநிலை உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். தனிப்பட்ட விபரங்களை முறையாக இற்றைப்படுத்தாவிடின் மீண்டும் திருத்தப்பட்ட ஓய்வூதிய விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டி ஏற்படுவதால் ஓய்வூதியர் போன்று நிறுவனங்களுக்கும் மேலதிகமான வேலைகள் சேர்கின்றன. அது அரச நிதி முகாமைத்துவத்திற்கும் தாக்கம் செலுத்தும் விடயமாகும்.

மிக முக்கிய சந்தர்ப்பங்களில் பணியாளர் ஒருவரின் சேவை பதிவுகள் சார்ந்த ஆவணங்கள் மற்றும் விபரங்களை கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட முடியும். (உதா:- சுனாமி பேரழிவு, வெள்ளப் பாதிப்பு) அவ்வாறு கட்டுப்படுத்த முடியாத காரணங்கள் அடிப்படையில் ஆவணங்கள் காணாமல்போகும் சந்தர்ப்பத்தில் திணைக்களத் தலைவரினால் பதவிநிலை அதிகாரிகள் இருவர் கொண்ட விசாரணைக் குழு ஒன்றை அமைத்து தெரியவராத சேவைக் காலம் தொடர்பில் குழு பரிந்துரையைப் பெற்று ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுக்கு அனுப்புதல் வேண்டும். இந்த செயற்பாடு பணியாளர் ஓய்வுபெறும் சந்தர்ப்பம் வரும் வரை இருக்காது முன்கூட்டியே பூர்த்தி செய்துகொள்வது ஓய்வூதிய உரிமையை விரைவுபடுத்த காரணமாகும்.

அதிகாரி ஒருவர் மரணத்திற்கு உள்ளான பின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நன்மையை பெறும்போத விதவைப் பெண்களை பெரும் இயலாமை நிலைக்குத் தள்ளப்படுவது, அனாதைகள் நன்மை தாமதித்தல், விசேட தேவையுடையோருக்கான ஓய்வூதியத்தை தயாரிப்பதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொள்வது ஓய்வூதிய செயற்பாட்டில் அடையாளம் கண்டிருக்கும் மற்றொரு முக்கிய பிரச்சினையாகும். இதற்குக் காரணமாவதும் பணியாளர் ஒருவரின் தனிப்பட்ட ஆவணங்களுக்கு உள்ளடங்கி இருக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களில் கோப்புக்கு உள்ளடக்குவதற்கு பணியாளர் மற்றும் பணியாளரின் தனிப்பட்ட ஆவணங்களுக்கு பொறுப்பாகச் செயற்படும் அதிகாரியும் சரியான அவதானத்தை செலுத்தாததாகும். பணியாளரின் திருமணச் சான்றிதழ், முன்னர் திருமணம் புரிந்திருந்தால் அது முறிந்ததை உறுதி செய்யும் கடிதங்கள், துணைவர் மற்றும் பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலப் பிரதி, துணைவரின் தேசிய அடையாள அட்டை பிரதி, துணைவர் மரணித்திருந்தால் மரணச் சான்றிதழின் மூலப் பிரதி, விவாகரத்துப் பெற்றிருந்தால் நீதிமன்றத் தீர்ப்பு போன்ற ஆவணங்களில் அந்த அதிகாரிக்கு தொடர்புடைய ஆவணங்கள் தனிப்பட்ட ஆவணங்களுக்கு உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஓய்வு பெறுவதற்கு 06 மாதங்களுக்கு மன்னர் தமது நியமன அதிகாரிக்கு தாம் ஓய்வு பெறுவதாக அறிவித்து அதற்கு ஒப்புதலைப் பெறுவது குறித்த அதிகாரியின் பொறுப்பாகும். ஓய்வு பொறுவதற்கு குறித்த திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் இருந்து ஓய்வூதிய விண்ணப்பத்தை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சரியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஒன்லைன் முறைக்கு அனுப்பிய விண்ணப்பங்கள் தொடர்பில் ஒன்லைன் முறையில் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அறிவித்தலுக்கு விரைவாக பதிலளித்தல் ஒன்லைன் அல்லாத முறையில் அனுப்பும் விண்ணப்பங்கள் தொடர்பில் குறித்த திருத்தங்களை மேற்கொண்டு மீண்டும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலமும் ஓய்வூதியம் பெறும் செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்கு முடியுமாகும். ஓய்வூதியம் அங்கீகரிக்கப்பட்ட பின் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைப்பதோடு அதற்காக ஓய்வு பெற்ற பணியாளர் எடுத்து வர வேண்டிய ஆவணங்கள் தொடர்பில் அறிவூட்டுவதும் துறைசார் அதிகாரியால் மேற்கொள்ளப்படும்.



பணியாளர் ஒருவரை எடுத்துக்கொண்டால் அவர் நிரந்தர நியமனத்தைப் பெறுவது 45 வயதுக்குப் பின்னர் பெற்றிருப்பது, நியமனம் நிரந்தரமாக்கப்படாதிருத்தல், வேலையை விட்டுச் செல்லல், மீண்டும் பணியில் சேர்வதில் உள்ள பிரச்சினைகள், வெறு பணிகளுக்காக தற்காலிகமாக விடுவித்தல், வெளிநாட்டு பயிற்சிக் காலத்தின் பின்னர் குறித்த சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாதிருத்தல் போன்ற சிக்கல்கள் இருப்பதாயின் அது தொடர்பில் ஓய்வு பெறுவதற்கு முன்னர் முறையான நடவடிக்கையை எடுத்திருப்பதன் மூலம் ஓய்வூதிய உரிமையை வழங்குவதை விரைவுபடுத்துவதற்கு வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.



ஓய்வூதிய உரிமையை வழங்குவது ஓய்வூதியத் திணைக்களம், ஓய்வூதியர், ஓய்வூதியர் பணயாற்றிய நிறுவனத்திற்கு இடையே இருக்கும் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் இறுதி முடிவு என்பதால் இந்த மூன்று தரப்பும் முறையாகவும் சரியாகவும் செயல்திறனுடன் செயற்படுவதன் மூலம் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறும் அரச ஊழியர் மகிழ்ச்சி ஓய்வு காலத்திற்குச் செல்ல வாய்ப்பு ஏற்படும்.

## ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் மூலம் செயல்திறன் மற்றும் முறையான சேவை

ஓய்வூதியத் திணைக்களம் தற்போது 720,000 அளவு ஓய்வூதியர்களுக்கு முதன்மை ஓய்வூதியம் மற்றும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் உட்பட பின் நன்மை உரிமைகளை மேற்கொள்கிறது.

ஓய்வூதிய உரிமை தொடர்பில் மற்றும் கொடுப்பனவு செயற்பாடு தொடர்பில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் திணைக்கள மட்டத்தில் மிக முக்கியமான முடிவுகளை பெறுவதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த முடிவுகளுக்கு அமைய சம்பளம் வழங்கு செயற்பாடுகள் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் வெற்றிபெற்ற இலக்குகள் பின்வருமாறு.

- பணிக்கொடை கொடுப்பனவை செயல்திறனாக்கல்

2024 ஒகஸ்ட் மாதம் வரை முதலாவது ஓய்வூதியத்தை செயற்படுத்தி இருக்கும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் பணிக்கொடையை மேற்கொண்டிருப்பதோடு தற்போது ஓய்வூதியம் ஆரம்பிக்கப்பட்ட மாதத்திலேயே பணிக்கொடைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகிறது. அதேபோன்று பணிக்கொடைக் கொடுப்பனவு காசோலை மூலம் 2024 மார்ச் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டபோதும் தற்போது ஸ்லிப் முறை (ளுடனி அநவாழன) முறை மூலம் கொடுப்பனவு மேற்கொள்வது ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் ஓய்வூதியர்களுக்கு தாமதமின்றி தமது நன்மைகளை பெறுவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதியாகும்போது 26,792 ஓய்வூதியர்களுக்கு பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- விதவை, தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியத்திற்கு நிலுவைப் பங்களிப்புத் தொகையை அறவிடும்போது அது சார்ந்த வட்டியை அறவிட வேண்டிய முறை தொடர்பில் ஆலோசனை வழங்கல்.

நிலுவை விதவைகள் அனாதைகள் பங்களிப்புத் தொகையை செலுத்தும்போது அறவிடப்படும் வட்டி வீதம் மற்றும் வட்டி முறை தொடர்பில் எழுந்திருந்த சிக்கல் நிலையை தீர்ப்பதற்கு கௌரவ சட்டமா அதிபர் மற்றும் அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய 2024.04.02 ஆம் திகதிய 01-2024 ஆம் இலக்க ஓய்வூதிய ஆலோசனைக் கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 2023.06.01 ஆம் திகதிக்கு முன்னரான காலத்துடன் தொடர்புடைய குறித்த விதவை, தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியத்திற்கு நிலுவைப் பங்களிப்புத் தொகையை அறவிடும்போது அது சார்ந்த 7மூ சிறிய வட்டியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2023.06.01 ஆம் திகதிக்குப் பின்னரான காலத்திற்கு தொடர்புடைய விதவை,தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியத்திற்காக நிலுவைப் பங்களிப்புத் தொகையை அறவிடும்போது அதனுடன் தொடர்புடைய 4% கூட்டு வட்டி ஒன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கான 5000.00 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை வழங்கல்

2024.08.06 ஆம் திகதிய ஓய்வூதிய ஆலோசனைக் கடித இலக்கம் 06-2024 இன் மூலம் பயங்கரவதா நடவடிக்கை காரணமாக அங்கவீனத்திற்கு உட்பட்டிருக்கும் முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் உயிரிழந்த அதிகாரிகளிடம் தங்கியுள்ளவர்களுக்கும் 55 வயது வரை விதவை ஊதியம் மற்றும் கொடுப்பனவு வழங்கும்போது அதனுடன் தொடர்புடைய 5000.00 ரூபா மாதாந்த கொடுப்பனவு உரித்தாக்குவது தொடர்பிலான செயற்பாடு முப்படைகள் மற்றும் பொலிஸ் ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- விதவைகள் அனாதைகள் கொடுப்பனவை செயல்திறனாக்கல்

2024.08.01 ஆம் திகதிய ஓய்வூதிய அலோசனை கடித இலக்கம் 05.'.2024 இன் மூலம் 03.'.2020 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் ஒன்லைன் தரவுக் கட்டமைப்பு ஊடாக அனுப்ப முடியாத விதவை.'. தபுதாரர்.'. அனாதை.'. அங்கவீனமுடைய அனாதை ஓய்வூதிய விண்ணப்பப் படிவத்தை னுளு ˚ழசவயட தரவுத் தளத்தின் மூலம் உள்ளடக்குவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதனால் விதவைகள் அனாதைகள் கொடுப்பனவை செயல்திறனாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- விதவை, தபுதாரர் மற்றும் அனாதை முறையின் பதிவு

2024 ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்கு விதவை.'. தபுதாரர் மற்றும் அனாதை முறையின் பதிவுக்காக கிடைக்கப்பெற்றிருக்கும் 29,513 விண்ணப்பங்களுக்காக உறுப்பினர்கள் இலக்கத்தை வழங்கல்.

- தரவு கட்டமைப்பை மேம்படுத்தல்

இராணுவ ஓய்வூதியத்திற்காக திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் அதனை மிகவும் சரியான மற்றும் செயல்திறன் மிக்க வகையில் மேற்கொள்ள முடியுமான வகையில் இராணுவ ஓய்வூதிய திருத்தத்திற்காக தகவல் அமைப்பை (PD 6 Forces) தயாரித்து ஒன்லைனின் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 55 வயது பூர்த்தியான பின் கிடைத்த சம்பளத்தின் அடிப்படையில் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய திருத்தத்திற்காக குறித்த விண்ணப்பங்களை பிரதேச செயலாளருக்கு அனுப்ப வேண்டும். பிரதேச செயலாளரினால் திருத்தங்களைச் செய்த பின் நிலையான கொடுப்பனவுகளை விண்ணப்பம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

2016.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் மரணித்த பணியாளர்களுக்காக மரணப் பணிக்கொடையை உரித்தாக்கல்

2016.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் நிலையான மற்றும் ஓய்வூதியத்துடனான நியமனத்தைப் பெற்று பணியில் ஈடுபட்டிருக்கும்போது மரணித்த அரச ஊழியர்களிடம் தங்கியுள்ளவர்களுக்கு மரணப் பணிக்கொடை உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மரணப் பணிக்கொடையை உரித்தாக்குவது சார்ந்த நடவடிக்கைகள் 2023 டிசம்பர் மாதம் தொடக்கம் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2016.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் நிலையான மற்றும் ஓய்வூதியத்தைக் கொண்ட நியமனத்தைப் பெற்று தற்போது பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர் ஒருவர் எதோ ஒரு காரணத்தால் எதிர்காலத்தில் மரணித்தால் அவர்களிடம் தங்கியிருப்போருக்கும் இந்த உரிமை வழங்கப்படும்.

- அங்கவீனமுற்ற அனாதைப் பிள்ளைகளை மருத்துவக் குழுவுக்கு அனுப்புதல்

அங்கவீனமுற்ற பிள்ளைகள் மருத்துவச் சோதனைக் குழுவுக்கு அனுப்பும்போது பயன்படுத்துவதற்கு சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் இணக்கத்துடன் புதிய விண்ணப்பப் படிவம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரச பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களுக்கு அங்கவீனமுற்ற பிள்ளைகள் இருந்தால் பணியாளர் சேவையாற்றும் நிறுவனத்தினால் அவர்கள் மருத்துவக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். மருத்துவக் குழு அறிக்கை கிடைத்த பின் அது பணியாளரின் தனிப்பட்ட ஆவணத்திற்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும் என்பதோடு அதன் பிரதி ஒன்றை துணைவரின் தனிப்பட்ட ஆவணத்திற்கு உள்ளடக்குதல் வேண்டும். ஓய்வூதியர்களுக்கு அங்கவீனமுற்ற அனாதைப் பிள்ளைகள் இருந்தால் மற்றும் அவர்கள் மருத்துவக் குழுவுக்கு அனுப்பாதிருந்தால் ஓய்வூதியருக்கு சொந்தமான பிரதேச செயலாளர் அலுவலகத்தின் மூலம் மருத்துவக் குழுவுக்கு முன்னிலைப்படுத்தலை மேற்கொள்ளல் வேண்டும். மருத்துவக் குழுவின் அறிக்கை கிடைத்த பின் அது ஓய்வூதிய ஆவணத்திற்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும். வெளிநாட்டு ஓய்வூதியத்தைப் பெறும் ஓய்வூதியர் ஒருவருக்கு அங்கவீனமுற்ற பிள்ளைகள் இருந்தால், அந்தப் பிள்ளைகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரவின் மூலம் மருத்துவக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். மருத்துவக் குழுவின் அறிக்கை கிடைத்த பின் அது ஓய்வூதிய ஆவணத்திற்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

உள்நாடு, வெளிநாடு சம்பளம் இல்லா விடுப்பை பெறுகின்ற அதிகாரிகளுக்கு குறித்த விதவைகள் அனாதைகள் பணம் அனுப்பும் முகாமைத்துவ அமைப்பை அறிமுகப்படுத்தல்.

14-2022 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றுநிருபம் மற்றும் அது சார்ந்த திருத்தங்களுக்கு அமைய உள்நாடு, வெளிநாடு சம்பளம் இல்லா விடுப்பைப் பெறுகின்ற அரச ஊழியர்களின் விடுப்புக் காலத்தில் விதவை, தபுதாரர் மற்றும் அனாதை நிதியத்திற்கு தொடர்புடைய பங்களிப்புத் தொகையை அனுப்புவதற்கு விதவைகள் அனாதைகள் பணம் அனுப்பும் முகாமைத்துவ அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் ஊடாக மாதாந்தம் அல்லது மும்மாதத்திற்கு ஒருமுறை விதவைகள் அனாதைகள் பங்களிப்பு தொகைக்கு தொடர்புடைய பணம் அனுப்புதல் நிலையான கட்டளை மூலம் அனுப்புவதற்கு முடியுமாக உள்ளது. மேற்குறிப்பிட்டவாறு செலுத்தப்படும் பங்களிப்புத் தொகை மற்றும் அது சார்ந்த கணக்கு விபரம் ஓய்வூதியத் திணைக்கள இணையதளத்தின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு கொடுப்பனவை மேற்கொள்ளும் அதிகாரிக்கு முடியுமாக உள்ளது.

ஓய்வூதியத் திணைக்களத்தின் எதிர்காலப் பயணம்

1. ஓய்வூதியத்தின் பின் நன்மை பெறுவோர் விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு முழுமையாக ஒன்லைன் (Online) முறை அறிமுகப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்.
2. மரணப் பதிவுக்காக ஒன்லைன் (Online) முறை ஒன்றை பதிவாளர் நாயக திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்தல்.
3. ஓய்வூதிய துறை தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்.
4. அரச பணிக்கு உள்வாங்கும்போது 45 வயதுக்கு மேற்பட்ட உள்வாங்கல்கள் காரணமாக ஓய்வூதிய நன்மைகளை உரித்தாக்குவது தொடர்பில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை தீர்த்தல்.
5. மாகாண ஆளுநர்கள் மற்றும் மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் மற்றும் மத்திய அரசின் அரச சேவை ஆணைக்குழு மற்றும் அரச நிர்வாக சுற்றுநிருப ஏற்பாடுகள் ஒரே விடயம் தொடர்பில் பல்வேறு முறைகளை பின்பற்றுவதன் காரணமாக ஓய்வூதியம் செலுத்தும்போது எழுந்திருக்கும் சிக்கல்களுக்காக பொதுத் தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ளல்.
6. போர்ச் சூழல் காரணமாக முப்படைகள் மற்றும் பொலிஸில் மரணித்த மற்றும் அங்கவீன நிலைக்கு உள்ளான உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பின்னரான நன்மை பெறுவோர் தொடர்பிலான தரவுத் கட்டமைப்பு ஒன்றை இராணுவத்தின் உதவியைப் பெற்று பூர்த்தி செய்தல்.
7. புதிய தேசிய பங்களிப்பு ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்துவதற்கு உதவுதல்.
8. போர் காரணமாக மரணித்த முப்படைகள் மற்றும் பொலிஸ் அங்கத்தவர்களின் அனாதைகள் மற்றும் பெற்றோருக்கு செலுத்தும் பின்னர் நன்மைகள் மற்றும் அதன் காரணமாக மரணித்த அரச சேவை அதிகாரிகளின் விதவைகள் மற்றும் பெற்றோருக்குக் கிடைக்கின்ற நன்மைகளில் முரண்பாடுகளை குறைப்பதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.
9. புகையிரதத் திணைக்களம், மொபிடெல் நிறுவனத்துடன் இணைந்து ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய விடுமுறை புகையிரத அனுமதிச்சீட்டுகளை ஒன்லைன் (Online) முறைகள் ஊடாக பெற்றுக்கொள்ளும் முறையை முன்னெடுத்தல்.
10. ஓய்வூதிய ஆவணங்களில் இருக்கின்ற ஆவணக் குறைபாடுகள் காரணமாக 16-2015 மற்றும் 14-2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றுநிருபத்தில் ஓய்வூதிய முரண்பாட்டை பெற்றுத்தராது தொடர்ந்து விசேட கொடுப்பனவு வெலுத்தப்படும் ஓய்வூதியர்களின் அடிப்படைச் சம்பள படிகளையேனும் வைத்து முரண்பாட்டை நீக்குதல்.
11. கண்காய்வு மற்றும் விசாரணை செய்பாடுகளை விரிவுபடுத்தல்.
12. அரச சேவை ஊழியர்கள் தொடர்பிலான தரவுக் கட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கு பொதுத் திரைசேரியுடன் இணைந்து செயற்படுதல்.











## மரணப் பணிக்கொடை மற்றும் விதவை, தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியம் வழங்குவதற்கு விதவைகள் அனாதைகள் பிரிவின் பணிகள் மற்றும் இலங்கையின் திருமணச் சட்டத்தின் தொடர்பு

இந்நாட்டு வரலாற்றில் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது 1898 ஜூன் மாதம் 23 ஆம் திகதி 1898 இன் இலக்கம் 1 கொண்ட விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தை செயற்படுத்துவதன் மூலமாகும். தற்போது விதவைகள் அனாதைகள் பிரிவு மூலம் அரச பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களின் தனித்துவத்தை உறுதி செய்து அவர்கள் விதவைகள் அனாதைகள் முறையில் பதிவு செய்தல், அரச சேவையில் ஈடுபட்டிருக்கும்போது பல்வேறு காரணங்களினால் மரணித்த அதிகாரிகளுக்காக மரணப் பணிக்கொடை உரித்தாக்கல், விதவை, தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதிய கொடுப்பனவு, பணியாளர்களின் 26 வயதுக்கு முன்னர் விசேட தேவையுடைய நிலைக்கு ஆளான அனாதைகளுக்கு விசேட தேவையுடையோருக்கான ஓய்வூதியம் வழங்கல், ஆயுதப் படைச் சேவை அதிகாரிகளுக்காக விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் உரித்தாக்கல் மற்றும் மீண்டும் திருமணம் புரிந்த துணைவர்களுக்கு 50 விதவை ஓய்வூதிய உரித்தாக்கலை மேற்கொள்ளல்.

விதவை,தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கான அடிப்படையாகத் தாக்கம் செலுத்துகின்ற தகைமையாக குறித்த உறுப்பினர் சட்டபூர்வமாக திருமணம் புரிந்திருத்தல். இலங்கையின் 1907 இன் 17 ஆம் இலக்க சாதாரண திருமண மற்றும் விவாகரத்து கட்டளைச் சட்டத்திற்கு அமைய உறுப்பினர் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட செல்லுபடியான திருமணம் ஒன்றில் ஈடுபட்டிருப்பது கட்டாயமாகும். சட்டபூர்வ திருமணம் என்பது பணியாளர் திருமணம் புரிவதற்கு தேவையான குறைந்த வயதை பூர்த்தி செய்த பின் விவாகம் புரிந்திருத்தல். 1995.10.18 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1995 இன் 18 ஆம் இலக்க திருமண பதிவு (திருத்தம்) சட்டத்திற்கு அமைய தற்போது திருமணம் புரிவது தொடர்பில் குறைந்தபட்ச வயதாவது 18 ஆகும். அதேபோன்று அந்தத் திருமணம் தடை செய்யப்பட்ட உறவினருக்கு இடையே இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

தொடர்ச்சி 13 பக்கம்



# தேசிய ஓய்வூதிய தினம்

ஒக்டோபர் 8 2024



## மரணப் பணிக்கொடை மற்றும் விதவை, தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியம் ...

12 பக்கத்தின் தொடர்ச்சி

உதாரணமாக சகோதர சகோதரிகள் இடையிலான திருமணம் சட்டபூர்வமாக செல்லுபடியான திருமணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அதேபோன்று உறுப்பினருக்கு முன்னர் திருமணம் ஒன்று இருந்தால் அந்தத் திருமணத்தை சட்டபூர்வமாக முறித்துக் கொண்ட பின் அதாவது விவாகரத்துடன் தொடர்புபட்டு நீதிமன்றத்தில் உறுதியான தீர்ப்பைப் பெற்ற பின்னர் அல்லது துணைவரின் மரணத்தின் பின்னர் மீண்டும் திருமணம் செய்து கொண்டிருத்தல் வேண்டும். இலங்கையில் திருமணம் தொடர்பான சிக்கல்கள் இடையே தற்போது எமது பிரிவு எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினையாக பணியாளர்கள் பல திருமணங்கள் செய்து கொண்டிருப்பதாகும். அதாவது இருக்கின்ற திருமணம் சட்டபூர்வமாக முடிவுக்கு வருவதற்கு முன்னர் மீண்டும் திருமணம் புரிவதாகும். சில நேரங்களில் விவாகரத்தின் சட்டபூர்வ தீர்ப்பு கிடைப்பது அடிப்படையில் விவாகரத்து முழுமை பெற்றதாகக் கருதி, அறியாமை காரணமாக மீண்டும் திருமணம் புரிவது மற்றும் தெரிந்தே மற்றொரு திருமணத்திற்கு பிரவேசிக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இரண்டாவது திருமணம் சட்டபூர்வமான திருமணமாக ஏற்கப்படாது என மேற்குறிப்பிடப்பட்ட திருமண மற்றும் விவாகரத்து சட்டத்தின் 18ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணியாளர் ஒருவர் முந்தைய திருமணத்தின் துணைவர் உயிரிழந்து இருந்தால் அது பற்றி அந்த நபரின் மரணச் சான்றிதழை சமர்ப்பித்து உறுதி செய்தல் வேண்டும் என்பதோடு அந்தத் திருமணம் விவாகரத்து ஒன்றில் முடிவுற்றிருந்தால் விவாகரத்திற்கான தீர்ப்பை சமர்ப்பித்து உறுதி செய்தல் வேண்டும். என்றாலும் பெரும்பாலும் எமது பிரிவுக்கு கிடைக்கின்ற கோரிக்கைகளில், முதல் திருமணத்தில் ஈடுபட்டதன் தீர்ப்புக் கிடைப்பதற்கு முன்னர் இரண்டாவது திருமணத்தில் ஈடுபட்டிருக்கும் பல சந்தர்ப்பங்களைப் பார்க்க முடிகிறது. விவாகரத்து ஒன்றில் முதலில் கிடைக்கின்ற சட்டபூர்வமான தீர்ப்பைப் பெற்ற பின்னர் உறுதியான தீர்ப்பை பெற்றுக்கொண்டு விவாகரத்து பூர்த்தியாவதற்கு முன்னர் அறியாமை காரணமாக பலரும் மீண்டும் திருமணம் புரிகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பணியாளர்கள் ஈடுபடும் இரண்டாவது திருமணம் செயலற்றது மற்றும் அதிகாரமற்ற திருமணம் ஒன்றாக இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் துணைவருக்கு மற்றும் அந்தத் திருமணத்தின் மூலம் பிறந்த அனாதைப் பிள்ளைகளுக்கு விதவை,தபுதாரர் மற்றும் அனாதை உரிமையை இழக்க நேரிடும். விவாகரத்து அரச சேவையில் கூட, ஓய்வூதியத்தின் பின் இடம்பெற்றாலும் இலங்கையில் இருக்கின்ற செல்லுபடியான சட்டத்திற்கு அமைய அதனை ஏற்று துணைவருக்கு விதவை ஓய்வூதியத்தை உருத்தாக்கல் மேற்கொள்ளப்படமாட்டாது.

பங்களிப்பாளர் ஒருவரினால் செல்லுபடியாக பல திருமணங்கள் செய்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் செல்லுபடியாகும் திருமணத்தின் துணைவருக்கு மற்றும் முந்தைய திருமணங்களின் அனாதைகள் ஓய்வூதிய உரிமையை கருத்தில் கொள்ள முடியுமான பிள்ளைகள் இருந்தால் அந்தப் பிள்ளைகளுக்கு விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நன்மை உரித்தாகும். இங்கு இறுதியான செல்லுபடியான திருமணத்தின் துணைவருக்கு 50% ஆன விதவை ஓய்வூதியமும் முந்தைய திருமணத்தில் ஆனாதை உரித்தைக் கொண்ட பிள்ளைகளுக்கு 50% ஆன அனாதை ஓய்வூதியமும் உரித்தாக்கப்படுவதோடு அனாதை உரிமை முடிவுற்ற பின் இறுதியான செல்லுபடியான திருமணத்தின் துணைவருக்கு 100% ஆன விதவை ஓய்வூதியம் கருத்தில் கொள்ளப்படும்.

இது தவிர ஓய்வு பெற்ற பின் செய்து கொள்ளும் திருமணத்திற்காக விதவை, தபுதாரர் மற்றும் அனாதை உரிமையை பெற்றுக்கொள்வதற்கு முடியாது. விதவை, தபுதாரர் மற்றும் அனாதை உரிமையை பெற்றுக்கொள்வதாயின் பணியாளர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் திருமணம் புரிந்திருப்பது முக்கியமான காரணியாகும். இது தவிர விவாரத்து ஒன்றில் விவாகரத்து வரையான தீர்ப்பு ஒன்றைப் பெற்று திருமணம் புரிந்தவர்களும் உறுதியான தீர்ப்பைப் பெற்று மீண்டும் திருமணம் புரிந்திருப்பதோடு, அந்தத் திருமணம் ஓய்வு பெறுவதற்கு முன்னர் செய்து கொண்டிருந்தால் விதவை, தபுதாரர் அனாதை உரிமையை பெற்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

மீண்டும் திருமணம் புரிந்த துணைவர்களுக்கு 50% விதவை, தபுதாரர் ஓய்வூதியம் உரித்தாக்கப்படும். துணைவர் இதுவரை பெற்று வந்த 100% விதவை, தபுதாரர் ஓய்வூதியம் 50% வரை குறைத்து தொடர்ச்சியாக வழங்கப்படும். மீண்டும் திருமணம் புரிந்த துணைவர் ஒருவராயின் தமது இரண்டாவது திருமணம் விவாகரத்தாவது அல்லது இல்லாமலாவது அல்லது அதிகாரமற்றதாக்கி ரத்துச் செய்யப்பட்டிருந்தாலும், சட்டத்தின்படி திருமணம் புரிந்த காரணத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அந்தத் துணைவருக்கு வழங்கப்படும் 50% விதவை ஓய்வூதியம் மாத்திரமாகும். அது மீண்டும் 100% வரை திருத்தப்படமாட்டாது.

துணைவர் மீண்டும் திருமணம் புரிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தின்போது பங்களிப்பாளரின் வயது 26க்கு குறைந்த வேலையற்ற பிள்ளைகள் இருந்தால் 100% அனாதை ஓய்வூதியம் அனாதை உரிமை முடியும் சந்தர்ப்பம் வரை அந்தப் பிள்ளைகளுக்கு உரித்தாக்கப்பட்ட பின்னர 50% ஆன விதவை ஓய்வூதிய உரிமை துணைவருக்கு கருத்தில் கொள்ளப்படும்.

அதேபோன்று துணைவர் ஒருவர் மீண்டும் செய்துகொள்ளும் திருமணத்தில் கணவர் அல்லது மனைவி அரச பணியில் ஈடுபடுவதாயின் அவரது மரணத்தின் பின் ஏற்படுவது வரை முந்தைய திருமணத்தின் பங்களிப்பாளருக்கான 50% விதவை,தபுதாரர் ஓய்வூதியம் உரித்தாவதோடு இரண்டாவது திருமணத்தின் பணியாளரது மரணத்தின் பின்னரான நாள் தொடக்கம் அந்தத் திருமணத்திற்காக 100% உரிமை கருத்தில் கொள்ளப்படுவதால் முந்தைய உரிமை 2010 இன் 08 மற்றும் 09 ஆம் இலக்க திருத்தப்பட்ட விதவை அனாதை, தபுதாரர் சட்டத்தின் பிரகாரம் நிறுத்தப்படுதல் வேண்டும்.

மேலும் சடங்கு ரீதியான திருமணம் சட்டபூர்வமாக பதிவு செய்யாது மணவாழ்வில் ஈடுபடுபவர் மற்றும் அவர் மூலம் குழந்தைகளைப் பெற்ற விதவை ஓய்வூதியம் பெறுநருக்கு வெவ்வேறாக தீர்வு வழங்குவது எமது பிரிவால் மேற்கொள்ளப்படும். மேலும் தாய்மை என்பது இயல்பானது என்ற அடிப்படையில், விதவை ஓய்வூதிய முறையில் பதிவு செய்யப்பட்ட திருமணம் ஆகாத பெண் பணியாளர்களுக்கு பிறந்த பிள்ளைகளுக்காக உறுப்பினர் மரணித்த பின் 26 வயதுக்குக் குறைவான பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு அனாதை ஓய்வூதியம் உரித்தாக்கப்படும்.

மேலும் திணைக்களம் இரத்துச் செய்வதன் அடிப்படையில் ஓய்வூதிய சட்டக் கோவையின் 27 உறுப்புரையின் கீழ் ஓய்வு அளிக்கப்படும் பணியாளர்களுக்காக அவர்களின் 55 வயது வரை செய்யும் திருமணத்திற்காக பங்களிப்பாளர் மரணத்தின் பின் விதவை, தபுதாரர் மற்றும் அனாதை ஓய்வூதியம் உரித்தாக்கப்படும்.

# ஓய்வூதியத் திணைக்களம் 2024 ஆம் ஆண்டில் பெற்ற முன்னேற்றம்

# 2024 ஆம் ஆண்டும் செப்டெம்பர் ஆகும்போது நேரடி ஓய்வூதியர்கள் எண்ணிக்கை 717,347

# மொத்த ஓய்வூதியச் செலவு 253 பில்லியன் ரூபா

மொத்த ஓய்வூதியச் செலவு (2024 ஜனவரி - செப்டெம்பர்)

| மாதம் | சிவில் | | இராணுவம் | | வி.அ.ஓ. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியர் ண்ணிக்கை | ஓய்வூதியர் எண்ணிக்கை | தொகை (மில்லியன் ரூபா) | ஓய்வூதியர் எண்ணிக்கை | தொகை (மில்லியன் ரூபா) | முழு ஓய்வூதியர் எண்ணிக்கை | முழுத் தொகை (மில்லியன் ரூபா) | தொகை (மில்லியன் ரூபா) |
| ஜனவரி | 384857 | 14,985 | 187689 | 5,262 | 131924 | 6,027 | 704,470 | 26,275 |
| பெப்ரவரி | 386744 | 15,516 | 187852 | 5,300 | 132746 | 6,177 | 707,342 | 26,992 |
| மார்ச | 387909 | 15,344 | 188062 | 5,366 | 133261 | 6,162 | 709,232 | 26873 |
| ஏப்ரல் | 389421 | 16,458 | 188419 | 5,686 | 134175 | 6,585 | 712,015 | 28,729 |
| மே | 389021 | 16,104 | 188093 | 5,554 | 134397 | 6449 | 711,511 | 28106 |
| ஜூன் | 389870 | 16,521 | 188095 | 5,604 | 134822 | 6,600 | 712,787 | 28,726 |
| ஜூலை | 389307 | 16,576 | 186715 | 5,680 | 134693 | 6,625 | 710,715 | 28,881 |
| ஒகஸ்ட் | 390969 | 16,722 | 187366 | 5,670 | 135485 | 6,665 | 713,820 | 29,057 |
| செப்டெம்பர் | 392966 | 17,013 | 187913 | 6,184 | 136468 | 6,796 | 717,347 | 29,993 |
| மொத்தம | | 145,240 | | 50,305 | | 58,086 | | 253,631 |

முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கான நிலையான மாதக் கொடுப்பனவு 2024 செப்டெம்பர் வரை

| மாதம் | ஆட்களின் எண்ணிக்கை | தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|
| ஜனவரி | 2,891 | 93 |
| பெப்ரவரி | 2,938 | 105 |
| மார்ச் | 2,981 | 102 |
| ஏப்ரல் | 3,029 | 97 |
| மே | 3,093 | 111 |
| ஜூன் | 3,135 | 100 |
| ஜூலை | 3,166 | 101 |
| ஒகஸ்ட் | 2,796 | 100 |
| செப்டெம்பர் | 3,099 | 123 |
| மொத்தம் | | 932 |

### பணிக்கொடைக் கொடுப்பனவு (2020 2024 செப்டெம்பர் வரை)




விதவை, தபுதாரர், அனாதை நிதியத்திற்கு பங்களிப்பு நிதி வருவாய் - 2019 தொடக்கம் 2024 செப்டெம்பர் வரை

| ஆண்டு | அங்கத்தவர் பாதுகாப்பு பங்களிப்பு தொகை (மத்திய அரசு) | அங்கத்தவர் பாதுகாப்பு பங்களிப்பு தொகை (மாகாண சபை) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| 2019 | 19001657912 | 10029618701 | 29031276613 |
| 2020 | 21410395013 | 11024652894 | 32435047907 |
| 2021 | 22595155045 | 12054484364 | 34649639409 |
| 2022 | 23872352903 | 13543311342 | 37415664245 |
| 2023 | 22716778374 | 13561986537 | 36278764911 |
| 2024 செப்டெம்பர் | 17287166691.15 | 11843816863.65 | 29130983555 |

பணிக்கொடைக் கொடுப்பனவு (2024 செப்டெம்பர் வரை)

| மாதம் | ஓய்வூதியர்கள் எண்ணிக்கை | தொகை (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| ஜனவரி | 3,155 | 3,937 |
| பெப்ரவரி | 2,938 | 3,279 |
| மார்ச் | 3,263 | 3,666 |
| ஏப்ரல் | 3,716 | 4,144 |
| மே | 3,567 | 3,718 |
| ஜூன் | 2,957 | 3,601 |
| ஜூலை | 3,474 | 4,105 |
| ஒகஸ்ட் | 3,722 | 3,979 |
| செப்டெம்பர் | 2,408 | 2,678 |
| மொத்தம் | 29,200 | 33,106 |

நேரடி சேவையில் ஈடுபட்டிருக்கும்போது மரணித்த அல்லது பலவீன நிலைக்கு உள்ளான முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்களுக்கு இழப்பீட்டு ஊதிேயம் மற்றும் கொடுப்பனவு (2024 செப்டெம்பர் வரை)

| நிறுவனம் | மாத எண்ணிக்கை (செப்டெம்பர்) | செலுத்திய தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|
| இராணுவம் | 33296 | 29631 |
| கடற்படை | 1444 | 1207 |
| விமானப் படை | 484 | 368 |
| பொலிஸ் | 1,692 | 1583 |
| நிலையான கொடுப்பனவை | 3099 | 932 |
| 5000 ரூபா கொடுப்பனவை செலுத்தல | 34645 | 1179 |
| மொத்தம் | | 34900 |

ஓய்வூதியம் வழங்கலுக்கு அரச மற்றும் தனியார்த் துறையின் பங்களிப்பு

| நிறுவனம் | Number of Pensioners |
|---|---|
| தபால் அலுவலகம் | 20,026 |
| கிராமிய வங்கி | 5,526 |
| சணச சங்கம் | 200 |
| சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம் | 66 |
| இலங்கை வங்கி | 181,073 |
| ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி | 108 |
| கோமர்ஷல் வங்கி | 10,671 |
| ஹட்டன் நெசனல் வங்கி | 16,307 |
| HSBC வங்கி | 97 |
| மக்கள் வங்கி | 247,822 |
| இந்திய அரச வங்கி | 2 |
| நேசன் ட்ரஸ்ட் வங்கி | 90 |
| NDB வங்கி | 10,391 |
| முஸ்லிம் வர்த்தக வங்கி | 1 |
| சம்பத் வங்கி | 17,133 |
| சேலான் வங்கி | 3,769 |
| யூனியன் வங்கி | 19 |
| பேன் ஏசியா வங்கி | 39,849 |
| னுகுஊஊ அபிவிருத்தி வங்கி | 1,622 |
| அமானா வங்கி | 645 |
| தேசிய சேமிப்பு வங்கி | 121,351 |
| சணச அபிவிருத்தி வங்கி | 20,965 |
| HDFC வங்கி | 136 |
| CDB வங்கி | 2 |
| பிராந்திய அபிவிருத்தி வங்கி | 16,267 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 88 |
| LB FINANCE நிறுவனம் | 3,121 |
| மொத்தம் | 717,347 |

மாவட்ட அடிப்படையில் ஓய்வூதியர்கள் எண்ணிக்கை மற்றும் செலவு 2024 டிசம்பர்

| மாவட்டம் | Number of Pensioners | Value (Rs) |
|---|---|---|
| கம்பஹா | 90,791 | 3,710,659,574 |
| கொழும்பு | 89,601 | 3,851,242,180 |
| குருநாகல் | 70,408 | 3,009,258,244 |
| கண்டி | 62,740 | 2,660,620,653 |
| களுத்துறை | 46,382 | 1,887,855,850 |
| அநுராதபுரம் | 41,283 | 1,759,237,204 |
| காலி | 40,335 | 1,666,633,387 |
| கேகாலை | 34,800 | 1,460,832,816 |
| பதுளை | 29,746 | 1,233,302,571 |
| மாத்தறை | 29,448 | 1,224,940,921 |
| இரத்தினபுரி | 24,831 | 1,038,072,634 |
| மாத்தளை | 19,441 | 817,510,167 |
| ஹம்பாந்தோட்டை | 18,249 | 758,003,954 |
| புத்தளம் | 16,389 | 670,096,400 |
| யாழ்ப்பாணம் | 15,408 | 629,399,975 |
| அம்பாறை | 15,299 | 660,350,367 |
| மொனராகலை | 13,168 | 541,151,553 |
| பொலன்னறுவை | 12,785 | 519,448,821 |
| நுவரெலியா | 12,229 | 494,220,822 |
| மட்டக்களப்பு | 9,333 | 396,872,745 |
| திருகோணமலை | 9,220 | 385,733,653 |
| வெளிநாட்டு ஓய்வூதியம் | 7,802 | 296,505,526 |
| வவுனியா | 3,246 | 140,614,079 |
| மன்னார் | 1,792 | 74,051,802 |
| கிளிநொச்சி | 1,340 | 50,880,207 |
| முல்லைத்தீவு | 1,281 | 55,642,818 |
| மொத்தம் | 717,347 | 29,993,138,920 |

மொத்தம் காப்புறுதி பெறுவோர் - 2019 தொடக்கம் செப்டெம்பர் 2024 வரை

| வருடம் | ஓய்வூதியம் பெறுவோர் | தொகை |
|---|---|---|
| 2019 | 62,061 | 142,274,400 |
| 2020 | 82,184 | 186,384,800 |
| 2021 | 99,922 | 236,468,600 |
| 2022 | 111,618 | 275,226,600 |
| 2023 | 140,684 | 332,413,000 |
| 2024 செப்டெம்பர் வரை | 157,362 | 287,449,600 |

ஓய்வூதிய கொடுப்பனவு (பெறுமதிக்கு அமைய) 2024 செப்டெம்பர்

| மாதச் சம்பளம் மற்றும் கொடுப்பனவு (ரூபா) | ஓய்வூதியர்கள் எண்ணிக்கை | வீதமாக (மு) |
|---|---|---|
| 20000 | 39,398 | 5.5 |
| 20000 - 29999 | 178,151 | 24.8 |
| 30000 - 39999 | 185,171 | 25.8 |
| 40000 - 49999 | 171,583 | 23.9 |
| 50000 - 59999 | 81,199 | 11.3 |
| 60000 - 69999 | 37,947 | 5.3 |
| 70000 - 79999 | 15,124 | 2.1 |
| 80000 - 89999 | 4,712 | 0.7 |
| 90000 - 99999 | 1.612 | 0.2 |
| 100000 - 149999 | 2,325 | 0.3 |
| 150000 - 199999 | 96 | 0.013 |
| 200000க்கு மேற்பட்டது. | 29 | 0.004 |
| மொத்தம் | 717,347 | |

மாவட்ட மட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் செலவுகள் -2024 செப்டெம்பர்

| மாவட்டம் | ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| கம்பஹா | 90,791 | 3,710,659,574 |
| கொழும்பு | 89,601 | 3,851,242,180 |
| குருநாகல் | 70,408 | 3,009,258,244 |
| கண்டி | 62,740 | 2,660,620,653 |
| களுந்துறை | 46,382 | 1,887,855,850 |
| அநுராதபுரம் | 41,283 | 1,759,237,204 |
| காலி | 40,335 | 1,666,633,387 |
| கேகாலை | 34,800 | 1,460,832,816 |
| பதுளை | 29,746 | 1,233,302,571 |
| மாத்தறை | 29,448 | 1,224,940,921 |
| இரத்தினபுரி | 24,831 | 1,038,072,634 |
| மாத்தளை | 19,441 | 817,510,167 |
| ஹம்பாந்தோட்டை | 18,249 | 758,003,954 |
| புத்தளம் | 16,389 | 670,096,400 |
| யாழ்ப்பாணம் | 15,408 | 629,399,975 |
| அம்பாறை | 15,299 | 660,350,367 |
| மொனராகலை | 13,168 | 541,151,553 |
| பொலன்னறுவை | 12,785 | 519,448,821 |
| நுவரெலியா | 12,229 | 494,220,822 |
| மட்டக்களப்பு | 9,333 | 396,872,745 |
| திருகோணமலை | 9,220 | 385,733,653 |
| வெளிநாட்டு ஓய்வூதியம் | 7,802 | 296,505,526 |
| வவுனியா | 3,246 | 140,614,079 |
| மன்னார் | 1,792 | 74,051,802 |
| கிளிநொச்சி | 1,340 | 50,880,207 |
| முல்லைத்தீவு | 1,281 | 55,642,818 |
| மொத்தம் | 717,347 | 29,993,138,920 |

ஓய்வூதிய பலன்கள் (மதிப்பின் அடிப்படையில் செப்டெம்பர்02024

| மாதாந்த சம்பளம் மற்றும் கொடஜப்பனவஜ | ஓய்வூதியம் பெறுவோர் | வீதம் |
|---|---|---|
| 20,000 | 39,398 | 5.5 |
| 20000 – 29999 | 178,151 | 24.8 |
| 30000 – 39999 | 185,171 | 25.8 |
| 40000 – 49999 | 171,583 | 23.9 |
| 50000 – 59999 | 81,199 | 11.3 |
| 60000 - 69999 | 37,947 | 5.3 |
| 70000 - 79999 | 15,124 | 2.1 |
| 80000 - 89999 | 4,712 | 0.7 |
| 90000 - 99999 | 1.612 | 0.2 |
| 100000 - 149999 | 2,325 | 0.3 |
| 150000 - 199999 | 96 | 0.013 |
| 200000 | 29 | 0.004 |
| மொத்தம் | 717,347 | |

செயற்படுத்தப்பட்ட ஓய்வூதியர் எண்ணிக்கை (2024 ஜனவரி செப்டெம்பர்)

| மாதம் | சிவில் | வி.அ.ஓ. | இராணுவம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஜனவரி | 793 | 583 | 309 | 1685 |
| பெப்ரவரி | 2994 | 872 | 898 | 4764 |
| மார்ச் | 2048 | 877 | 591 | 3516 |
| ஏப்ரல் | 2335 | 1065 | 930 | 4330 |
| மே | 888 | 517 | 343 | 1748 |
| ஜூன் | 2035 | 801 | 596 | 3432 |
| ஜூலை | 2356 | 979 | 825 | 4160 |
| ஒகஸ்ட் | 2250 | 909 | 751 | 3910 |
| செப்டெம்பர் | 2638 | 889 | 868 | 4395 |
| மொத்தம் | 18,337 | 7492 | 6111 | 31940 |

விதவைகள் மற்றும் அனாதைகள் நிதி பங்களிப்பு வருமானம்

| வருடம் | சமூக பங்களிப்பு | சமூக பாதுகாப்பு பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| 2019 | 19,001,657,912 | 10,029,618,701 | 29,031,276,613 |
| 2020 | 21,410,395,013 | 11,024,652,894 | 32,435,047,907 |
| 2021 | 22,595,155,045 | 12,054,484,364 | 34,649,639,409 |
| 2022 | 23,872,352,903 | 13,543,311,342 | 37,415,664,245 |
| 2023 | 22,716,778,374 | 13,561,986,537 | 36,278,764,911 |
| 2024 | 17,287,166,691 | 11,843,816,864 | 29,130,983,555 |

# 'இரு நாடுகள்' என்ற தீர்வை அமுல்படுத்த வலியுறுத்தும் உலகம்

## இஸ்ரேல் – பலஸ்தீன பிரச்சினைக்கு முடிவுகாண உலகளாவிய கூட்டணி

காஸா மீதான யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து பலஸ்தீனப் பிரச்சினைக்கு இரு நாட்டு தீர்வு பெரும் பேசுபொருளாகியுள்ளது. பலஸ்தீனப் பிரச்சினையானது 0810 தசாப்தங்களாக தீர்வின்றி நீடித்துவரும் பெரும் பிரச்சினையாகும். இப்பிரச்சினையின் விளைவாக இலட்சக்கணக்கான மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் இலட்சக் கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். குடும்பங்களை இழந்துள்ளனர். இருப்பிடங்களை இழந்து 0607 தசாப்தங்களாக அகதி முகாம்களில் தங்கியுள்ளனர்.

பலஸ்தீனியர்கள் முகம் கொடுத்துள்ள இந்த அவலநிலைக்கு முடிவு காண்பதையும் பலஸ்தீன், இஸ்ரேல் மத்தியில் அமைதி, சமாதானத்தை ஏற்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு தான் இரு நாட்டு தீர்வு வலியுறுத்தப்படுகிறது. இதற்கு உலகின் பல நாடுகளும் ஆதரவு நல்கியுள்ளன. குறிப்பாக ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளில் 149 நாடுகள் பலஸ்தீனை அங்கீகரித்திருக்கின்றன.

பலஸ்தீனப் பிரச்சினை என்பது முதலாம் உலகப் போரின் பின்னர் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாகும். அதாவது முதலாம் உலகப் போரில் பலஸ்தீன் பிரித்தானியாவின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானது. அந்த சூழலில் பிரி'த்தானிய வெளிவிவகாரச் செயலாளராக இருந்த ஆதர் பெல்போர் 1917 நவம்பர் 02 ஆம் திகதியிட்டு பெரிய பிரித்தானிய மற்றும் அயர்லாந்தின் சியோனிஸ கூட்டமைப்புக்கு அனுப்புவதற்காக, பிரித்தானிய யூத சமூகத்தின் தலைவரான லோர்ட் ரோத்ஸ்சைல்ட்டுக்கு எழுதிய கடிதத்தில், பலஸ்தீனில் யூதர்கள் குடியேறுவதற்கான ஆதரவை அறிவித்தார். அக்கடிதம் 1917 நவம்பர் 09 ஆம் திகதி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில் மேற்கு நாடுகளிலுள்ள இஸ்ரேலர்கள் பலஸ்தீனுக்கு குடிபெயர ஆரம்பித்தனர். அதனைத் தொடர்ந்து கருக்கொள்ளத் தொடங்கிய பலஸ்தீன் இஸ்ரேலர் முறுகல் 1929 முதல் ஆட்சேபனைகளாகவும் எதிர்ப்புக்களாகவும், வேலைநிறுத்தங்களாகவும் வெளிப்படத் தொடங்கி சொற்ப காலத்தில் மோதல்களாகவும் இரத்தம் சிந்துதல்களாகவும் வெளிப்படலாயின. பூர்வீக பலஸ்தீனர்கள் தங்கள் இருப்பிடங்களை இழக்கத் தொடங்கியதன் வெளிப்பாடே இது. இந்நிலையில் அவர்கள் அகதி முகாம்களுக்குள் தள்ளப்படலாயினர். இந்த சூழலில் பிரித்தானியா அமைத்த பீல் கமிஷனின் 1937 ஆம் ஆண்டு அறிக்கையில், பலஸ்தீன் இஸ்ரேல் பிரச்சினைக்கு இரு நாட்டு தீர்வே சிறந்தது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் இந்த முன்மொழிவு இற்றைவரையும் நடைமுறைக்கு வரவில்லை.

ஆனால் பலஸ்தீன் பிரச்சினையின் விளைவாக இஸ்ரேல் பிராந்திய நாடுகளுடன் மூன்று போர்களை சந்தித்துள்ளது. அதனைத் தொடர்ந்து பலஸ்தீனில் உருவான ஆயுதக்குழுக்களுடன் மோதல்களிலும் ஈடுபட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் 07 ஆம் திகதி ஹமாஸ் தெற்கு இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து காஸா மீது இஸ்ரேல் முழு அளவிலான யுத்தத்தை ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து பலஸ்தீன பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதன் அவசியம் பரவலாக வலியுறுத்தப்படுகிறது. இது தொடர்பில் உலகளாவிய ரீதியில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

பலஸ்தீனில் இரத்தம் சிந்துதலை முடிவுக்கு கொண்டு வருவதோடு அந்த மக்களுக்கு அமைதி சமாதான வாழ்வை பெற்றுக்கொடுப்பதை இலக்காகக் கொண்டதாகவே இம்முயற்சிகள் அமைந்துள்ளன. அந்தடிப்படையில் இஸ்ரேல்பலஸ்தீனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்ப்பதற்கு இரு நாட்டு தீர்வே ஒரே வழி என்பதை உலகின் பெரும்பாலான நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. அந்த வகையில் ஐ.நா. சபையிலும் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அத்தோடு ஸ்பெய்ன், நோர்வே உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளும் பலஸ்தீனை அங்கீகரித்திருக்கின்றன. 1967 ஜுன் 04 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு பலஸ்தீன இராச்சியத்தை அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பில் சவுதி அரேபியா அதிகூடிய கவனம் செலுத்தி இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்து வருகிறது. நேச நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளையும் சந்திப்புக்களையும் நடாத்தி வருகிறது.

இதேவேளை அமெரிக்கா ஆபிரகாம் உடன்படிக்கை படி இஸ்ரேலை சூழவுள்ள முஸ்லிம் நாடுகளுடன் இயல்பு நிலையை ஏற்படுத்தும் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரெய்ன் ஆகிய நாடுகள் இஸ்ரேலுடன் ஏற்கனவே தூதரக உறவுகளை ஆரம்பித்துள்ளன. இந்நிலையில் சவுதிக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கன உச்சபட்ட முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

ஆனால் பலஸ்தீன இராச்சியத்தை அங்கீகரிக்காமல் இஸ்ரேலுடன் எவ்வித இயல்பு நிலையும் கிடையாது என உறுதிபடக்கூறியுள்ள சவுதி, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்டனி பிளிங்கனிடமும் இதனைத் தெ ளிவாகக் குறிப்பிட்டுள்ளது.



இவ்வாறான சூழலில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 79 வது அமர்வு அமெரிக்காவின் நியோர்க்கில் அண்மையில் நடைபெற்ற போது, பலஸ்தீன விவகாரம் குறித்த அமைச்சர்கள் மட்ட கூட்டம் எகிப்து, சவூதி அரேபியா, கட்டார், ஜோர்டான், இந்தோனேசியா, நைஜீரியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய காஸா மீதான அரபுஇஸ்லாமிய தொடர்புக் குழுவின் அழைப்பில் செப்டம்பர் 26 ஆம் திகதி நியோர்க்கில் நடைபெற்றது. ஸ்பெய்னின் மட்ரியட் நகரில் நோர்வே, ஸ்லோவேனியா, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜோசப் பொரெல் மற்றும் பலஸ்தீனிய பிரதமர் முகமது முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்ட அரபுஐரோப்பிய கூட்டத்தைத் தொடர்ந்து இக்கூட்டம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அரபு லீக், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே ஆகியன ஏற்பாடு செய்த "காஸாவின் நிலைமை மற்றும் இரு நாடுகளின் தீர்வை நியாயமாகவும் அமைதிக்கான பாதையாகவும் நடைமுறைப்படுத்துதல்" என்ற தலைப்பிலான இம்மாநாட்டின் போது அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளையும் ஐரோப்பிய நாடுகளையும் உள்ளடக்கி இஸ்ரேல் பலஸ்தீன மோதலுக்கு இரு நாடுகளின் தீர்வை முன்னெடுப்பதற்காக புதிய உலகளாவிய கூட்டணியும் அமைக்கப்பட்டது.

இரு நாடுகளின் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கவென உலகளாவிய கூட்டணியை உருவாக்கிய பின்னர் உரையாற்றிய சவூதி அரேபிய வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான், 'இதன் முதலாவது கூட்டம் ரியாத்தில் நடைபெறும் என்றும் காஸா மீதான போர் மனிதாபிமான பேரழிவை ஊக்குவித்துள்ளது. மேற்குக்கரையில் இஸ்ரேலியப் படைகள் செய்த கடுமையான மீறல்கள், அல்அக்ஸா மசூதி மற்றும் மத புனிதங்களுக்கு அச்சுறுத்தல், கொள்கைகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுதல், திட்டமிட்ட அழிவு, கட்டாய இடப்பெயர்வு, பட்டினியை போரின் கருவியாகப் பயன்படுத்துதல், மனிதாபிமானமற்ற தன்மை, மிகக் கொடூரமான வடிவங்களிலான சித்திரவதை ஆகியவற்றை தற்காப்பு நடவடிக்கை என நியாயப்படுத்த முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இரு நாட்டு தீர்வு இஸ்ரேல் உட்பட முழு பிராந்தியமும் பாதுகாப்பையும் சகவாழ்வையும் அனுபவிக்கும் புதிய யதார்த்தத்தை உருவாக்கும். அதனால் இம்மோதலை முடிவுக்கு கொண்டு வரவும், சர்வதேச பாதுகாப்பு மற்றும் அமைதியை பாதுகாக்கவும் அனைத்து நாடுகளும் இணைந்து கொள்ள வேண்டுமென நாங்கள் அழைக்கிறோம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் பொதுச்செயலாளர் பொதுச் செயலாளர் ஜசெம் முகமது அல்புதைவி பலஸ்தீன மக்களின் பெரும் துன்பத்தைத் தணிக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் நாம் ஒத்துழைப்பு நல்குவோம் என்றுள்ளார்.

இந்நிலையில் வளைகுடா நாடுகளதும் அமெரிக்காவினதும் வெளியுறவு அமைச்சர்கள் 1967 எல்லையில் சுதந்திர பலஸ்தீன அரசை நிறுவுவதற்கு தங்கள் ஆதரவை அறிவித்துள்ளனர். வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான அமைச்சர்கள் கூட்டம் கடந்த செப்டம்பர் 25 அன்று நியூயார்க்கில் நடைபெற்ற போது இந்த ஆதரவு அறிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் போது, 2023 ஒக்டோபர் 7ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெயர்ந்த அனைத்துப் பொதுமக்களும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர்கள், மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட, நிலையான மற்றும் வளமான பிராந்தியத்திற்கு நீடித்த அமைதி அவசியம் என்ற தங்கள் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

ஐ.நா. 79வது அமர்விலும் இரு நாடுகளின் தீர்வை அமுல்படுத்த அரபு நாடுகள் வலியுறுத்தின. பலஸ்தீனத்தை அங்கீகரிப்பது இஸ்ரேலுடன் நியாயமான பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்கும் என்று அரபு லீக் பொதுச்செயலாளர் அஹ்மத் அபுல் கெயிட் கூறினார்.

இதேவேளை கட்டாரின் தலைநகர் டோஹாவில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற ஆசிய ஒத்துழைப்புக்கான உரையாடல் மாநாட்டில் மத்திய கிழக்கு நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முக்கிய படியாக இஸ்ரேல் பலஸ்தீன மோதலுக்கு இரு நாடுகளின் தீர்வை ஆதரிக்குமாறு சவுதி அரேபியா அனைத்து நாடுகளையும் கேட்டுக் கொண்டது. இம்மாநாட்டில் உரையாற்றிய சவுதி வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான், பிராந்தியத்தில் தொடரும் வன்முறை எவ்வாறு சர்வதேச வர்த்தகத்தை சீர்குலைக்கிறது, அரசியல் பதட்டங்களைத் தூண்டுகிறது, முதலீடுகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை அச்சுறுத்துகிறது. பலஸ்தீன் மற்றும் லெபனானில் தற்போது நிலவும் அமைதியின்மை பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது. அதனால் அனைத்து நாடுகளும் இருநாட்டு தீர்வை ஆதரிக்க வேண்டும் என்றுள்ளார்.

ஆனால் இரு நாட்டு தீர்வு யோசனையை நிராகரிப்பதாகக் குறிப்பிட்டுள்ள இஸ்ரேல் பலஸ்தீனைத் தனிநாடாக அங்கீகரிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிப்பிட்டுள்ளது. இருப்பினும் பலஸ்தீனில் அமைதி, சமாதானத்தை இரு நாட்டு தீர்வின் ஊடாக ஏற்படுத்துவதில் உலகின் பெரும்பாலான நாடுகள் இணக்கம் கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**மர்லின் மரிக்கார்...**

---

# கொழும்பு ஸாஹிராவில் ஸ்தாபகர் தின வைபவம்





(ருஸைக் பாரூக் )

கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் ஸ்தாபகர் தின வைபவம் கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் கல்லூரி கபூர் மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்தாபகர் தின உரையை பிரதம அதிதி பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் (டாக்டர்) எம்.எஸ்.எம்.அனஸ் "இலங்கையில் முஸ்லிம் நுண்கலை மரபு மற்றும் அதன் தாக்கம், கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் பங்களிப்பு மையமாகக் கொண்ட ஆய்வு" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இன்று ஸாஹிரா கல்லூரி 5,600க்கும் மேற்பட்ட மாணவர்களையும் கிட்டத்தட்ட 300 ஆசிரியர்களையும் கொண்ட இலங்கையின் மிகப்பெரிய முஸ்லிம் கல்வி நிறுவனமாகும். பேராசிரியர் (டாக்டர்) எம்.எஸ்.எம். அனஸுக்கு அதிபர் ரிஸ்வி மரிக்கார் நினைவு சின்னமொன்றையும் வழங்கினார்.கல்லூரி ஆளுநர் சபை தலைவர் பௌசுல் ஹமீத், செயலாளர் நுஸ்ரி முப்சூர், பிரதி அதிபர்கள் எம்.எம்.ஷாதுலி, உப அதிபர்கள் அஷ்ஷெய்க் ஏ. எம். மிஹ்லார் , சீனத் இஸ்மாயில், பிரிவுத் தலைவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

---

பேருவளையில்

# ஸஹீஹுல் புஹாரி தமாம்



(பேருவளை விசேட நிருபர்)

வரலாற்று புகழ்மிகு சீனன் கோட்டை பிட்டவளை அல்மிர்அத்துஷ் ஷாதுலிய்யா ஸாவியாவில் 92 ஆவது வருட புனித ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ் 6ஆம் திகதி கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம். எம் ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெற்றது. தமாம் மஜ்லிஸில் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி பீ.ஏ) விஷேட சொற்பொழிவாற்றினார்.

இந்த ஸாவியாவை அமைத்து புனித ஸஹீஹுல் புஹாரி மஜ்லிஸை ஆரம்பித்த ஆத்மீக ஞானி அஷ்ஷெய்ஹ் சேகுனா அப்பா ரஹ்மதுல்லாஹி அவர்களுக்காகவும், அவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் அன்று முதல் இன்று வரை பங்களித்த அனைவருக்காகவும் நாட்டுக்காகவும் துஆப் பிரார்த்தனையும் நடாத்தப்பட்டது.



பிரான்ஸ் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் கோகுலன் கருணாகரனுக்கு செம்மொழித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் சென்னை பிரசிடென்சி கிளப்பில் அண்மையில் பாராட்டு விழா நடைபெற்றபோது எடுத்த படம்.

---

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் நலன்புரி உதவிகள்

(கரவெட்டி தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடைபெறும் நிகழ்வுகள்ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினர் சிவாநாதன் தலைமையில் அண்மையில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முருக வழிபாடு என்ற தலைப்பில் ஆன்மீக அருளுரை ஓய்வு பெற்ற வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி விஜயகுமாரி முருகேசம்பிள்ளை நிகழ்த்தினார்.

அதனைதொடர்ந்து உதவித் திட்டங்களாக, யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய கோரிக்கைக்கமைவாக, நவராத்திரி விழா போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்குவதற்கான நிதியாக ரூ.20,000 வழங்கிவைக்கப்பட்டதுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வரலாற்றுத்துறை பகுதியினரின் கோரிக்கைக்கமைவாக, கலாசார ஆய்வுக்கான நிதியாக ரூ.50,000 ரூபாவும் வழங்கப்பட்டன. இதேவேளை வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கறகும் மாணவன், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி, முன்னாள் போராளிகள் ஒருவருக்குமாக நான்கு பேருக்கு முச்சக்கரவண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர், தொண்டர்கள் சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், அடியவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

---

# மதுபானசாலை குற்றச்சாட்டை நிரூபிக்கவேண்டும்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மதுபானசாலை இருப்பதாக போலி குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வருவதாகவும் அது உண்மையென நிரூபிக்கப்படுமாகில் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதை நிறுத்திக் கொள்வேன் எனவும் முன்னாள் எம்.பி செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று (07) அவரது மன்னார் அலுவலகத்தில் நடாத்திய ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக ஜே.வி.பி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் ஊழல் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாக பல கேள்விகள் கேட்கப்பட்டு வருகின்றன.நான் தேசியத்தை தொடர்ச்சியாக நேசிக்கின்றவன். எங்கள் தமிழீழ இயக்கம் மக்களின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காக ஆயுதம் ஏந்தி போராடியவர்கள்.



முன்னாள் ஜனாதிபதி ரணில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மதுபானசாலை அமைப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கியதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ இயக்கத்தில் இருக்கின்ற எமது பாராளுமன்ற உறுப்பினர் எவரும் இந்த மதுபான சாலை பேர்மிட் எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கின்றேன்.

மக்களுக்கு அநீதி விளைவிக்கும் எந்த செயற்பாட்டிலும் எமது இயக்கம் செயற்படாது என்பதை தெரிவித்து கொள்கின்றேன். என்னை பொறுத்த மட்டில் அரசியல் வாழ்க்கையில் தேசியத்தோடு பயணிக்கின்ற செயற்பாடாகவே நான் இருந்து வருகின்றேன்.

மதுபான சாலை பேர்மிட் வழங்கும் வேளையில் நாங்கள் இதை பெறுவதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எந்த ஈனச் செயலிலும் நாங்கள் இறங்க மாட்டோம்.

எனக்கு வவுனியாவில் மதுபான சாலை இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். இது உண்மைக்கு மாறான விடயம்.

இது நிரூபிக்கப்படுமானால் நான் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகி விடுவேன்.

ஆயுதம் ஏந்தி போராடியவாகள் என்ற வகையில் நாங்கள் ஈனச் செயல்களை செய்யவில்லை செய்யவும் மாட்டோம் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

# 100,000 யூடியூப் சந்தாதாரர்களை எட்டிய முதல் இலங்கை வங்கி NDB

NDB வங்கி தனது யூடியூப் சேனலில் 100,000 சந்தாதாரர்களை எட்டிய முதல் இலங்கை வங்கியாக மாறியதன் மூலம் இலங்கையில் புதிய எண்ணிம மைல்கல்லை எட்டியுள்ளமையானது வங்கியின் புத்தாக்கத்திற்கான அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியுள்ளதுடன் வாடிக்கையாளர்களுடன் தொடர்பிலிருக்கும் அதனது முதலாவது எண்ணிம அணுகுமுறையானது இலங்கையின் வங்கித்துறையில் புதிய பாதையாகவும் அமைந்துள்ளது.

அதன் பார்வையாளர்களுடன் இணையும் வகையில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் முன்னணியில் உள்ள NDB வங்கியின் யூடியூப் சேனலானது, மதிப்புமிக்க நிதியியல் கல்வி, நுண்ணறிவு மற்றும் வங்கியின் பரந்த அளவிலான தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்கும் தகவல் மற்றும் ஈர்க்கும் உள்ளடக்கத்தின் மையமாக மாறியுள்ளது.



NDBயின் இந்த யூடியூப் சேனல் உள்ளடக்கத்திற்கு, இலங்கையில் 96% க்கும் அதிகமான சந்தாதாரர்கள் உள்ளனர், முக்கியமாக 25 – 34 வயதுக்குட்பட்டவர்கள் இதில் முன்னிலை வகிப்பதுடன் , அதைத் தொடர்ந்து 35 – 44 வயதுக்குட்பட்டவர்கள் நெருக்கமாக தொடர்பவர்களாகவும் இருக்கின்றனர். சக்தி வாய்ந்த வீடியோ உள்ளடக்கம் மூலம், NDBயானது தகவலறிந்த முடிவுகளை எடுக்க பார்வையாளர்களுக்கு உதவுவதன் மூலம் தொழில்சார் நிதியியல் அறிவுடன் அவர்களை வலுப்படுத்துகிறது.

தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com

# ஹெல்ப்ஏஜ் ஸ்ரீலங்காவிற்கு கைகொடுக்கும் AIA இன்சூரன்ஸ்

AIA இன்சூரன்ஸ் மிகவும் உதவிகள் தேவைப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஹெல்ப்ஏஜ் ஸ்ரீலங்காவுடன் கைகோர்க்கின்றது.

இந்த நன்கொடைத் திட்டமானது மிகவும் தேவையுடைய வறுமைப்பட்ட நோயாளிகளுக்கு பத்து (10) கண்புரை அறுவைச் சிகிச்சைகளுக்கு நிதியுதவியினை அளித்துள்ளதுடன் இதன் மூலமாக அவர்களுக்கு விலைமதிப்பற்ற கண்பார்வையினையும்; மீண்டும் பரிசாக வழங்குகின்றது.



கண்புரை அறுவைச் சிகிச்சை என்பது ஒருவரின் வாழ்க்கையினை மாற்றியமைக்கும் ஒரு சத்திர சிகிச்சையாகும்.

இது பார்வையினை மீட்டெடுப்பது மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துகின்றது.

மேலும் இது தனிநபர்கள் தங்களின் சுதந்திரத்தினை மீண்டும் பெறவும் அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குத் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்வதற்கும் உதவுகின்றது.

AIA இன்சூரன்ஸ் இந்த நன்கொடையினை வெசாக் காலத்தின் போது இடம்பெற்ற AIA பியவர பூஜை எனப்படும் இலங்கையின் முதலாவது மக்களின் உதவியுடன் வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் தோரணத்தின் (பந்தல்) நேர்மறையான தாக்கத்தினை விரிவுபடுத்துவதற்கான மிகவும் அர்த்தமுள்ள வழியாகவே ஏற்பாடு செய்திருந்தது. இப்புதுமையான முயற்சியானது இலங்கையர்கள் நடைப்பயிற்சி போன்ற ஆரோக்கியமான வாழ்க்கைப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதற்காக உறுதிமொழி எடுப்பதற்கு அவர்களை ஊக்குவிக்கும் அதேவேளை இவ்வாறான ஒரு பெரிய நோக்கத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

# South Asian Travel Awards விருது விழாவில் வெற்றியீட்டிய ஷங்கிரிலா

ஷங்கிரிலா ஹம்பாந்தோட்டை 8வது South Asian Travel Awards (SATA) 2024 நிகழ்வில் இரு மதிப்புமிக்க விருது அங்கீகாரங்களைச் சம்பாதித்து வெற்றியை நிலைநாட்டியுள்ளது. 2024 செப்டெம்பர் 20 வெள்ளிக்கிழமையன்று Aloft Kathmandu Thamel இல் இடம்பெற்ற விமரிசையான நிகழ்வில் 200 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன், தெற்காசியாவின் பிரயாண மற்றும் விருந்தோம்பல் துறையில் மிகச் சிறந்தவற்றை வெளிக்காண்பித்தவாறு, பல்வகைப்பட்ட பிரிவுகளில் விருது அங்கீகாரங்களுக்கு பெயரிடப்பட்ட 400 க்கும் மேற்பட்டவர்களுக்கு இந்நிகழ்வில் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

ஷங்கிரிலா ஹம்பாந்தோட்டை, இலங்கையிலுள்ள முன்னணி குடும்ப உல்லாச விடுதி (Leading Family Resort in Sri Lanka) மற்றும் இலங்கையிலுள்ள முன்னணி திருமண நிகழ்வு உல்லாச விடுதி (Leading Wedding Resort in Sri Lanka) ஆகிய விருதுகளைத் தனதாக்கியுள்ளது. விருந்தோம்பலில் மகத்துவத்தின் மீது இந்த உல்லாச விடுதி கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பிற்கு இந்த விருது அங்கீகாரங்கள் சான்று பகருகின்றன. அதன் திறமைமிக்க அணியின் கடின உழைப்பு மற்றும் மறக்க முடியாத குடும்ப விடுமுறைகள் மற்றும் கனவுகள் நனவாகும் திருமண நிகழ்வுகளுக்கான இடம் ஆகியவற்றுக்காக ஷங்கிரிலா ஹம்பாந்தோட்டை தொடர்ந்தும் நாடுகின்ற விருந்தினர்களின் விசுவாசம் ஆகியனவே இவ்விருது அங்கீகாரங்களுக்கான உந்துசக்தியாக அமையப்பெற்றன.



“தலைசிறந்த குடும்ப விடுமுறைகள் மற்றும் மறக்க முடியாத திருமண நிகழ்வுகளை வழங்குவதில் எமது ஓயாத அர்ப்பணிப்பிற்கான அங்கீகாரமாக கிடைக்கப்பெற்றுள்ள இந்த கௌரவம் ஷங்கிரிலா ஹம்பாந்தோட்டையைப் பொறுத்தவரையில் உண்மையில் பெருமைக்குரிய ஒரு தருணமாகும்,” என்று ஷங்கிரிலா ஹம்பாந்தோட்டையின் பொது முகாமையாளர் றிஃப்கான் ரஸீன் குறிப்பிட்டார். “தெற்காசிய பிரயாண விருதுகள் 2024 நிகழ்வில் இந்த மதிப்புமிக்க விருது அங்கீகாரங்களைச் சம்பாதித்துள்ளமை விருந்தினர்களுக்கு தலைசிறந்த அனுபவங்களைத் தோற்றுவிப்பதில் எமது அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காண்பிக்கின்றது.

# இரண்டாம் காலாண்டின் சிறப்பை கொண்டாடிய யூனியன் அஷ்யூரன்ஸ் Premier Club 2024

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இரண்டாம் காலாண்டுக்கான தனது Premier Club விருதுகள் வழங்கும் வைபவத்தை நீர்கொழும்பு, அவென்ரா கார்டன்ஸ் ஹோட்டலில் முன்னெடுத்தது.

சிறப்பாக செயலாற்றியிருந்த ஆலோசகர்களின் சாதனைகளை கௌரவித்து வெகுமதியளிக்கும் வகையில் இந்நிகழ்வு அமைந்திருந்ததுடன், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஆலோசகர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருந்தது.

இந்த காலாண்டில், யூனியன் அஷ்யூரன்ஸ் Premier Club இனுள் 125 புதிய அங்கத்தவர்களை யூனியன் அஷ்யூரன்ஸ் உள்வாங்கியிருந்தது. அதனூடாக, உயர்மட்ட சேவைகளை பேணும் நிபுணர் அணியினை கட்டியெழுப்புவதற்கான தமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்திருந்தது.



பணப் பரிசுகள், சொகுசு வாகனங்கள் மற்றும் விசேடத்துவமான பயிற்சித் திட்டங்கள் போன்ற வெகுமதிகளை பெற்றுக் கொடுக்கும் உயர்மட்ட கௌரவிப்பு கட்டமைப்பாக யூனியன் அஷ்யூரன்ஸ் Premier Club அமைந்துள்ளது. இவற்றினூடாக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரத்தை மேம்படுத்துவது இலக்காக அமைந்துள்ளது.

சிலாபம் பிராந்தியத்தைச் சேர்ந்த சானக அப்புஹாமி, ஜாஎல பிராந்தியத்தைச் சேர்ந்த மனோஜ் பண்டாரகொட, கிருலப்பனை பிராந்தியத்தைச் சேர்ந்த உபுல் பிரியந்த, சிற்றி சுப்பர் பிராந்தியத்தைச் சேர்ந்த ஜீவன் விஜேகோன் மற்றும் புறக்கோட்டை பிராந்தியத்தைச் சேர்ந்த அமில ஹர்ஷன ஆகியோர் காலாண்டின் பிளாட்டினம் வெற்றியாளர்களாக தெரிவாகியிருந்தனர்.

# இலங்கை சுற்றுலாத்துறையை முன்னேற்றும் TikTok

ஒரு சிறிய காணொளி இலங்கையின் சிறப்பையும் மதிப்பையும் உலகிற்கு திறந்து வைப்பதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் ஆர்வத்தை உயர்த்த முடியுமானால் அது மிகவும் முக்கியமானது. இதற்கு இன்று, TikTok சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதன் கீழ், இலங்கையிலுள்ள மனதைக் கவரும் இடங்கள் தொடர்பான சுவாரஸ்யமான கதைகளை ஆக்கப்பூர்வமாக முன்வைப்பதன் மூலம் இலங்கையின் சிறந்த கலாசாரம் மற்றும் அழகு பற்றிய தனித்துவமான செய்தியை வெளிப்படுத்தும் சக்திவாய்ந்த ஊடகமாக TikTok செயல்படுகிறது. சுற்றுலாத்துறைக்கான TikTok இன் தாக்கம்

ஈர்க்கக்கூடிய குறுஞ்செய்திகள் மூலம் உலகம் முழுவதும் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசை TikTok ஐ மேம்படுத்தும் பயண உத்வேகத்தின் தனித்துவமான ஆதாரமாகக் குறிப்பிடலாம். TikTok ஒரு இணையற்ற சந்தைப்படுத்தல் ஊடகமாக மாறியுள்ளது என்பது இரகசியமல்ல, குறிப்பாக TikTokஇல் செயலில் உள்ள வயதுக் குழுக்களான Gen Z மற்றும் Millennials போன்ற படைப்பாளர்கள் தங்கள் பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான தளமாக TikTok ஐப் பயன்படுத்துகின்றனர். TikTok ஆனது உலகெங்கிலும் உள்ள அழகான மற்றும் தனித்துவமான சுற்றுலா தளங்களைத் தேர்வுசெய்ய உதவுவது மட்டுமல்லாமல், அந்தப் பயணத்தின் போது நீங்கள் தங்க வேண்டிய ஹோட்டல் வசதிகள் மற்றும் பிற சேவைகளைக் கண்டறியவும் உதவும்.

# உலகளாவிய விருது விழாவில் கௌரவிக்கப்பட்ட ஹோட்டல் எம்போரியம் பிரதம நிறைவேற்று அதிகாரி

தமது இணை நிறுவுனரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அண்டி டி சில்வாவிற்கு, முதலாவது உலக நிலைபேறான பயணம் மற்றும் விருந்தோம்பல் விருது வழங்கும் விழாவில் (World Sustainable Travel & Hospitality Awards WSTHA) ‘World’s Leading Sustainability Leader of Tomorrow 2024’ எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில், உயர்ரக ஹோட்டல் வசதிகளை வழங்குவதில் முன்னணியில் திகழும் Hotel Emporium (ஹோட்டல் எம்போரியம்) பெருமிதம் கொள்கிறது. உலகளாவிய விருந்தோம்பல் துறையில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் அண்டியின் அர்ப்பணிப்பை இவ்விருது எடுத்துக்காட்டுவதோடு, நிலைபேறான பயணத்தில் இலங்கையர் ஒருவர் இத்தகைய அங்கீகாரத்தைப் பெறுவது இதுவே முதல் தடவையாகும். COP28 இல் ஆரம்பிக்கப்பட்ட உலக நிலைபேறான பயணம் மற்றும் விருந்தோம்பல் விருதுகள், பாரம்பரிய சுற்றுலா சேவைகளுக்கு அப்பால் நிலைபேறான தன்மை மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் நிறுவனங்களை கௌரவிக்கின்றன. சூழல் நட்பு நடைமுறைகளைச் செயற்படுத்துதல், கலாசாரப் பாதுகாப்பை ஊக்குவித்தல் மற்றும் பொறுப்பான பயண அனுபவங்களை ஊக்குவித்தல் உள்ளிட்ட அதன் முக்கிய முயற்சிகள் உள்ளிட்ட, நிலைபேறான பயணம் மற்றும் சுற்றுலாவில் மாற்றத்தையும் சாதகமான தாக்கத்தையும் விரைவுபடுத்துவதில் நிறுவனம் வகிக்கும் பங்கை இந்த விருது எடுத்துக் காட்டுகின்றது.



Hotel Emporium ஆனது, அண்டி டி சில்வாவின் தலைமைத்துவத்தின் கீழ் ஒரு சிறியளவிலான தொடக்கத்திலிருந்து இன்று உலகளாவிய தொழில்துறையின் தலைவராக வளர்ந்துள்ளது. 2003 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்நிறுவனம் தற்போது உலகம் முழுவதும் 20,000 ஹோட்டல்களில் சேவை செய்வதோடு, 40 நாடுகளில் அது இயங்கி வருகிறது.

# 20 வருட துறைசார் தலைமைத்துவத்தை பதித்திருக்கும் SDD பொலிமர் நிறுவனம்

இலங்கையின் முன்னணி பிளாஸ்ரிக் மூலப் பொருள் விநியோகத்தர் மற்றும் வழங்குநரான SDD பொலிமர் (தனியார்) நிறுவனமானது கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் மிகப்பிரம்மாண்ட நிகழ்வொன்றுடன்சமீபத்தில்தனது20வது வருட பூர்த்தியை கொண்டாடியது.

ஸ்தாபகர்களான திரு. திருமதி. ஜெயசீலனால் ஏற்பாடு செய்யப்பட்ட கொண்டாட்டமானது, இலங்கையின் பொதியிடல் மற்றும் பொலிமர் துறையின் முன்னிலை கம்பெனியாக நிறுத்துவதற்கு உந்திய இரு தசாப்தகால புத்தாக்கம், வளர்ச்சி மற்றும் வலுவான பங்காண்மை என்பவற்றை பதிவு செய்வதற்கு விசேட விருந்தினர், உயர்மட்டத்தினர், தொழில்துறை வித்தகர்கள், நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் பணியாட் தொகுதியினரை ஒருங்கே கொணர்ந்திருந்தது.

2004 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட, SDD பொலிமர் ஆனது பொலிமர் துறையில் சிறியதொரு தொழில்முயற்சியிலிருந்து முன்னணி பங்காளராக வளர்ந்துள்ளது. பெட்ரோகெமிக்கல் உற்பத்திகளில் விசேடத்துவம் வாய்ந்த கம்பெனியானது பிளாஸ்ரிக் கைத்தொழில் துறையின் பல்வேறு துறைகளிற்கும் வசதியளிக்கும் Polypropylene (PP), Highdensity Polyethylene (HDPE), Lowdensity Polyethylene (LDPE), Linear Lowdensity Polyethylene (LLDPE), Polystyrene (PS), Masterbatches, Additives, Fillers, and Compounds என்பன அடங்கலாக பரந்தளவிலான பிளாஸ்ரிக் மூலப் பொருட்களை வழங்குகின்றது.

இந்நிகழ்வானது SDD பொலிமரின் சாதனைகளைக் கொண்டாடியதுடனல்லாமல் கம்பெனியின் பயணத்தில் உந்துதலாக விளங்கிய வழங்குநர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் நன்றியையும் தெரிவித்திருந்தது.

இலங்கையின் பொதியிடல் துறையின் தனிச்சிறப்பானவரும் Premium Packaging Solutions Pvt Ltd. இன் Chairman / Managing Director ரொஹான் விஜேசிங்க, மற்றும் Polypack Secco Ltd. இன் Commercial Manager திரு. அலெக்ஸ் சமரரத்ன முதலிய துறைசார் வித்தகர்கள் SDD பொலிமரின் அபரிதமான வளர்ச்சி மற்றும் கைத்தொழில் துறையில் அதன் பங்களிப்பு என்பவற்றை பிரதிபலிக்குமாறு தங்களது கருத்துக்களைப் பகிர்ந்துக்கொண்டனர்.

# பல்கலை மாணவர் மத்தியில் முதலிட தெரிவாக அமையும் யூனிலீவர்

இலங்கையில் இளங்கலைப் பட்டதாரிகள் மத்தியில் மிகவும் விருப்பத்திற்குரிய தொழில் வழங்குனராக யூனிலீவர் ஸ்ரீ லங்கா தனது நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. ஒரு சுயாதீன ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட இந்த கருத்துக்கணிப்பில், யூனிலீவர் நிறுவனத்தை நம்பர் 1 தொழில் வழங்குனராக மாணவர்கள் அங்கீகரித்துள்ளனர். இளம் திறமையாளர்களை வளர்ப்பதனையும், தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும் இது சுட்டிக் காட்டுகிறது. இலங்கையில் உள்ள தேசிய மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறைகளை உள்ளடக்கிய இளங்கலை மாணவர்களிடையே தொழில் வழங்குனர் தெரிவு தொடர்பான ஆய்வு வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் இருந்து 360 இளங்கலை பட்டதாரிகளிடம் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பான நிறுவனத்தின் முதலீடு, இளைஞர்கள் மத்தியில் வர்த்தகநாமம் பெற்றுள்ள இடம், தொழிலுக்கான வாய்ப்புகள் மற்றும் தொழில் வழங்கல் போன்ற காரணிகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள நிறுவனங்கள் பற்றி ஆய்வில் கலந்து கொள்வோரின் கருத்துகள் இதன் போது மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கமைய, இதில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இளங்கலை மாணவர்களின் இதயங்களையும் மனதையும் யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனம் கவர்ந்ததோடு, தெளிவான முன்னணி இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.



## Dialog Television இல்

# புதுப்பொலிவுடன் பிக்பாஸ் பருவம் 8

மக்களை மகிழ்விக்க உலகத்தரமான பொழுதுபோக்கு அனுபவத்தை அளித்திடும் இலங்கையின் #1 தொலைக்காட்சி அனுபவமான Dialog Television இல் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடையே ஏகோபித்த வரவேற்பை பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியான பிக்பாஸ் தமிழ் தனது 8வது பருவத்தில் “ஆளும் புதுசு.. ஆட்டமும் புதுசு..” என புதுப்பொலிவுடன் கால்தடம் பதிக்கின்றது. எதிர்வரும் ஒக்டோபர் 6ஆம் திகதி பி. ப. 6:00 மணி முதல் ஸ்டார் விஜய் அலைவரிசையில் (அலைவரிசை எண் 96) ஒளிபரப்பாகவுள்ளது. 15 போட்டியாளர்கள் 100 நாட்கள் ஒரு சொகுசு வீட்டில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு மத்தியில் போட்டிகள் வைக்கப்பட்டு 100 நாட்கள் கடந்து மக்கள் மனதை வெல்பவர் இறுதியில் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். நகைச்சுவை, போட்டி, காதல், கோபம், வஞ்சம், சோகம் என வீட்டில் நடக்கும் சம்பவங்களை தொகுத்து வார நாட்களில் பி. ப. 9:30 மணிக்கு ஒளிபரப்பாகும். வார இறுதியில் பி. ப. 9:30 மணிக்கு நிகழ்ச்சி தொகுப்பாளர் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடுவார். வாரத்தில் 7 நாட்களும் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாது செல்லும் இந்நிகழ்ச்சி மக்கள் மத்தியில் உளவியல் குறித்த கலந்துரையாடல்களை அதிகம் ஊக்குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்னிந்திய பிரபலங்கள் மட்டுமின்றி இலங்கை மற்றும் மலேசியாவைச் சேர்ந்தவர்களும் இதில் பங்குபற்றி பிரபலமாகியுள்ளனர்.

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் பானுக்கவுக்கு இலங்கை அணியில் வாய்ப்பு

## தசுன் ஷானக்கவின் இடத்திற்கு இளம் வீரர் சமிந்து

எதிர்வரும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடருக்கு இலங்கை அணியில் இளம் வேகப்பந்து சகல துறை வீரர் சமிந்து விக்ரமசிங்க மற்றும் அதிரடித் துடுப்பாட்ட வீரர் பானுக்க ராஜபக்ஷவை அழைப்பதற்கு இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழு திட்டமிட்டுள்ளது.

இந்த வாரம் இலங்கை வரும் மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கைக்கு எதிராக மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது.

இதற்கான இலங்கை அணி இன்னும் அறிவிக்கப்படாத நிலையில் டி20 தொடருக்கான 18 பேர் கொண்ட இலங்கை குழாத்தை தேர்வு செய்ய தேர்வுக் குழுவினர் திட்டமிட்டிருப்பதாக தெரியவருகிறது.

இதில் முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க தமது இடத்தை இழக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஷானக்க கடைசியாக ஆடிய தனது மூன்று இன்னிங்ஸ்களிலும் டக் அவுட் ஆனதோடு அது தொடக்கம் அவர் அணியில் தனது இடத்தைத் தக்கவைக்கும் வகையில் உள்ளூர் போட்டிகளிலும் சோபிக்கத் தவறியுள்ளார்.

இந்நிலையில் ஷானக்கவின் இடத்தில் 22 வயது சமிந்து விக்ரமசிங்கவை அணியில் ஆடச் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சமிந்து கடைசியாக கடந்த ஜூலையில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டி20 தொடரின் கடைசிப் போட்டியில் ஆடி இருந்தார். அந்தப் போட்டியில் அவர் 4 ஓவர்களுக்கும் 17 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தி இருந்தார்.





லங்கா பிரீமியர் லீக் தொடரில் சோபித்த நிலையிலேயே சமிந்துவுக்கு இலங்கை அணியில் வாய்ப்புக் கிட்டியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டி20 தொடரில் ஒன்றரை ஆண்டு இடைவேளைக்குப் பின்னர் பானுக்க ராஜபக்ஷ அழைக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கைக் குழாத்தில் தசுன் ஷானக்க நீக்கப்படும் இடத்திற்கே பானுக்க இடம்பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பானுக்க ராஜபக்ஷ கடைசியாக 2023 ஜனவரியில் இந்தியாவுக்கு எதிரான டி20 போட்டியில் ஆடி இருந்தார். அது தொடக்கம் இலங்கை அணியில் வாய்ப்பு கிடைக்காத அவர் அண்மைக் காலத்தில் டி20 லீக் போட்டிகளில் சோபித்து வருகிறார்.

இதேவேளை இரு வீரர்களின் உடல் தகுதி தொடர்பில் சந்தேகம் நிலவுவதன் காரணமாகவே 18 பேர் கொண்ட குழாத்தைத் தேர்வு செய்ய தேர்வுக் குழுவினர் எதிர்பார்த்துள்ளனர்.

இதில் வேகப்பந்து வீச்சாளர்களான மதீஷ பதிரண மற்றும் நுவன் துஷார ஆகியோர் தமது உடல் தகுதியை நிரூபிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

எனினும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்ற தேசிய சுப்பர் லீக் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் மதீஷ பதிரண மற்றும் நுவன் துஷார இருவரும் ஆடி தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தனர்.

இந்நிலையில் இருவரும் எதிர்வரும் ஒக்டோபர் 10 ஆம் திகதி தம்புள்ளையில் நடைபெறும் பயிற்சிப் போட்டியிலும் பங்கேற்று தமது உடல் தகுதியை நிரூபிக்கவுள்ளனர்.

பத்திரண தோள்பட்டை காயத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததோடு துஷார இந்தியத் தொடரின்போது கட்டை விரல் காயத்திற்கு உள்ளாகி இருந்தார்.

இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடர் எதிர்வரும் ஒக்டோபர் 13 ஆம் திகதி தம்புள்ளையில் ஆரம்பமாகவுள்ளது. இதன் இரண்டு மற்றும் மூன்றாவது போட்டிகள் ஒக்டோபர் 15 மற்றும் 17 ஆம் திகதிகளில் அதே தம்புள்ளையில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து இரு அணிகளும் மோதும் மூன்று ஒருநாள் போட்டிகளும் ஒக்டோபர் 20, 23 மற்றும் 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. அனைத்துப் போட்டிகளும் பல்லேகலவில் நடைபெறவுள்ளன.

## ஜயசூரிய பயிற்சியாளராக உத்தியோகபூர்வ நியமனம்



இலங்கை கிரிக்கெட் நிறைவேற்றுக் குழுவினால் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக சனத் ஜயசூரிய உத்தியோகபூவர்மாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இடைக்கால பயிற்சியாளராக செயற்பட்டு வந்த சனத் ஜயசூரியவின் வழி நடத்தலில் இலங்கை அணி சிறப்பாக செயற்பட்ட நிலையிலேயே அவர் நிரந்தர பயிற்சியாளராக நியமிக்க தீர்மானிக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன்படி ஜயசூரியவின் பதவிக் காலம் கடந்த ஒக்டோபர் 1ஆம் திகதி அமுலுக்கு வந்திருப்பதோடு அது 2026 மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கவுள்ளது.

## அரை மரதனில் கமகே வெற்றி




நெஸ்ட்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியின் மரதன் போட்டி தம்புள்ளையில் கடந்த சனிக்கிழமை (05) வெற்றிகரமாக நிறைவடைந்தது.

இதில் பெண்களுக்கான 21 கிலோமீற்றர் தூரம் கொண்ட அரை மரதன் போட்டியில் அலபத்த மகாவித்தியாலயத்தின் ஜி.என்.என். கமகே முதலிடத்தை வென்றதோடு வலிமடை, யஹல அரவ மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த தனன் ஜனி இரண்டாம் இடத்தையும் யாப்பஹுவ சுபசென் மத்திய மகா வித்தியாலயத்தின் திசாரத்ன மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.




## மருத்துவத்திற்காக இருவருக்கு நோபல்



நடப்பு ஆண்டின் மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்காவின் விக்டர் அம்ப்ரோஸ் மற்றும் கெரி ருவ்குன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு நோபல் பரிசை வெல்வோரின் விபரத்தை நோபல் குழு வெளியிட ஆரம்பித்துள்ளது. இதன்படி நேற்று மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இதில் மரபணு செயல்பாடு எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை ஒழுங்குபடுத்தும் அடிப்படைக் கோட்பாடு ஒன்றான மைக்ரோ ஆர்என்ஏவை கண்டுபிடித்ததற்காக மேற்படி இருவருக்கும் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பௌதீகவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்படவுள்ளது.

## பாக். குண்டு தாக்குதல்: இரு சீன நாட்டவர் பலி



பாகிஸ்தான் கராச்சி நகரில் உள்ள ஜின்னா சர்வதேச விமானநிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இரு சீன நாட்டவர்கள் கொல்லப்பட்டு மேலும் பத்துப் பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானில் உள்ள சீனத் தூதரகம் இந்தத் தாக்குதலில் உள்ளூர் நட்டவர்களும் கொல்லப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருப்பதோடு இதனை ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என்று தெரிவித்துள்ளது. நாட்டின் சிந்த் மாகாணத்தில் மின்சாரத் திட்டம் ஒன்றில் பணியாற்றும் சீன பொறியியலாளர்கள் பயணித்த வாகனங்களை இலக்கு வைத்தே இந்த குண்டு தாக்குதல் இடம்பெற்றிருப்பதாகவும் அந்தத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதில் அண்மைய ஆண்டுகளாக நாட்டில் மேம்பாட்டுத் திட்டங்களில் பணியாற்றி வரும் சீன நாட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தி வரும் பிரிவினைவாத பலுகிஸ்தான் விடுதலைப் படை இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது.

## கனிய வளப் பாதுகாப்பு நிதியத்திற்குத் திட்டம்



அமெரிக்கா, தமது நேச நாடுகளுடன் இணைந்து கனிய வளப் பாதுகாப்பு நிதி வலையமைப்பொன்றை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளது. இந்தோ பசிபிக் பிராந்திய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிறுவனங்களுக்கு மத்தியில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், தகவல் பரிமாற்றம் மற்றும் இணை நிதியுதவியை மேம்படுத்தவும் இக்கூட்டு நிதி வலையமைப்பு பயன்படுத்தப்படும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கனிய வளப் பாதுகாப்பு கூட்டாண்மையின் சமீபத்திய முன்முயற்சியாக இவ்வலையமைப்பு உள்ளது.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு மத்தியில் ஹமாஸ், ஹிஸ்புல்லா ரொக்கெட் வீச்சு

காசா போர் வெடித்து நேற்றுடன் ஓர் ஆண்டு நிறைவடைந்த நிலையில் இஸ்ரேல், காசா மற்றும் லெபனான் தலைநகர் பெய்ரூட் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தியதோடு பதிலுக்கு லெபனானின் ஹிஸ்புல்லா மற்றும் காசாவில் ஹமாஸ் அமைப்புகள் நேற்று இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்தின.

கடந்த 2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதல்களில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டு 250 இஸ்ரேலியர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து காசாவில் போர் வெடித்ததோடு



## காசா போரின் ஓர் ஆண்டு நிறைவில் இஸ்ரேலில் பலருக்கும் காயம்

அது தற்போது பிராந்தியம் எங்கும் போர் சூழலை உருவாக்கியுள்ளது. இந்நிலையில் ஒக்டோபர் 7 இல் கொல்லப்பட்டவர்கள் மற்றும் பணயக்கைதிகளை நினைவுகூரும் நிகழ்வுகள் இஸ்ரேலில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டதோடு அதனையொட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தொடர்ந்து 100க்கும் அதிகமான பணயக்கைதிகள் காசாவில் பிடிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களை விடுவிப்பதற்கான போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்ள பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை வலியுறுத்தி இஸ்ரேலில் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. இஸ்ரேலுக்கு வெளியில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை வலியுறுத்தி உலகின் பல நகரங்களிலும் பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

எவ்வாறாயினும் காசாவில் இஸ்ரேல் நேற்றும் தாக்குதல்களை நடத்திய நிலையில் மத்திய காசாவின் நுஸைரத் மற்றும் புரைஜ் அகதி முகாம்கள் மீது நடத்திய வான் தாக்குதல்களில் மூவர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிட்டுள்ளன. இதன்போது இஸ்ரேலிய போர் விமானங்கள் பல வீடுகளின் மீது குண்டுகளை வீசிய நிலையில் பலரும் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஓர் ஆண்டாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசா முற்றாக இடிபாடாக மாறி இருப்பதோடு அங்குள்ள 2.3 மில்லிகள் மக்களில் கிட்டத்தட்ட அனைவரும்போல் தமது வீடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். போர் வெடித்தது தொடக்கம் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிகை 42,000ஐ நெருங்கியுள்ளது. இந்நிலையில் கடந்த ஓர் ஆண்டில் காசாவில் 40,000க்கு அதிகமான இலக்குகளை தாக்கியதாகவும் 4,700 சுரங்கப்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் 1,000 ரொக்கெட் தாக்குதல் தளங்கள் அழிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. மறுபுறம் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசாவில் இஸ்ரேலியப் படை 3,654 படுகொலைச் சம்பவங்களைச் செய்திருப்பதாக காசா அரச ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது. இதில் 25,973 குழந்தைகள் தற்போது தமது பெற்றோர்களில் ஒருவர் அல்லது இருவரையும் இழந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிர, இந்தப் போர் காரணமாக 34 மருத்துவமனைகள் மற்றும் 80 சுகாதார மையங்கள் செயலிழந்திருப்பதாகவும், 162 சுகாதார வசதிகள் மற்றும் 131 அம்புலன்ஸ்கள் இஸ்ரேலின் தாக்குதலுக்கு இலக்காகி இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக 902 குடும்பங்கள் முழுமையாக அழிக்கப்பட்டிருப்பதோடு 1,364 குடும்பங்களில் ஒரு உறுப்பினர் மாத்திரமே எஞ்சி இருப்பதாகவும் 3,472 குடும்பங்களில் இருவர் மாத்திரமே எஞ்சி இருப்பதாகவும் காசா அரச ஊடக அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. காசாவில் தொடர்ந்து போர் நீடித்தபோதும் இஸ்ரேல் அண்மைய வாரங்களில் தனது வடக்கு எல்லையில் லெபனானில் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது. தெற்கு லெபனானின் தரைவழி படை நடவடிக்கையை மேற்கொண்டிருக்கும் இஸ்ரேலியப் படை தலைநகர் பெய்ரூட்டில் தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகிறது.

பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லாவின் புலனாய்வுத் தலைமையகங்களை இலக்கு வைத்து வான் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இதில் ஒன்றுகூடல் நிலைகள், கட்டளை மையங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் இலக்கு வைக்கப்பட்டதாக அது குறிப்பிட்டுள்ளது. மறுபுறம் தெற்கு லெபனானின் டைரே நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டதாக லெபனான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லெபனானில் இஸ்ரேல் தாக்கதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் 2,000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இதேவேளை காசா போரின் ஓர் ஆண்டு நிறைவு நாளான நேற்று தெற்கு காசாவில் இருந்து இஸ்ரேலை நோக்கு நான்கு ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டன. இதில் மூன்று ரொக்கெட் குண்டுகள் இஸ்ரேலிய விமானப்படையால் இடைமறிக்கப்பட்டிருப்பதோடு நான்காவது குண்டு திறந்த வெளியில் விழுந்துள்ளது.

இந்நிலையில் மகத்மா எம்90 ரொக்கெட்டுகளைக் கொண்டு இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை தாக்கியதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவான அல் கஸ்ஸாம் படை நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய போர் நடவடிக்கையின் அங்கமாகவும் பொதுமக்கள் மீதான பாடுகொலைகள் மற்றும் எமது மக்களை இடம்பெயரச் செய்ததற்கு எதிராகவும் இந்தத் தாக்குதலை நடத்தியதாக அது கூறியது.

இதனையொட்டி இஸ்ரேலின் வான் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த ரெக்கெட் குண்டுகளின் கூரிய பாகங்கள் தாக்கி தனது 30 வயதுகளில் இருக்கும் இரு பெண்கள் காயமடைந்ததாக இஸ்ரேலிய அம்புலன்ஸ் சேவை தெரிவித்துள்ளது. இஸ்ரேலின் மூன்றாவது மிகப் பெரிய நகரான ஹைபா மீது ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது.

இந்தத் தாக்குதல்களில் 10 பேர் காயமடைந்திருப்பதாக இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 'பாடி 1' ஏவுகணைகள் கொண்டு தாக்குதல் நடத்தியதாக ஹிஸ்புல்லா கூறியது. இஸ்ரேலின் மத்தியதரைக் கடல் துறைமுக நகரான ஹைபாவை இரு ரொக்கெட் குண்டுகள் தாக்கியதாக இஸ்ரேல் ஊடகம் கூறியது. இதனால் சில கட்டடங்கள் மற்றும் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதோடு காயமடைந்த சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இஸ்ரேலில் சூடு பொலிஸார் பலி



தெற்கு இஸ்ரேலிய நகரான பீர்ஷேபவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் பத்துப் பேர் காயமடைந்துள்ளனர். பரபரப்பான நகர பஸ் நிலையத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் துப்பாக்கிதாரி சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதோடு இதனை ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என்று இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் துப்பாக்கிதாரி தொடர்பில் எந்த விபரமும் வெளியிடப்படவில்லை.

இதில் இஸ்ரேலிய எல்லைக் காவல் பொலிஸைச் சேர்ந்த 19 வயதான ஷிரா சாயா சுஸ்லிக் என்ற பெண்ணே கொல்லப்பட்டுள்ளார். கடந்த வாரம் டெல் அவிவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் கத்திக்குத்து தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பு பொறுப்பேற்றிருந்தது.

## இஸ்ரேலுக்கு அமெரிக்கா 17.9 பில். டொலர் உதவி



கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் ஆரம்பித்தது தொடக்கம் இஸ்ரேலுக்கு அமெரிக்கா குறைந்தது 17.9 பில்லியன் டொலர் ஆயுத உதவிகளை வழங்கி இருப்பதாக பிரவுன் பல்கலைக்கழகத்தின் போர் செலவுகள் திட்டம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செலவுகளில் இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்பான அயர்ன் டோம் அமைப்பை மீள் நிரப்பல் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள், அதேபோன்று துப்பாக்கிகள் மற்றும் போர் விமான எரிபொருளுக்கான ரொக்கப்பணத்திற்கான 4 பில்லியன் டொலர் செலவும் அடங்குகிறது என்று காசா போரின் ஓர் ஆண்டு நிறைவை ஒட்டி வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் காலக்கட்டத்தில் மத்திய கிழக்கில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கு கூடுதலாக 4.86 பில்லியன் டொலர் நிதி அளிக்கப்பட்டது என்றும் அறிக்கை கூறுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல கிளைகளிலும் 2023 ஒகஸ்ட் 07 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2024 செப்டெம்பர் 06 ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் பின்வருமாறு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| உத்தேச திகதியும் நேரமும் | இடம் |
|---|---|
| 2024 ஒக்டோபர் 12<br>மு.ப. 10.00 | **வெள்ளவத்தை கிளைக் கட்டிடம்**<br>இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை.<br>**நீர்கொழும்பு கிளைக் கட்டிடம்**<br>இல. 454, பிரதான வீதி, நீர்கொழும்பு. |

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏதேனுமொன்றில் ஏல விற்பனையை நடத்தவும் ஏல விற்பனைகளை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

உதவி துணைத் தலைவர் - நுகர்வோர் சேவைகள்
DFCC வங்கி பி.எல்.சி.,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03.

0112 350000 www.dfcc.lk
ஃபிச் ரேட்டிங் A-(lka)
இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கி
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# தங்கக் கடன் பகிரங்க விற்பனை/ஏலம்

ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தங்கக் கடன் மையங்களில் 31.07.2024 வரையிலான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள், இது வரை மீட்டெடுக்கப்படவில்லை, 07.11.2024 அன்று விற்கப்படும்.

**தங்க கடன் நிலையங்கள்**

Arij City, சிலாபம், சிலாபம் Metro, கம்பஹா, ஹட்டன், ஹோமாகம, கல்முனை, கண்டி, களனி, குளியாப்பிட்டிய, குருநாகல், மாத்தறை, நீர்கொழும்பு, நுவரெலியா, பாணந்துறை, வென்னப்புவ

**திகதி, நேரம் மற்றும் விற்பனை நடைபெறும் இடம்**

திகதியும் நேரமும்: **07.11.2024 மு.ப 10.00 மணிக்கு**
இடம் : **ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்**
**இல. 69, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02**

பங்கேற்கும் அனைவரும் தேசிய அடையாள அட்டை மற்றும் உத்தரவாத வைப்புத் தொகையை கொண்டு வர வேண்டும். ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்ய அல்லது ஒத்திவைக்கும் உரிமையை கொண்டுள்ளது.

RPFL Richard Pieris Finance
**ரிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்**
தொலைபேசி: **0714 368 997 / 0711 692 272**

skills

# கேள்வி அறிவித்தல்

## கெஸ்பேவ நகரசபை

கெஸ்பேவ நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வாகன நிறுத்துமிடம், ஆடு, கோழியிறைச்சிக்கடை, மாட்டிறைச்சிக் கடை, பன்றியிறைச்சிக் கடை, பொது மலசல கூடங்களை 2025.01.01 முதல் 2025.12.31 வரையான காலஎல்லைக்கு குத்தகைக்கு விடுவதற்காக இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| | குத்தகைக்கு விடும் விபரம் | வருடாந்த குறைந்த பட்ச கேள்வி | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | மணிக்கூட்டுக் கோபுரம் அருகில் 5460 சதுர அடி கொண்ட வாகன நிறுத்துமிடம் (வாடகை வேன் நிறுத்துமிடம் தவிர்த்து) மற்றும் இரண்டாம் குறுக்கு வீதியில் நகரசபை எல்லை | ரூ. 2,406,075/- | ரூ. 48,000/- | ரூ. 1000/- |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | ரூ. 1,417,500/- | ரூ. 28,000/- | ரூ. 1000/- |
| 03 | ஆடு, கோழியிறைச்சிக் கடை | ரூ. 546,700/- | ரூ. 11,000/- | ரூ. 1000/- |
| 04 | பன்றியிறைச்சிக்கடை | ரூ. 700,425/- | ரூ. 14,000/- | ரூ. 1000/- |
| 05 | பிலியந்தலை நகர மத்தியில் அமைந்துள்ள பொது மலசல கூடத்தை நடத்திச் செல்லல் | ரூ. 282,700/- | ரூ. 5,000/- | ரூ. 1000/- |
| 06 | "சொபாசரு ஹரித்த" உற்பத்தி விற்பனை சாலை | ரூ. 237,600/- | ரூ. 5,000/- | ரூ. 1000/- |

| | |
|---|---|
| கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் | 2024.10.08 மு.ப. 9.00 முதல் 2024.10.29 பி.ப. 2.30 வரை நகர சபை அலுவலகத்தில் |
| கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் | 2024.10.08 மு.ப. 9.30 முதல் 2024.10.29 பி.ப. 3.00 வரை |
| கேள்விகள் திறத்தல் | 2024.10.29 கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் |

**கேள்வி நிபந்தனைகள்:**

- குறித்த நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
- கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகைக்கு விடும் விபரத்தை தெளிவாக அட்டவணையில் உள்ளவாறு குறிப்பிடுதல் வேண்டும்.
- கேள்விப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறாகத் தயாரிக்கப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறைகளை மீண்டும் ஒரே உறையில் இட்டு பொறியிட்டு செயலாளர், கெஸ்பேவ நகர சபை, பிலியந்தலை என்ற பெயருக்கு பதிவுத் தபாலில் அல்லது தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும்.
- கேள்விப் படிவத்துடன் வழங்கப்படும் நிபந்தனை கோவையை ஏற்றுக்கொண்டதாக கையொப்பமிட்டு கேள்வியின் மூலப்பிரதியுடன் இணைத்து இருத்தல் வேண்டும்.
- கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதி நிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
- சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை கெஸ்பேவ நகர சபைக்கு உரியது.
- அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வரி மற்றும் வரி விகிதாசாரத்தை மாற்றுவதற்கு கேள்விதாரர் இணங்குதல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 011 2618197 கணக்காளரின் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்து அல்லது நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

**கெஸ்பேவ நகர சபை அலுவலகத்தில்**
2024.10.03

**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**கெஸ்பேவ நகர சபை.**

# சிறு விளம்பரம்








122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

QN - 8628 Bajaj - 2 007 Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 3 10, காலி வீதி, கொழும்பு - 03தொ.பே. - 0711 - 210 8 1 0/ 071 - 4542958 068094

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமை அலுவலகம், கம்பஹா

## மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்றல்.

கம்பஹா பிராந்தியத்தில் மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.08.31ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 2024.11.08ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத, தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடத்தப்படும் திகதி 2024.11.09 மற்றும் 2024.11.10**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | தெல்கொட - 118 | நீர்கொழும்பு - 034 | ஜா - எல - 239 | கம்பஹா - 026 | கிரிபத்கொட - 237 |
|---|---|---|---|---|---|
| கிளை | தெல்கொட<br>பூகொட<br>யக்கல<br>மல்வான<br>கிரிந்திவெல | நீர்கொழும்பு<br>மரந்தகஹமுல<br>கொச்சிக்கடை<br>சீதுவ<br>கட்டுநாயக்க | ஜா-எல<br>வத்தளை<br>கந்தான<br>பமுணுகம<br>றாகம | கம்பஹா<br>மீரிகம<br>வேயன்கொட<br>நிட்டம்புவ<br>மினுவன்கொட | கிரிபத்கொட<br>கடவத்த<br>மஹர<br>களனி<br>கனேமுல்ல |
| சேவை நிலையம் | வெலிவேரிய<br>தொம்பே<br>முதுன்கொட<br>ஊராபொல | கட்டான<br>பிட்டிபன<br>நீர்கொழும்பு பிரதான வீதி<br>திவுலப்பிட்டிய<br>தெமங்ஹந்திய<br>ரத்தொழுகம<br>எவரிவத்த | ஏக்கல<br>வெலிகம்பிட்டிய<br>தெஹியகாத<br>எலகந்த<br>வெலிசர<br>மகபாகே<br>பட்டுவத்த | ஜா-எல வீதி<br>உடுகம்பொல<br>கொடதெனியாய<br>பல்லேவெல<br>நைவல<br>வத்துபிட்டிவல<br>திஹாரிய<br>பஸ்யால<br>ஆண்டிஅம்பலம | மாவரமண்டி<br>கிரில்லவல<br>கடவத்த நகரம்<br>என்டேரமுல்ல<br>பேலியகொட<br>சிங்ஹாரமுல்ல<br>வெலிபில்லேவ |

மேற் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீண்டும் அறிவித்தல் வழங்காமல் வங்கியின் தற்றுணிபின்படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இலக்கம் 131, கண்டி வீதி, முதுன்கொட, பெலும்மஹர

தொலைபேசி இலக்கம் : 033-2223880

PEOPLE'S BANK
Pride of the Nation

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

# மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Syringe Pumps | 300 | 75 | 12,500.00 |
| 02 | Anesthetic Machines | 22 | 176 | 20,000.00 |
| 03 | CRRT Machine | 01 | 3 | 1,000.00 |
| 04 | Dialysis Chairs | 05 | 4.6 | 1,000.00 |
| 05 | Dialysis Beds | 17 | 10.2 | 3,500.00 |
| 06 | Leak Tester | 08 | 8.9 | 3,000.00 |
| 07 | Repair & Maintenance Instrument Set | 20 | 5 | 1,000.00 |
| 08 | SPO2 Sensors for Pulse Oximeters | 12 | 12 | 3,500.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-10-08ஆம் திகதி முதல் 2024-11-03ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக் குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்'' என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-11-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2025-01-28ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2025-02-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - களுத்துறை

## சமைத்த உணவு வழங்குதல் - 2025

2025ஆம் வருடத்தில் மேல் மாகாண சபையின் களுத்துறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள பின்வரும் வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவை வழங்குவதற்காக மேல் மாகாணத்தில் வசிக்கும் நபர்களிடம் மற்றும் பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் மீளளிக்கப்படாத விலைக்கோரல் பிணை முறி தொகை மற்றும் சொத்துச் சான்றிதழின் பெறுமதி பின்வருமாறாகும்.

| வைத்தியசாலையின் பெயர் | மீளளிக்கப்படும் விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணம் (ரூபா) | சொத்துச் சான்றிதழின் பெறுமதி |
|---|---|---|---|
| மத்துகம மாவட்ட வைத்தியசாலை | 89,000.00 | 2,500.00 | 890,000.00 |
| இத்தபான மாவட்ட வைத்தியசாலை | 71,000.00 | 2,000.00 | 710,000.00 |
| பண்டாரகம மாவட்ட வைத்தியசாலை | 64,000.00 | 2,000.00 | 640,000.00 |
| மீகஹதென்ன மாவட்ட வைத்தியசாலை | 74,000.00 | 2,500.00 | 740,000.00 |
| இங்கிரிய மாவட்ட வைத்தியசாலை | 76,000.00 | 2,500.00 | 760,000.00 |
| பதுரலிய அரச வைத்தியசாலை | 63,000.00 | 2,000.00 | 630,000.00 |
| புலத்சிங்கள அரச வைத்தியசாலை | 48,000.00 | 2,000.00 | 480,000.00 |
| கோணதுவ அரச வைத்தியசாலை | 33,000.00 | 1,500.00 | 330,000.00 |
| கட்டுகஹஹேன அரச வைத்தியசாலை | 50,000.00 | 2,000.00 | 500,000.00 |
| நேபொட அரச வைத்தியசாலை | 41,000.00 | 1,500.00 | 410,000.00 |
| கல்பாத்த அரச வைத்தியசாலை | 50,000.00 | 2,000.00 | 500,000.00 |
| தொடங்கொட அரச வைத்தியசாலை | 35,000.00 | 1,500.00 | 350,000.00 |
| ஹல்தொட்ட அரச வைத்தியசாலை | 31,000.00 | 1,500.00 | 310,000.00 |

03. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வருவனவற்றின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

✓ தேசிய அடையாள அட்டையின் சான்றுபடுத்திய பிரதி
✓ வதிவிடம் தொடர்பான கிராம சேவையாளரின் சான்றிதழ்
✓ ஒப்பந்தத்தை தொடர்ச்சியாக செய்துகொண்டு செல்வதற்கு விண்ணப்பதாரரின் 03 வருட கால அனுபவம் தொடர்பாக பிரதேச கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன்)
✓ குறித்த வைத்தியசாலைக்கு நிர்ணயிக்கப்பட்ட பெறுமதிக்குச் சமனாக பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொண்ட பொது 170 சொத்துச் சான்றிதழ்

04. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தை செலுத்தியதன் பின் விலைக்கோரல் ஆவணங்களை 2024-10-08ஆம் திகதி முதல் 2024-10-29ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொள்வனவு செய்யலாம். இலவசமாக குறித்த விலைக்கோரல் மாதிரிப் படிவங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களினுள் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. சகல விலைமனுக்களையும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து பின் அவ்விரு உறைகளையும் வேவொரு உறையிலிட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''சமைத்த உணவு வழங்குதல் - 2025 ...................... வைத்தியசாலை'' எனக் குறிப்பிட்டு 2024-10-30ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மாவட்டச் செயலகக் கட்டிடம், த.பெ. இல. 29, களுத்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

06. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

07. மேலதிக விபரங்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 034-2228811 அல்லது 034-2222367 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
